# 11th Political Science Book Back Questions TM - New Book

## Do You Know Box Content

Download Winmeen App

### மேல்நிலை முதலாம் ஆண்டு – அரசியல் அறிவியல்

### அலகு – 1 அரசியல் அறிவியலின் அறிமுகம்

அரசியல் என்பது அனைவருக்கும் இன்றியமையாததாகும்.

**மகிழ்ச்சி பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்து:** மகிழ்ச்சி என்பது வாழ்க்கையின் ஒரு முக்கியமான அம்சம் என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். ஒரு மனிதன் தற்காலிக இன்பத்தை தேடுவதில் நேரத்தை செலவிடுவதைக் காட்டிலும், நிரந்தரமான மகிழ்ச்சியை தேடுவதே சிறந்தது என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். ஒருவனின் மகிழ்ச்சி என்பது பொருள் அடிப்படையிலானவற்றில் இல்லை என்பதும் அவனுடைய முழுமையான திறமை மற்றும் உண்மையான தன்மையை அறிந்து கொள்வதில் தான் இருக்கிறது என்பதும் அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். சுருங்கக் கூறின் மகிழ்ச்சி என்பது ஒருவனின் உள்ளேயே இருக்கிறதே தவிர வெளியில் இல்லை என்பது அவரின் கருத்து. அரிஸ்டாட்டிலின் புகழ்பெற்ற கருத்தாக்கம் ஒன்று பின்வருமாறு "மனிதனின் உயிர்வாழ்தலின் நோக்கம் மற்றும் பொருளே மகிழ்ச்சியை தேடுவதேயாகும்".

இந்திய அளவில் திருக்குறளை எழுதிய திருவள்ளுவரை நாம் முதல் அரசியல் சிந்தனையாளர்களில் ஒருவர் எனக் கருத முடியும். பொ.ஆ.மு.300–இல் கௌடில்யரால் எழுதப்பட்ட அர்த்தசாஸ்திரம் என்ற நூல் மிகவும் பழமையான நூலாக இருந்தாலும் அது "அரசியல் பொருளாதாரம்" என்பதில் அதிகம் கவனம் செலுத்துகிறது. ஆனால் திருவள்ளுவரின் திருக்குறள் அதிகமாக அரசியல் ஆளுமையைப் பற்றி பேசுகிறது.

பொ.ஆ.மு.300–இல் வடஇந்தியாவை ஆண்ட சந்திர குப்த மௌரியர் என்பவரின் முதலமைச்சராக இருந்தவர்தான் கௌடில்யர். அவர் எழுதிய நூலின் பெயர்தான் அர்த்த சாஸ்திரம். சமஸ்கிருதத்தில் அர்த்தம் என்றால் "பொருள்" சாஸ்திரம் என்றால் "அறிவு" சுருக்கமாக கூறினால் அர்த்தசாஸ்திரம் என்பது ஒரு அரசியல் பொருளாதார நூல் ஆகும்.

திருக்குறளில் இருந்து நாம், அரசின் கூறுகள், இலட்சிய அரசின் தன்மைகள், நல்ல அரசரின் குணக்கூறுகள், அமைச்சர்களுக்கான தகுதிகள், அரசு அலவலர்களை தேர்ந்தெடுக்கத் தேவையான தகுதிகள் அதிகார ஒப்படைப்பு போன்ற பலவற்றினை அறிய முடிகிறது. திருக்குறளில் அரசு, மற்றும் அரசன் ஆகியோரின் தன்மைகள் மற்றும் பண்பு நலன்கள் பற்றி இறைமாட்சி என்ற ஒர் அதிகாரம் முழுவதும் எழுதப்பட்டுள்ளது.

"படைகுடி கூழ்அமைச்சு நாட்பரண் ஆறும்

உடையான் அரசருள் ஏறு" (குறள் – 381) – என்று கூறுகிறார். அதாவது ஒரு அரசன் சிறந்து விளங்குவதற்கு ஆறு அடிப்படைக்கூறுகள் அமைந்திருக்க வேண்டுமென திருவள்ளுவர் கூறுகிறார்.

1. சிறந்த படை.

2. நல்ல குடிமக்கள்,

3. நல்ல மூலவளங்கள்

4. அறிவார்ந்த அமைச்சர்கள்.

5. சிறந்த பாதுகாப்பு மிக்க அரண்கள்.

6. நட்பு நாடுகளின் ஆதரவு ஆகிய ஆறும் சிறந்த அரசனுக்கு வேண்டுமெனக் கூறுகிறார்.

அதே போல அரசராக இருக்க வேண்டுபவர் என்னென்ன குணநலன்களைப் பெற்றிருக்க வேண்டுமென திருவள்ளுவர் கூறுகிறாறெனில்,

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்

எஞ்சாமை வேந்தர்க்கியல்பு" (குறள் – 382)

ஓர் என்பவன்,

1. துணிவு; 2. ஈகைக்குணம்; 3. பொது அறிவு; 4. செயலூக்கம், அவசியம் என்று கூறுகிறார்.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்

நீங்கா நிலனாள் பவர்க்கு" (குறள் – 383)

நிலத்தை ஆளும் அரசனுக்கு,

1. காலம் தாழ்த்தாத தன்மை.

2. கல்வியுடைமை.

3. நல்ல காரியங்களை செய்வதற்கான துணிவுடைமை ஆகிய மூன்றும் அவசியமான குணம் என்கிறார் திருவள்ளுவர்.

இதுபோலவே ஒரு நாடு சிறந்த நாடாக விளங்குவதற்கு என்னென்ன தன்மைகள் அமைந்திருக்க வேண்டுமென்பதனை,

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்

சேராதியல்வது நாடு" (குறள் – 734)

என்ற குறளில் உண்ண உணவில்லாத பஞ்சநிலை, தீராத பல நோய்கள், எப்போதும் தாக்குவதற்கு தயாராக இருக்கும் பகை நாடுகள் ஆகிய மூன்றும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த

வகுத்தலும் வல்லது அரசு" (குறள் – 385)

என்ற குறளில் வருவாயை அடையாளம் காணுதலும், அதனை திறமையாக திரட்டுவதும், திரட்டிய வருவாயை அரசுக்கருவூலத்தில் பாதுகாத்து வைப்பதும், அவ்வாறு பாதுகாத்த செல்வத்தை மக்களுக்கு முறையாக வழங்குதலும் செய்ய வல்லது தான் சிறந்த அரசு என்று வள்ளுவர் கூறுகிறார்.

**அதிகாரம்:**

எல்லா சமூகத்திலும் ஒரு குறிப்பிட்ட அளவிலான அதிகாரம் இருக்கிறது. அது ஒரே நேரத்தில் ஒருவராலோ அல்லது ஒரு குழுவினாலோ கையாளப்படுகிறது. – காரல் மார்க்ஸ்

அதிகாரம் என்பது ஒரு குழு மற்றொரு குழுவின் செயல்பாடுகள் மற்றும் போக்குகளைத் தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கும் உறவுமுறையே ஆகும். – டேவிட் ஈஸ்டன்

அதிகாரம் மேலும் அதிகாரங்களை உருவாக்கி கொள்கிறது. அதிகாரமே உயர்குடியினவாதத்தின் மைய கோட்பாடாகும். – ராபர்ட் மிச்செல்ஸ்

அரிஸ்டாட்டில் மக்களாட்சியை அரசாங்க முறை என்றார். இருப்பினும் மக்களாட்சியை அரிஸ்டாட்டில் கும்பலாட்சி என்ற பொருளில் புரிந்து கொண்டார். தூய அரசியல் அமைப்பு என்பது இதை விட மிகவும் சிறந்த மற்றும் நிலையான அரசாங்க முறை என நினைத்திருப்பார்.

தூய அரசியல் அமைப்பு (Polity): தூய அரசியல் அமைப்பில் மேலான அதிகாரம் என்பது பெருவாரியாக மக்களிடம் இருப்பதுடன் அது பொது நன்மைக்காகப் பயன்படுகிறது.

அரசியல் அறிவியல் என்பது அரசின் தோற்றம், மேம்பாடு, நோக்கம் மற்றும் அதன் பல்வேறு அரசியல் பிரச்சனைகளைப் பற்றி அறிந்து கொள்வதாகும். – கேரிஸ் (Garris). அரசியலைக் கற்றல் என்பது ஒருங்கிணைக்கப்பட்ட ஓர் அரசுடன் மக்களின் வாழ்க்கைக்கு உள்ள தொடர்பினை படிப்பதாகும் – ஹெரால்ட் லாஸ்கி (Harold Laski). அரசியல் அறிவியல் என்பது அரசாங்கம் மற்றும் அரசியல் பொருளாதாரம் என்பவைகளை வளம், உயிரியல் வாழ்க்கை, இயற்கணிதம், வரைகணிதம், விண்வெளி போன்றவற்றோடு தொடர்புபடுத்தி படிப்பதாகும் – சீலே (Seeley). அதிகாரம் வடிவமைத்து பங்கிடப்படுவதை அனுபவ விசாரணை செய்வதே அரசியல் அறிவியல் ஆகும் – ஹெரால்ட் லாஸ்வெல்(Harold Lasswell). அரசியல் அறிவியல் என்பது கடந்த காலத்தை வரலாற்று ரீதியாகவும், நிகழ் காலத்தினை பகுப்பாய்வு ரீதியாகவும், எதிர்காலத்தினை நன்னெறி ரீதியாகவும் படிக்க உதவும் ஒரு பாடமாகும் – கெட்டல் (Gettel). ஒரு சமுதாயத்தின் எல்லைக்குள் ஒரு நகரத்திற்கோ, ஒரு அரசுக்கோ, ஒரு தேசத்திற்கோ அந்த சமுதாயத்தில் நிலவும் பற்றாக்குறையான மனிதவளம், பொருளியல் வளம் போன்றவற்றினை மனித தேவைகளுக்கும், மனித விருப்பங்களுக்கும் ஏற்ப முறைப்படுத்தி வழங்கும் செயல்முறையே அரசியல் ஆகும் – டேவிட் ஈஸ்டன் (David Easton).

"எதிர்காலத்தினை நம்பிக்கையோடு சந்திப்போம்" "Tryst with Detiny"

ஜவஹர்லால் நேருவின் வரலாற்று புகழ் மிக்க உரையான "எதிர்காலத்தினை நம்பிக்கையோடு சந்திப்போம்" என்ற உரை குறித்து 14.08.1947 அன்று இந்து நாளிதழில் வெளியான செய்தி பின்வருமாறு – நீண்ட வருட காலமாக நாம் நம்பிக்கையோடு காத்திருந்த எதிர்காலம் இப்போது நமக்கு முழுமையாக கிடைக்கவில்லை எனினும் மிகவும் கூடுதலாகவே உறுதிமொழியாக வந்து வாய்ந்துள்ளது" என துவங்கிய பண்டித ஜஹர்லால் நேரு அரசமைப்பு நிர்ணய சபையில் அன்றிரவு பதவியேற்கவிருந்த உறுப்பினர்களுக்கான உறுதிமொழி தீர்மானத்தின் போது பின்வருமாறு கூறுகிறார். "உலகமே உறங்கி கொண்டிருக்கும் போது இந்தியா இந்த நள்ளிரவில் விழித்தெழுந்திருக்கிறது. பழமையிலிருந்து புதுமை நோக்கி பயணிக்கத் தயாராகிவிட்டோம். நீண்ட காலம் ஒடுக்கி வைக்கப்பட்ட ஒரு தேசத்தின் ஆன்மா உயிர்ப்பித்திருக்கிறது. இந்த சமயத்தில் இந்திய தேசத்திற்கும், இந்திய மக்களுக்கும் சேவை செய்ய நாம் தியக உணர்வுடன் சில உறுதிமொழிகளை எடுத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம்". "சுதந்திரமும், அதிகாரமும் நமக்கு பொறுப்புணர்வினை அதிகமாகக் கொண்டு வந்துள்ளது. அந்த பொறுப்புணர்வு இறையாண்மையுள்ள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இறையாண்மை கொண்ட இந்த அவையிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்த சுதந்திரத்தை நாம் பல வலிகளையும், துன்பங்களையும், துயரங்களையும் தாங்கி, கனத்த இதயத்துடனேயே பெற்று இருக்கிறோம். இவற்றுள் பல வலிகள் இன்னும் தொடரவே செய்கின்றன. எப்படியிருப்பினும் கடந்த காலம் முடிவுக்கு வந்து புதிய எதிர்காலம் நம் கண் முன் வந்துள்ளது. இந்தியாவுக்கான நமது சேவை கோடிக்கணக்கான இந்திய மக்களை அவர்களின் வறுமை, அறியாமை, பிணி, சமத்துவமின்மை ஆகியவைகளிலிருந்து மீட்டெக்க செய்யும் சேவையை பொறுத்தே அமையும். இந்த தலைமுறையின் மிகச்சிறந்த மனிதர்களாக நாம் வாழ விரும்பினால் இந்தியர்கள் ஒவ்வொருவரின் கண்களில் இருந்து வழியும் கண்ணீரை துடைப்பதற்கு முன் வரவேண்டும். அது நமது சக்திக்கு அப்பாற்பட்டு கூட இருக்கலாம். கண்ணீரும். துன்பங்களும் தொடரும் வரை நமது பணிகளும் ஓயப்போவது கிடையாது. ஆகவே நம் கனவுகளை நனவாக்க நாம் மேன்மேலும் கடினமாக உழைக்க வேண்டும். இக்கனவுகள் இந்தியாவுக்கானது மட்டுமல்ல, உலகிற்கானது, உலகின் அனைத்து தேசங்கள் மற்றும் மக்கள் ஒன்றாக இருப்பதால் தனித்து இயங்குவதை கற்பனை கூட செய்ய முடியாது. அமைதி என்பது பிரிக்க முடியாதது. சுதந்திரமும் அது போலத்தானே, தற்பொழுது வளமும் அப்படியே ஆகும்.

பேரழிவும் அப்படியே இருப்பதால் இந்த ஒரே உலகில் அவற்றினை தனித்தனி பாகங்களாகப் பிரிக்க முடியாது".

**அரசியல் அறிவியல்**: அரசு அரசாங்கம் மற்றும் அரசியல் பற்றிய அறிவியல் பூர்வ படிப்பே அரசியல் அறிவியல் எனலாம். அரசியல் அறிவியல் என்பது அனைத்து விடைகளையும் தன்னகத்தே கொண்ட முழு நிறைவான அறிவியலாக இல்லை. அமெரிக்க அரசியல் அறிவியல் சித்தனையாளர்களின் அறிவியல் பூர்வ அணுகு முறைகளுக்குப் பிறகுதான் "அரசியல் அறிவியல்" எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டது. எனினும் தூய அறிவியல் பாடங்களான இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற பாடங்களுக்கு இணையாக இந்த அரசியல் அறிவியல் பாடத்தினைக் கருத முடியாது. ஆகவே, மனித நடத்தையைப் பற்றியதாக இருப்பதால் மற்றொரு புறத்தில் அரசியல் அறிவியல் என்பது அரசு மற்றும் அரசாங்கத்தைப் பற்றிய அறிவியலாகும் என வாதிட்டனர். அரசியல் அறிவியல் பாடத்தினை ஓர் சமூக அறிவியல் பாடம் என்று அழைப்பது தான் பொருத்தமானதாக இருக்கும்.

நீ யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். நீ எப்படியாக வேண்டுமானாலும் மாற விரும்பலாம் நீ அரசியலின் மீது ஆர்வம் இல்லாமல் கூட இருக்கலாம். ஆனால் அரசியல் உன் மீது ஆர்வமாக இருக்கிறது! – மார்ஷல் பெர்மன் (marshall Bermen)

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. "பாலிடிக்ஸ்" என்ற வார்த்தை "பொலிஸ்"(Polis) சொல்லிலிருந்து வந்தது. இந்த "பொலிஸ்" என்ற சொல்லின் பொருள்

(அ) நகர அரசு (ஆ) காவல் படைகள் (இ) அரசியல் (ஈ) காவல் அரசு

2. "அரசியல் என்பது யார், எதனை, எப்போது, எப்படிப் பெறுகிறார்கள்" என்ற அரசியலின் மையக் கருத்தினைக் கூறியவர்.

(அ) ஹெரால்ட் லாஸ்கி (ஆ) ஹெரால்டு லாஸ்வெல்

(இ) சார்லஸ் ஈ மெர்ரியம் (ஈ) பிரான்க் குட்நவ்

3. டேவிட் ஈஸ்டனின் கருத்துப்படி அரசியல் என்பது

(அ) விழுமியங்களை அதிகாரபூர்வமாக பங்கீடு செய்வதாகும்

(ஆ) மூலவளங்களை அதிகாரபூர்வமாக பங்கீடு செய்வதாகும்

(இ) அதிகாரத்தினை அதிகாரபூர்வமாக பங்கீடு செய்வதாகும்

(ஈ) வலிமையை அதிகார பூர்வமாக பங்கீடு செய்வதாகும்

4. இந்திய அளவில் மிகப்பழமையான அரசியல் சிந்தனையாளர் என யாரைக் கூறலாம்?

(அ) கௌடில்யர் மற்றும் திருவள்ளுவர் (ஆ) வால்மீகி மற்றும் வராகமிகிரர்

(இ) சரகர் மற்றும் சுசுருதர் (ஈ) வியாசர் மற்றும் ஆரியபட்டர்

5. "சட்ட அங்கீகாரம்" என்ற சொல் எந்த கருத்தாக்கத்துடன் தொடர்புடையது

(அ) சட்டப்படிப்பு (ஆ) அரசு மற்றும் அரசாங்கம்

(இ) சட்டப்படியான சொத்து உரிமை (ஈ) வலிமை மற்றும் அதிகாரம்

6. "அதிகாரம் அதிகாரத்தை ஈன்றெருக்கிறது என்றும் அதுவே உயர்குடியினவாதத்தின் மையக்கருத்தாக விளங்குகிறது" என்று கூறியவர்

(அ) ராபர்ட் மிட்செல்ஸ் (ஆ) ஹெரால்ட் லாஸ்கி

(இ) டேவிட் ஈஸ்டன் (ஈ) சார்லஸ் ஈ மெர்ரியம்

7. "அரசியல் அறிவியலின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?

(அ) அரிஸ்டாட்டில் (ஆ) சாக்ரடிஸ் (இ) பிளாட்டோ (ஈ) மாக்கியவல்லி

8. "மனிதன் இயற்கையில் ஒரு அரசியல் விலங்கு" என்று கூறியவர் யார்?

(அ) பிளாட்டோ (ஆ) ஜீன் போடின் (இ) அரிஸ்டாட்டில் (ஈ) மாக்கிய வல்லி

9. அரசியல் அறிவியலை மதம் சார்ந்த அணுகு முறையிலிருந்து செயலறிவிலான கூர்நோக்கலுடன் கூடிய மதச்சார்பற்ற பார்வைக்கு மாற்றியவர் யார்?

(அ) தாமஸ் ஹாப்ஸ் (ஆ) நிக்கோலோ மாக்கியவல்லி

(இ) ஜான் லாக் (ஈ) ஜெ.ஜெ.ரூசோ

10. "வரலாறு என்பது கடந்த கால அரசியல்" என்றும் "அரசியல் என்பது நிகழ்கால வரலாறு" என்றும் கூறியவர் யார்?

(அ) ஹெரால்ட் லாஸ்வெல் (ஆ) ஃப்ரீமேன்

(இ) சார்லஸ் ஈ மெர்ரியம் (ஈ) ஜான் மார்ஷல்

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (அ) நகர அரசு 2. (ஆ) ஹெரால்டு லாஸ்வெல் 3. (அ) விழுமியங்களை அதிகாரபூர்வமாக பங்கீடு செய்வதாகும் 4. (அ) கௌடில்யர் மற்றும் திருவள்ளுவர் 5. (ஈ) வலிமை மற்றும் அதிகாரம் 6. (அ) ராபர்ட் மிட்செல்ஸ் 7. (அ) அரிஸ்டாட்டில் 8. (இ) அரிஸ்டாட்டில் 9. (ஆ) நிக்கோலோ மாக்கியவல்லி 10. (ஆ) ஃப்ரீமேன்

## அலகு – 2 அரசு

அரசின் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டினை மூன்று முக்கிய ஒப்பந்தவியலாளர்கள் உருவாக்கினார்கள். அவ்மூவருமே மனிதர்கள் அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டியது அவசியம் என்பதை ஒப்புக் கொண்டனர். ஆனால் அககட்டுப்பாடு எந்த அளவில் இருக்க வேண்டும் என ஒவ்வொருவரும் தத்தமது வழியில் தீர்மானித்தனர். அம்மூவர் 1.ஹாப்ஸ், 2.லாக், 3.ரூசோ.

| அரசியல் சிந்தனையாளர் | மனிதனின் இயல்பு | இயற்கையின் நிலை | சமூக ஒப்பந்தம் |
|---|---|---|---|
| **ஹாப்ஸ்** | மனிதர்கள் ஒவ்வொருவரும் பிறரிடம் ஓநாய்களைப் போன்று பகைமையுடன் இருக்கக்கூடியவர்கள் | போர்ச்சூழல் | லெவியதான் (ஒற்றை ஆட்சியாளர்) |
| **லாக்** | மனிதனுக்கு முழுமையான சுதந்திரம் உண்டு | தனிமனிதச் சொத்துக்கள் பாதுகாப்பானதாக இல்லை | பொது நலக் கூட்டமைப்பு |

| | | | |
|---|---|---|---|
| **ரூசோ** | மனிதன் முழுமையான சுதந்திரம் கொண்டவன் ஆனால் அவன் ஒழுக்கக்கேடானவன் | பாதுகாப்பு மற்றும் அறநெறி கிடையாது | அரசு பொது விருப்பத்தின் வழி நடத்தப்படும் |

**<u>அரசு வரையறை</u>**: அரசு எனப்படுவது "குடும்பங்கள் மற்றும் கிராமங்கள் ஒன்றிணைந்து அவற்றின் நோக்கத்திற்காகவும், அவைகளின் மகிழ்ச்சியான, மரியாதைக்குரியதுமான வாழ்க்கை மற்றும் முழுமையான சுய சார்பு கொண்ட வாழ்க்கை முறையினை வாழ உதவும் ஓர் அமைப்பு அரசாகும்" என வரையறுத்தார் – அரிஸ்டாட்டில்

அரசு என்பது "பொதுவாக ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பினை ஆக்கிரமித்து வாழும் மிகப் பெரிய எண்ணிக்கையிலான மனிதர்களின் பெருந்திரள், தம்மிலும் எண்ணிக்கையில் குறைவாக இருக்கும் மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்துதலை நியாயப்படுத்தும் அமைப்பாகும்" – ஹாலந்து (Holland).

அரசினை வரையறுக்கும் போது "மனித வர்க்கத்தின் ஒரு குறிப்பிட்ட பங்கினர் ஒரு அமைப்பாக இருந்து செயல்படுவதே அரசு" என்கிறார் – பர்ஜெஸ் (Burgess).

"அரசு என்பது அரசாங்க வடிவில் தனிமனிதன் அல்லது சங்கங்கள் இணைவதாகும். ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் மீது அவர்கள் ஒன்றிணைந்து தங்களை அரசியல் ரீதியாக அமைத்துக்கொள்வது அரசு ஆகும்" – சிட்ஜ்விக் (Sidgwick).

அரசு என்பது "ஓர் மக்கள் கூட்டமானது வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் வசித்துக் கொண்டு, அவர்கள் வெளி சக்திகளுக்கு கட்டுப்படாமல் ஒரு முறையான அரசாங்கத்தைப் பெற்று தங்களுக்குள் ஏற்பட்ட இயல்பான கீழ்படிதலை அரசிற்கு செலுத்துதல்" என விளக்குகிறார் – கார்னர் (Garner).

"அரசு என்பது ஓர் நிலப்பரப்பில் அமைந்த சமுதாயமாகும். அது அரசாங்கம் மற்றும் குடிமக்கள் என பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு இடையேயான உறவுகள் மேன்மையான அதிகாரத்தை வலுக்கட்டாயமாக பயன்படுத்துவதன் மூலமாகத் தீர்மானிக்கப்படுகிறது" – லாஸ்கி (Prof. Laski)

பிளாட்டோவின் கருத்துப்படி ஒரு இலட்சிய அரசின் மக்கள் தொகை என்பது 5040 ஆகும். இந்த 5040 என்ற எண்ணிக்கையினை ஏன் அவர் தெரிவு செய்தார் தெரியுமா? இதற்கு முக்கிய காரணம் இந்த 5040 என்ற எண்ணை 1 முதல் 12 வரையிலான எந்த எண்ணாலும் வகுக்கலாம். உதாரணமாக, இந்த எண்ணினை 12–ல் வகுத்தால் மீதம் உள்ளது 2 என்ற எண் மட்டுமே! நெருக்கடியான காலங்களில் மக்களை சிறு சிறு குழுக்களாகப் பிரித்து அவர்களுக்குரிய தனித்தனி அறிவிப்புகள் தருவதற்கு வசதியாகவே இந்த 5040 என்ற இந்த மக்கள் தொகை எண்ணிக்கை பிளாட்டோவினால் தேர்வு செய்யப்பட்டது.

நிலப்பரப்பின் மீதான இறையாண்மையின் பெயரால் மக்கள் ஒரு அரசின் நிலப்பரப்பிலிருந்து மற்றொரு அரசின் நிலப்பரப்பிற்கு செல்வது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஒரு நாட்டில் இருந்து கொண்டு நீங்கள் இணையத்தைப் பயன்படுத்தி மற்றொரு நாட்டில் உள்ளவருடன் தொடர்பு கொள்ள முடியும். அரசின் பிரான உரிமையான இறையாண்மையின் பார்வையில், இதனை நீங்கள் எவ்வாறு காண்கிறீர்கள்? முகநூல் (Facebook), கீச்சகம் (Twitter) மற்றும் வலையொளி (YouTube) போன்ற சமூக வலைதளங்கள் சில நாடுகளில் ஏன் தடை செய்யப்படுகின்றன என்பதை ஆராயவும்.

| **அரசு** | **சமுதாயம்** |
|---|---|
| சமுதாயம் தோன்றிய பின்னரே அரசு என்ற அமைப்பு தோன்றியது | சமுதாயமானது அரசு தோன்றுவதற்கு முன்னரே தோன்றியது |

| | |
|---|---|
| அரசின் எல்லை வரையறுக்கப்பட்டது | சமுதாயமானது பரப்பெல்லை பரந்ததாகும். |
| அரசுக்கு ஒரு நிலையான நிலப்பரப்பு உண்டு | சமுதாயத்திற்கு என நிலையான நிலப்பரப்பு எதுவும் இல்லை |
| அரசு என்பது அரசியல் சார்ந்த அமைப்பாகும் | சமுதாயம் என்பது ஓர் சமூக அமைப்பாகும் |
| அரசிற்கு சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் உள்ளது | சமுதாயத்திற்கு அத்தகைய அதிகாரங்கள் எதுவும் இல்லை |
| **வேறுபாடுகள்** | |
| அரசு என்பது மக்கள் தொகை, நிலப்பரப்பு, அரசாங்கம் மற்றும் இறையாண்மை ஆகிய நான்கு கூறுகளைக் கொண்டதாகும். | அரசாங்கம் என்பது அரசின் நாக்கு கூறுகளில் ஒன்றாகும் |
| அரசு மூல அதிகாரங்களை பெற்றதாகும் | அரசாங்கத்தின் அதிகாரங்கள் அரசிடமிருந்து பெற்றவையாகும் |
| அரசு என்பது நிரந்தரமானது என்பதுடன் என்றென்றைக்கும் நீடித்திருப்பதாகும் | அரசாங்கம் என்பது தற்காலியமானதாகும். மக்கள் விருப்பத்தின் பேரில் அரசாங்கங்கள் மாற்றப்படலாம் |
| அரசு என்பது காண முடியாததும், புலனாகாததும் ஆகும் | அரசாங்கம் என்பது உறுதியானது மற்றும் காணக்கூடியது |

**பணிகள்**: இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு பணிகள். பொருளாதார பணிகள், அத்தியாவசிய சேவைகளை வழங்குதல்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. "அரசு" என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்திய அரசியல் அறிஞர் யார்?

(அ) நிக்கோலோ மாக்கியவல்லி (ஆ) பிளாட்டோ (இ) அரிஸ்டாட்டில் (ஈ) லாக்

2. "லெவியதான்" என்ற நூலை எழுதியவர் யார்?

(அ) ஹாப்ஸ் (ஆ) லாக் (இ) ரூசோ (ஈ) மார்கந்தோ

3. கீழ்வருபவைகளில் எது அரசிலுள்ள குடிமக்களின் தகுதியை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக கருதப்படுகிறது?

(அ) நிலப்பரப்பு (ஆ) அரசாங்கம் (இ) இறையாண்மை (ஈ) மக்கள் தொகை

4. கீழ்வருபவைகளில் எது அரசின் அதிகாரத்துவத்தை கட்டுப்படுத்தும் அதிகாரமாக கருதப்படுகிறது?

(அ) அரசமைப்பு (ஆ) மதம் (இ) நீதிமன்றத்தீர்ப்பு (ஈ) மக்கள்

5. "நிலப்பரப்பின் மீதான இறையாண்மை அல்லது அரசின் இறையாண்மை என்பது அதன் எல்லைக்குட்பட்ட பகுதி அனைத்திற்கும், வெளிநாடுகளின் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையான சுதந்திரம் அடைவது என்பதே நவீன அரசுகளில் வாழ்வின் அடிப்படைக் கொள்கையாகும்" என்று கூறியவர்.

(அ) எலியட் (ஆ) போடின் (இ) ஆஸ்டின் (ஈ) மாக்கியவல்லி

6. கீழ்க்கண்டவர்களில் "நவீன இறையாண்மை கோட்பாட்டின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?

(அ) ஜீன் போடின் (ஆ) ஹியுகோ குரோஹியஸ் (இ) ஆஸ்டின் (ஈ) மாக்கிய வல்லி

7. கீழ்வருபவைகளில் எது நவீன அரசின் பணிகளை சார்ந்தது அல்ல?

(அ) இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு (ஆ) பொருளாதார பணிகள்

(இ) அத்தியாவசிய சேவைகளை வழங்குதல் (ஈ) மதக் கடமைகள்

8. தமிழக அரசாங்கத்தின் எந்த தலைசிறந்த திட்டம் இந்தியாவின் பிற மாநிலங்களில் பின்பற்றப்படுகிறது?

(அ) மதிய உணவு திட்டம் (ஆ) மழைநீர் சேகரித்தல்

(இ) தாலிக்குத் தங்கம் திட்டம் (ஈ) பள்ளி மாணவர்களுக்கான மிதிவண்டி

9. இந்தியாவின் அரசமைப்பில் மக்கள் நல அரசு பற்றிய சிந்தனையை உள்ளடக்கிய பகுதி

(அ) பகுதி IV (ஆ) பகுதி III (இ) பகுதி I (அ) பகுதி II

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (அ) நிக்கோலோ மாக்கியவல்லி 2. (அ) ஹாப்ஸ் 3. (அ) நிலப்பரப்பு 4. (அ) அரசமைப்பு 5. (அ) எலியட் 6. (அ) ஜீன் போடின் 7. (ஈ) மதக் கடமைகள் 8. (அ) மதிய உணவு திட்டம் 9. (அ) பகுதி IV

## அலகு – 3 அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் பகுதி – I

**இறையாண்மை**: "இறையாண்மை என்பது ஒட்டு மொத்த, மற்றும் தடையில்லாத அரசின் அதிகாரமாகும். மேலும் அதீத கட்டளைத்தன்மை உடையதாகவும் காணப்படுகிறது" – ஜீன் போடின் (Jean Bodin).

ஓர் மரமானது தான் முளை விடுவதை மாற்றித் தர முடியாததைப் போன்று இறையாண்மையையும் மாற்றித் தர இயலாது. இது ஓர் மனிதன் தன்னை அழித்துக் கொள்ளாமல் தனது உயிர் அல்லது ஆளுமையை மாற்றித் தர இயலாததைப் போன்றதாகும். – லைபர்.

மக்கள் இறையாண்மை எனப்படுவது பெரும்பான்மை வாக்காளர்களின் அதிகாரமாகும். மேலும் இவ்வகை அதிகாரமானது, வாக்குரிமை செயல்படக்கூடிய நாட்டில் வாக்காளர்கள் பல்வேறு வழிமுறைகளின் வாயிலாக வெளிப்படுத்தும் விருப்பமாகும். – கார்னர் (Dr.Garner).

**இறையாண்மையின் வகைகள்**: பெயரளவு மற்றும் உண்மையான இறையாண்மை, சட்ட இறையாண்மை, அரசியல் இறையாண்மை, மக்கள் இறையாண்மை.

| பெயரளவு மற்றும் உண்மையான இறையாண்மை | சட்ட இறையாண்மை | அரசியல் இறையாண்மை | மக்கள் இறையாண்மை |
|---|---|---|---|
| அ) ஆதிகாலத்தில் பல அரசுகளில் முடியாட்சியே இருந்தது. மன்னர்கள் உண்மையான இறையாண்மையைப் பெற்று ஆண்டு வந்தனர். | அரசின் அதிகாரத்துவமானது இறுதிக் கட்டளைகளை வெளியிட சட்டப்படியான அதிகாரம் உண்டு | பிரதிநிதித்துவ மக்களாட்சியில் அரசியல் இறையாண்மை என்பது ஒட்டுமொத்த மக்களையும் குறிப்பதாகும் | மக்கள் இறையாண்மை என்பது பொது மேலானவர்களாகப் பாவிக்கின்றது |
| ஆ) பிரெஞ்சு புரட்சி (1789) முடியாட்சியை முடிவுக்கு கொண்டு | சட்ட அதிகாரத்துவம் படைத்தவர்கள் மூலம் சட்டத்தை நிறைவேற்றி செயல்படுத்துவதால் இது | அரசியல் இறையாண்மை என்பது பொது மக்களைக் | ஆதிகாலங்களில் மக்கள் இறையாண்மையானது, முடியாட்சியின் ஏதேச்சதிகாரத்தை |

| | | | |
|---|---|---|---|
| வந்த ஒரு வரலாற்று நிகழ்வாகும் | சட்ட இறையாண்மை ஆகும் | கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் பெற்ற வர்க்கத்தை குறிப்பதாகும் | எதிர்க்கும் ஆயுதமாக விளங்கியது |
| இ) மன்னர் பெயரளவிலும், மந்திரிசபை உண்மையான இறையாண்மையையும் பெற்றிருந்தது | சட்ட இறையாண்மை எப்போதும் உறுதியாகவும், ஆற்றல் படைத்ததாகவும் முழுமையாகவும் இறையாண்மையாளரின் அதிகாரம் பெற்றதாகவும் விளங்குகிறது. | | |

இயக்குனரகமுறை ஆட்சியமைப்பினை தூக்கி எறிந்த பின்னர், நெப்போலியன் உண்மையான நடைமுறை இறையாண்மை (De–Facto) பெற்று விளங்கினார். ஸ்பெயினில், சட்ட இறையாண்மையை வேரோடு கலைத்து, ப்ராங்கோ நடைமுறை இறையாண்மையை (De–Facto) கையகப்படுத்தினார். அக்டோபர் 28, 1022–இல் நடந்த கறுப்புச் சட்டை புரட்சிக்கு பின்னர், முசோலினி சட்டப்பூர்வமான பிரதம அமைச்சராக அதிகாரம் பெற்றார். இவர் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றி அதன் மூலம் இத்தாலியை ஆட்சி செய்தார். நாடாளுமன்றம் சட்ட இறையாண்மையையம், முசோலினி நடைமுறை இறையாண்மையையும் (De–Facto) பெற்று ஆட்சி அரங்கேறியது. மேலும் ஹிட்லரும், ஜெர்மனியில் இச்செயல்பாட்டையே பின்பற்றினார். இவர் சட்ட இறையாண்மையை கையகப்படுத்தியதுடன் மட்டுமல்லாது. நடைமுறை இறையாண்மையைப் (De–facto) பெற்று ஆட்சி செய்தார்.

**ஜான் ஆஸ்டின் (1780–1859):** இங்கிலாந்து நாட்டை சார்ந்த சட்ட வல்லுனராக இவர் சட்ட இறைமைக்கு தன்னுடைய நீதிபரிபாலனமும் விரிவுரைகள் (1832) என்ற நூலில் விளக்கம் அளித்துள்ளார். இவர் ஒருமைவாத இறையாண்மை கோட்பாட்டின் தீவிர ஆதரவாளர் ஆவார்.

**இந்திய அரசமைப்பு மற்றும் இறையாண்மை**: இந்திராகாந்தி Vs ராஜ்நாராயணன் (1975) வழக்கில், "இந்தியா என்பது, இறையாண்மை பொருந்திய, மக்களாட்சிக் குடியரசு என்றும், இதுவே அடிப்படை கூறாக அரசமைப்பின்படி காணப்படுகிறது" என்றும் கூறியுள்ளது. மேற்கூறியவற்றின் மூலம், இந்திய அரசமைப்பின்படி இறையாண்மை என்பது அரசமைப்பின் முக்கிய அம்சமாக விளங்குவதுடன் முகப்புரையின் மூலமாக மக்களே இறையாண்மை மிக்கவர்கள் என்பது தெரிய வருகிறது. சுருங்கக்கூறின், இறையாண்மை என்பது அரசமைப்பைச் சார்ந்துள்ளது. மக்களே அத்தகைய அரசமைப்பின் இறுதி ஆதாரமாக விளங்குகின்றனர்.

சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாத கற்பனைவாத நம்பிக்கையாகத் தெரிந்தாலும் அதனைப் புறக்கணிக்கும்பட்சத்தில், அமைப்பெதிர்வாதமும், குழப்பமும் ஏற்பட்டு மக்கள் நல அரசு என்பது பொருளற்றதாகிவிடும். மாறுபட்ட பின்னணியிலிருந்து படிக்கும் மாவணர்களுக்கு சமத்துவம், சமத்துவமின்மை, சமூகம் பற்றிய கருத்துகளை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. பெண்கள், சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்டோர், மாற்று மொழி சார்ந்த குழுமங்கள், போன்றோரின் சமத்துவத்திற்கான போராட்டங்களின் தேவையினை கண்டறிதல். தேசத்தின் குடிமகனாக நீதியை நிலை நாட்டி சமத்துவத்தை உருவாக தனிமனிதர்களின் பங்கேற்பினை மேம்படுத்தவும், தேசிய இலக்காக இதை நிர்ணயிப்பது அவசியமாகும்.

பெருமளவில் இருக்கக்கூடிய ஏழை வர்க்கமும், சிறியளவில் வாழும் பணக்காரவர்க்கமும் உள்ள அரசில், அரசாங்கத்தின் செயல்பாடுகள் பணக்கார வர்க்கத்தின் உடைமைகளை பாதுகாக்கும் பொருட்டே அமையும் – ஹெரால்ட் லாஸ்கி (Herold Laski).

**சமத்துவத்தின் வகைகள்:** சமூக சமத்துவம், குடிமை சமத்துவம், அரசியல் சமத்துவம், இயற்கை சமத்துவம், பொருளாதார சமத்துவம்.

**சமூக சமத்துவம்**: சமமான வாய்ப்புகள், சலுகைகள்.

**குடிமை சமத்துவம்**: மதம் மற்றும் நம்பிக்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு இல்லாதிருத்தல்.

**அரசியல் சமத்துவம்**: அதிகாரத்துவத்தை அணுகுவதற்கான வாய்ப்பு. வாக்குரிமை

**இயற்கை சமத்துவம்**: இயற்கை உரிமைகள்.

**பொருளாதார சமத்துவம்**: செல்வ வளம்.

அகிம்சை அடிப்படையிலான அமெரிக்க குடிமை உரிமைகள் இயக்கத்தின் ஈடு இணையற்ற தலைவராக மார்ட்டின் லூதர்கிங் ஜீனியர் கருதப்படுகிறார். 1950 மற்றும் 1960–களில் சமூக நீதிக்காக கறுப்பினத்தவர்கள், அமெரிக்காவில் ஏற்படுத்திய சம உரிமைகளைப் பெறுவதற்கான புரட்சியே குடிமை உரிமைகள் இயக்கமாகும். இந்தியாவில் டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் துவங்கிய கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான இயக்கமானது வரலாற்று சிறப்புமிக்கதாக இந்தியாவில் கருதப்படுகிறது. மேலும் இவ்வியக்கம் சமூக சமத்துவத்திற்கான விதையாகும்.

செல்வ வளங்களில் உள்ள வேறுபாடுகளை அகற்றி, ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், நாட்டின் வளமைகளில் சமமான பங்கை அளிப்பது பொருளாதார சமத்துவமாகும் – ப்ரைஸ் பிரபு.

**பொருளாதார சமத்துவமின்மையும், அரபு நாடுகளில் எழுச்சியும்:** ஒரு நாட்டின் நிலைத்தன்மைக்கு வறுமை என்னும் பிரச்சனை அச்சுறுத்தலாக இருக்கிறது. உதாரணத்திற்கு துனீஷியாவில் நடைபெற்ற "மல்லிகைப்" புரட்சியில் ஆச்சரியப்படும் விதமாக, அந்நாட்டு மக்கள் ஏதேச்சதிகார ஆட்சியை எதிர்த்தது அரபு உலகத்தையே அதிர்ச்சிகுள்ளாக்கியது. 29 நாட்கள் நடந்த புரட்சியில், அந்நாட்டில் 23 வருடங்கள் ஆட்சி செய்ய "பென் அலி" என்பவரின் சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. முஹமத் புவாஸ்ஸி என்ற வேலைவாய்ப்பு கிடைக்காத மனிதரை காவலர்கள் துன்புறுத்தியதால் அவர் டிசம்பர் 17, 2010–ஆம் நாள், சிடி புஸித் என்ற துனீஷிய நகரத்தில் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டது ஒட்டுமொத்த புரட்சிக்கு வித்திட்டது. மக்கள் இதன் விளைவாக "மல்லிகைப் புரட்சியை" தொடங்கினார்கள். (மல்லிகை, துனிஷியாவின் தேசிய மலராகும்). பொருளாதார வாய்ப்பில்லாமை மற்றும் தொடர்ச்சியான காவலர் துன்புறுத்தலிலும் சிக்கித் தவித்த, அந்நகரத்து மக்கள், "ஒரு கையில் அலைபேசியையும், மற்றொன்றில் பாறையையும்" கொண்டு புரட்சியை மேற்கொண்டனர். கோபம், விரக்தி, இணக்கமற்ற சூழ்நிலை மற்றும் மக்களாட்சி கோரிக்கைக்கான ஒன்றிணைந்த இந்த அலையானது அரபு நாடுகள் அத்தனையையுமே உலுக்கியது. அரபு உலகத்தில் எழுந்த இந்த கிளர்ச்சிப் போராட்டம் மக்களாட்சிக்கும், சர்வாதிகாரத்திற்கும் இடையே நடந்த போராட்டம் மட்டுமல்ல. மாறாக இப்புரட்சியானது நியாயமற்ற பொருளாதார முறைமையை எதிர்த்து உண்டான மாபெரும் எதிர்ப்புப் புரட்சியாக அமைந்தது.–

"பசியோடு வாழும் ஒரு மனிதனுக்கு சுதந்திரம் என்ன நன்மையை அளிக்கமுடியும்? அவனால் அந்த சுதந்திரத்தை சாப்பிடவோ அல்லது குடிக்கவோ முடியாது – தாமஸ் ஹாப்ஸ்.

"தனியாருக்கு இடையேயான பரிமாற்றங்கள் அரசாங்க தலையீடுகளான கட்டுப்பாடு, சலுகைகள், வரி, மானியம் போன்றவை இல்லாமல் சுமூகமாகவும், சுதந்திரமாகவும் நடக்கும் பொருளாதார முறைமையே தாராளமயக் கொள்கை (Laisszr Faire) எனப்படும்"

**சமத்துவம் உரிமை (உறுப்பு 14–18)**: சட்டத்தின் முன் சமம் (உறுப்பு–14). மத அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு தடை (உறுப்பு–15). பொது வேலைவாய்ப்பில் சம வாய்ப்புரிமை (உறுப்பு–16). தீண்டாமை ஒழிப்பு (உறுப்பு–17). பட்டங்கள் ஒழிப்பு (உறுப்பு–18).

சுதந்திரம் என்பது அடக்குமுறையிலிருந்தும், வெளிகட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபெறும் விடுதலை நிலை ஆகும். "எஜீஸ்டெம் ஜெனரிஸ்" (இலத்தின் வார்த்தை) எனும் சட்ட மொழியில் கூறுவதுயாதெனில் "சுதந்திரம்" என்ற சொல் உறுப்பு 19–ல் உள்ள பொதுவான வார்த்தையாகும். உறுப்பு 21–ல் "சுதந்திரம்" என்ற சொல்லுக்கு முன்பாக "தனிப்பட்ட" என்னும் குறிப்பிட்ட வார்த்தை மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

மனிதர்கள் சிறப்பாக செயல்படும் வாய்ப்பிற்குரிய சூழ்நிலையை நிர்வகிப்பதே சுதந்திரம் ஆகும் – ஹெரால்ட் லாஸ்கி.

அனைவருக்குமே சுதந்திரத்தைப் பற்றிய தெளிவற்ற பார்வைகள் உண்டு. அது அவரவர்களின் விருப்பத்தைப் பொறுத்து அமைகிறது. பத்து நபர்கள் சுதந்திரத்தைப் பற்றி கருத்துரைக்கிறார்கள் எனும் போது ஒரு வேளை எந்த இருவேறு நபர்களும் அவர்களின் சுதந்திரத்தைப் பற்றிய வரையறையில் ஒன்றுவது இல்லை. மேலும் சுதந்திரத்தின் கருப்பொருளையும் அவர்கள் விரும்பிய வகையில் தெளிவாகக் கூறுவதில்லை. இந்தப் பொதுப்படையான அறிவியல் சார்பில்லாத சொற்பிரயோகத்தினையே இயற்கை சுதந்திரம் என்கிறோம் – ஆர்.என்.கில்ரீஸ்ட் (R.N.Gilchist).

ஒரு செம்மறியாட்டின் கழுத்தை பிடித்திருக்கும் ஓநாளை, மேய்ப்பவன் துரத்தியடிக்கிறான். அதற்காக அந்த செம்மறியாடு அவனுக்கு நன்றியை தெரிவிக்கிறது. ஆனால் அந்த ஓநாயோ, அவனை சுதந்திரத்தை ஒழிப்பவன் என குறை கூறுகிறது. ஏனெனில் குறிப்பாக அந்த ஓநாய்க்கும், கறுப்பு செம்மறியாட்டிற்கும் சுதந்திரம் தொடர்பான ஒத்த கருத்துகள் அமைவதில்லை. இதைப் போலவே தான் மனித இனத்திற்கு இடையேயும் தற்பொழுது சுதந்திரத்தைப் பற்றிய வேறுபாடுகள் உள்ளன – ஆப்ரகாம் லிங்கன் (Abharam Lincoln)

சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்துவதாலும், மேலும் சுதந்திரத்தின் மூலம் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதாலும் சுதந்திரத்திற்கு ஆபத்தான நிலை உருவாக்கப்படலாம். – ஜேம்ஸ் மாடிசன்.

சுதந்திரம் என்பது மனிதர்களை நோக்கி வருவது அல்ல, மாறாக மனிதர்களே சுதந்திரத்தை நோக்கி எழுச்சி கொண்டு செல்ல வேண்டும். மகிழ்வுடன் வாழ்வதற்காக சிரமப்பட்டு பெறப்படுகின்ற சுதந்திரம் ஓர் ஆசீர்வாதமாகும்.

சுதந்திரதேவி சிலைக்கென்று ஒரு குறிக்கோள் உள்ளது. அது விடுதலையை பற்றிய உலகளாவிய நினைவூட்டலாகவும், அமெரிக்க குடிமக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாகவும் அமைந்துள்ளது.

**அடிப்படை உரிமைகள்**: சமத்துவ உரிமை (உறுப்பு 14–18), சுதந்திர உரிமை (உறுப்பு 19–22), சுரண்டலுக்கு எதிரான உரிமை (உறுப்பு 23–24), மதச்சுதந்திர உரிமை (உறுப்பு 25–28), பண்பாடு மற்றும் கல்வி உரிமை (உறுப்பு 29–30), அரசமைப்பு பரிகார உரிமைகள் (உறுப்பு 32–35).

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. இறையாண்மையின் தந்தை எனக்கூறப்படுபவர் யார்?

(அ) போடின் (ஆ) ஆஸ்டின் (இ) பிளாட்டோ (ஈ) அரிஸ்டாட்டில்

2. ஒருமைவாத இறையாண்மை கோட்பாட்டை எடுத்துரைத்தவர்

(அ) ஆஸ்டின் (ஆ) ஹெகல் (இ) மரியம் (ஈ) வில்லோபை

3. மக்களாட்சியில் இறையாண்மையின் உறைவிடமாக இருப்பது

(அ) அரசு (ஆ) அரசாங்கம் (இ) மக்கள் (ஈ) ஊடகம்

4. "நான்தான் அரசு" என கூறியவர் யார்?

(அ) ஜேம்ஸ் II (ஆ) நெப்போலியன் I (இ) லூயிஸ் XIV (ஈ) பிஸ்மார்க்

5. "இரட்டை குடியுரிமை" காணப்படும் நாடு

(அ) அமெரிக்கா (ஆ) சீனா (இ) ஜப்பான் (ஈ) ஆஸ்திரேலியா

6. "இறையாண்மை என்பது பொது விருப்பத்தை உறைவிடமாகக் கொண்டதாகும்" என கூறியவர்

(அ) ரூசோ (ஆ) டி.எச்.கிரின் (இ) ஆஸ்டின் (ஈ) போடின்

7. "சுதந்திரம்" என்ற நூலை எழுதியவர்

(அ) ஜே.எஸ்.மில் (ஆ) லாக் (இ) ரூசோ (ஈ) போடின்

8. "சட்டத்தின் ஆட்சி" என்பதன் முக்கிய நோக்கம் உறுதிப்படுத்துவது என்னவெனில்

(அ) பத்திரிக்கை சுதந்திரம் (ஆ) குடிமக்களின் சுதந்திரம்

(இ) சுதந்திரமான நீதித்துறை (ஈ) மேற்கூறிய அனைத்தும்

9. இந்திய அரசமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகள் பெறப்பட்ட நாடு

(அ) அமெரிக்கா (ஆ) பிரான்ஸ் (இ) பிரிட்டன் (ஈ) ரஷ்யா

10. "மதம் என்பது போதை பொருள்" என கூறியவர் யார்?

(அ) மார்க்ஸ் (ஆ) கலிலியோ (இ) ரஸ்ஸல் (ஈ) பகத் சிங்

11. "மூலதனம்" என்ற நூலை எழுதியவர் யார்?

(அ) மார்க்ஸ் (ஆ) கிரபோட்கின் (இ) ஓவன் (ஈ) நேதாஜி

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (அ) போடின் 2. (அ) ஆஸ்டின், 3. (ஆ) அரசாங்கம் 4. (இ) லூயிஸ் XIV 5. (அ) அமெரிக்கா 6. (அ) ரூசோ 7. (அ) ஜே.எஸ்.மில் 8. (ஈ) மேற்கூறிய அனைத்தும் 9. (அ) அமெரிக்கா 10. (அ) மார்க்ஸ் 11. (அ) மார்க்ஸ்

## அலகு – 4 அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் – பகுதி II

இங்கிலாந்து சட்ட நிபுணரான ஏ.வி.டைசி "சட்டத்தின் ஆட்சி" என்ற கருத்தாக்கத்தினை 19–ஆம் நூற்றாண்டில் மேலும் பிரபலப்படுத்தியவர் ஆவார். அரசியல் அமைப்புச் சட்டத்தின் அறிமுகம் என்ற நூலில் கூறியுள்ளார். முற்கால தத்துவ ஞானிகளுக்கு "சட்டத்தின் ஆட்சி" என்னும் சொற்றொடர் அறிமுகமில்லாவிட்டாலும் அக்கருத்தாக்கத்தினை அரிஸ்டாட்டில் எனும் ஞானி "சட்டமே ஆளுமை புரிய வேண்டும்" என எழுதியுள்ளதை காணலாம்.

தனியார் சட்டத்தின் சம்பந்தப்பட்டவர்கள் தனி நபர்களாகவும், அவர்களுக்கு மேலாகவும், இடையேயும் ஓர் பாரபட்சமில்லாத நடுவராக அரசு இருக்கிறது. – ஹாலந்து (Holland)

**சட்டம் – நீதி ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு:** சமூகத்தில் நீதியை அடைவது சட்டத்தின் குறிக்கோள் ஆகும். நீதி என்பது எது சரி, எது தவறு, எது நல்லது, எது சமத்துவம் போன்றவைகளை விளக்கக்கூடிய ஓர் புலனாகாத கருத்தாகும். எனவே ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எது சரியானதோ அல்லது எது நியாயமானதோ அதைச் செய்வதாகும்.

**சட்டம் பற்றிய கருத்துகள்:**

சட்டம் என்பது இறையாண்மையின் கட்டளை. – ஜான் ஆஸ்டின் (John Austin)

நீதி நிர்வாகத்தை செயல்படுத்துவதற்காக அரசு அங்கீகரித்த விதிமுறைகளின் தொகுப்பே சட்டம் ஆகின்றது. – சல்மாண்டு

சட்டங்கள் இல்லையென்றால் அங்கே சுதந்திரம் இல்லை. – ஜான்லாக்

**சட்டத்தின் நோக்கங்கள்:** அடிப்படை மனித உரிமைகளை பாதுகாத்தல். நியாயத்தை ஊக்குவித்தல். சச்சரவுகளை தீர்த்தல். நீதியை ஊக்குவித்தல். ஒழுங்கையும், நிலைத்தன்மையையும் ஏற்படுத்துதல். விரும்பத்தகுந்த சமூக மற்றும் பொருளாதார நடத்தையை ஊக்குவித்தல். பெரும்பான்மை விருப்பத்தை பிரதிநிதித்துவப்படுத்துதல் (சில பிரச்சனைகளில்). சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

"தனிமனிதனின் நல்லொழுக்கத்திற்கு சரிசமமாக இயங்கக் கூடியது நல்லரசாகும். அரசியல் உடற்கூறில் ஏதேனும் ஒரு பகுதி பாதிக்கின்றபோது, ஒட்டுமொத்த உடலும் பாதிப்புறும்". – பிளாட்டோ (Plato)

சட்ட நிபுணர்களின் கருத்துக்கள் பெரும்பாலான நேரங்களில் சட்டமாகவே கருதப்படுகிறது. உதாரணத்திற்கு, இங்கிலாந்தில் கோக் மற்றும் ப்ளாக் ஸ்டோனின் விளக்கவுரைகள் (Coke and Blackstone), அமெரிக்காவின் ஸ்டோரி மற்றும் கென்ட் (Story and Kent), இந்தியாவின் விஜ்நானேஸ்வரா மற்றும் அபரார்கா (Vijnaneswaa and Aprarka) ஆகியோரின் விளக்கவுரைகளைக் கூறலாம். – அப்பாதுரை

நீதிநெறியானது நல்லியல்பு கடமைகளைப் பற்றியது, ஆனால் அரசால் இயற்றப்படும் சட்டமோ சட்டக் கடமைகளை பற்றியதாகும்.

**நீதிநெறி:** சமூக எதிர்மறைகளான மது, சூது, திருட்டு, வழிப்பறி, கொலை, கொள்ளை, போன்றவைகளை கட்டுப்படுத்தும் சமூக உறுப்புகள் நீதிநெறி எனப்படுகிறது. நீதிநெறிகள் தொடர்பான சட்டங்கள் எப்போதும் நிலையானவைகளாகும்.

சட்டமும், ஒழுங்கும் நீதியை நிலைநாட்டுவதற்காக இயங்குகிறது. இதை செய்ய தவறும்பட்சத்தில், சமூக வளர்ச்சியை தடுக்கும் ஆபத்தான தடுப்பு அணைகளாக இவை மாறுகின்றன. – மார்டின் லூதர்கிங் ஜீனியர்

தற்கால அரசானது, நீதிநெறி, மதம் மற்றும் இயற்கை சட்டத்தின் லட்சியவாத அடிப்படையில் நீடிக்கிறது எனலாம். அதே சமயத்தில் அரசு, தனது சுய பாதுகாப்பிற்காக மேற்குறிப்பிட்ட ஒன்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுகிறது. – கோட்ஸீ

வயதான பெற்றோர், முதியோர் பராமரிப்பு மற்றும் நலன் சார்ந்த சட்டம் (MWPSC Act) 2007–ல், முதியவர்கள் மற்றும் பெற்றோர் நலனுக்காக இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, முதியோருக்கு துரிதமாகவும், பயனுள்ளதாகவுமான நிவாரணத்தை வழங்க "பராமரிப்பு தீர்ப்பாயத்தினை" (Maintenance Tribunal) நிறுவியது. இச்சட்டத்தின்படி, பராமரிப்பு என்பது உணவு, உடுத்த உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ சிகிச்சையையும் உள்ளடக்கியது ஆகும். இச்சட்டத்தின் ஒரே நிபந்தனையாக, எவரெல்லாம் தன் சொந்த வருமானத்திலும், உடைமையின் மூலமும் தன்னை பராமரிக்க இயலாதவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் இப்பராமரிப்பின் கீழ் உட்படுவார்கள். இச்சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிக பட்ச பராமரிப்புச் செலவாக மாதம் ₹ 10,000 அளிக்க கட்டாயமாக்கப்பட்டது. பராமரிப்புத் தொகையானது, உரிமை கோருபவர்களின் தேவைகள் மற்றும் அவர்கள் இயல்பு வாழ்க்கையை வாழ்வதற்கான தேவைகளைப் பொருத்தும் அமைகிறது. பெற்றோர்களும், முதியோர்களும் அரசாங்கத்தின் இச்சலுகையை அனுபவிக்க, பராமரிப்பு தீர்ப்பாயத்தின் முன் பராமரிப்பு அதிகாரியிடம் தங்கள் விருப்பங்களை முறையிடலாம். இச்சட்டத்தின்படி, வழக்கறிஞர்கள், தீர்ப்பாயத்தின் முன் எவருக்காகவும் வாதாட இயலாது. முதியோர் நலனைப் பாதுகாக்கும் பொறுப்பில் இருக்கக்கூடிய யாரேனும்

நன்கறிந்தே அவர்களை கைவிடும்பட்சத்தில், ₹ 5,000 அபராதமோ அல்லது மூன்று மாதம் சிறை தண்டனையோ அல்லது மேற்கூறிய இரண்டு தண்டனையுமோ வழக்கப்படலாம்.

**உரிமைகளின் வகைகள்:** இயற்கை உரிமைகள், நீதிநெறி உரிமைகள், ஒப்பந்த உரிமைகள், சட்ட உரிமைகள், மனித உரிமைகள்.

ஜேம்ஸ் மேடிசன் இந்த "உரிமைகள் மசோதா"வை அறிமுகப்படுத்தினார். இது, அவர் 1776இல் வெளியிட்ட புகழ்பெற்ற வெர்ஜீனியா மனித உரிமைகள் பிரகடனத்தின் அடிப்படையில் அமைந்தது ஆகும். உரிமைகள் மசோதா என்பது இங்கிலாந்தின் மகாசாசனம் (Magna Carta) (1215) மற்றும் ஆங்கில உரிமைகள் மசோதா (1689) ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டது. – ஜேம்ஸ் மேடிசன்

அரசமைப்பு நிர்ணய சபையானது இந்திய அரசமைப்புச் சட்டத்தினை வரையறை செய்ய 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 20 நாட்கள் எடுத்துக்கொண்டது.

**அடிப்படை உரிமைகள்:** சமத்துவ உரிமைகள், மத உரிமைகள், பேச்சுரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமைகள், அரசமைப்புச் சட்ட பரிகார உரிமைகள், பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள்.

**அரசுக்கு ஆற்ற வேண்டிய கடப்பாடுகள்:** நண்பர்களுடன் விளையாடுதல், தேர்தல் நேரத்தில் வாக்களித்தல், சகோதர/சகோதரிக்கு கற்பித்தல், அரசுக்கு வரி செலுத்துதல், பொது பணியில் சேருதல், அவசர காலத்தில் இராணுவத்தில் பணிபுரிதல்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. எந்த உரிமை ஒருவர் தன்னுடைய கருத்தினை பொது வெளியில் தெரிவிக்க வழிவகை செய்கிறது?

(அ) சுதந்திர உரிமை (ஆ) கல்வி உரிமை

(இ) சுதந்திரமாக வெளிப்படுத்தும் உரிமை (ஈ) மத உரிமை

2. வாழும் உரிமை, சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகியவை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(அ) அரசியல் உரிமைகள் (ஆ) குடிமையியல் உரிமைகள்

(இ) சட்ட உரிமைகள் (ஈ) இயற்கை உரிமைகள்

3. உரிமைகளை பாதுகாத்து ஆதரிப்பதற்கான பன்னாட்டு மற்றும் தேசிய சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்பவை.

(அ) அடிப்படை உரிமைகள் (ஆ) உரிமைகள் மசோதா

(இ) இயற்கை உரிமைகள் (ஈ) மனித உரிமைகள்

4. அரசமைப்பு நிர்ணய சபையின் வரைவு குழு யாருடைய தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது?

(அ) Dr. பி.ஆர்.அம்பேத்கர் (ஆ) பண்டித ஜவஹர்லால் நேரு

(இ) சர்தார்வல்லபாய் பட்டேல் (ஈ) இராஜேந்திர பிரசாத்

5. சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்ற இரண்டு உரிமைகள் கண்டிப்பாக தேவைப்படும் ஆட்சி முறை

(அ) பொதுவுடைமை (ஆ) மக்களாட்சி (இ) முடியாட்சி (ஈ) வகுப்புவாதம்

6. நாட்டின் பாதுகாப்பு கருதி ஒருவரை தடுப்பு காவலில் வைப்பது.

(அ) ஆட்கொணர்வு ஆணை (ஆ) நீதிக்கட்டளை ஆணை

(இ) தடுப்புக்காவல் (ஈ) தடை ஆணை

7. உச்சநீதி மன்றத்தின் மூலம் குடிமக்களுக்கு அரசமைப்புச் சட்ட பரிகாரம் பெறுவதற்கு எந்த உறுப்பு வழிவகை செய்கிறது.

(அ) உறுப்பு 21 (ஆ) உறுப்பு 15 (இ) உறுப்பு 32 (ஈ) உறுப்பு 18

8. அனைவருக்கும் பொதுவான குடிமையியல் சிவில் சட்டம் என்பதை எதன் மூலமாக அடையாளம் காண்கிறோம்.

(அ) அடிப்படை கடமைகள் (ஆ) அடிப்படை உரிமைகள்

(இ) அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் (ஈ) மனித உரிமைகள்

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (இ) சுதந்திரமாக வெளிப்படுத்தும் உரிமை 2. (இ) சட்ட உரிமைகள் 3. (ஈ) மனித உரிமைகள் 4. (அ) Dr. பி.ஆர்.அம்பேத்கர் 5. (ஆ) மக்களாட்சி 6. (ஆ) நீதிக்கட்டளை ஆணை 7. (இ) உறுப்பு 32 8. (இ) அரசின் வழிகாட்டு நெறிமுறைகள்

## அலகு – 5 மக்களாட்சி

**மக்களாட்சி – தத்துவவாதிகளின் வரையறை:** மக்களாட்சி என்பது ஒரு மகிழ்ச்சியான அரசாங்க வகையாகும். இவ்வகை அரசில் எவ்வளவு குழப்பங்கள் இருந்தாலும் எந்த வித பாகுபாடுமின்றி அனைவரும் சமமாக நடத்தப்படுவதற்கும் அதன் மூலம் சமத்துவ சமுதாயத்திற்குமான வழி உள்ளது. – சாக்ரடீஸ் (Socrates)

ஓர் அரசின் மகிமையே அதன் மக்களாட்சியில் உள்ள சுதந்திரம்தான். எனவே மக்களாட்சியானது இயற்கையாகவே அரசில் சுதந்திரம் இருக்குமாறு உருவாக்கப்பட்டுள்ளது. – பிளாட்டோ (Plato)

ஓர் மக்களாட்சி அரசமைப்பின் அடித்தளமே சுதந்திரம் தான். மக்கள் இதை விரும்பக் காரணமே, இந்த அரசமைப்பில் தான் அனைவருக்கும் சமமான அளவில் சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கும். – அரிஸ்டாட்டில் (Aristotle)

மக்களாட்சி என்பது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் தளத்தில் வாழும் ஓர் நிதர்சனம்/மெய்மையாகும். – G.D. கோவார்டு கோல்

1. மக்களாட்சி என்பது மக்களால் நடத்தப்படும் அரசாங்கம், குறிப்பாக பெரும்பான்மை மக்களால் ஆகும்; 2. மக்களாட்சி அரசாங்கத்தில் மேலான அதிகாரம் மக்களிடம் இருக்கும். இந்த அதிகாரத்தை மக்கள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க பயன்படுத்துவர். இங்கு தேர்தல்கள் சீரான இடைவெளியிலும் மற்றும் சுதந்திரமாகவும் நடைபெறும். – தாமஸ் ஜெஃபரசன்

மக்களாட்சியே சமதர்மத்திற்கான பாதை ஆகும். – கார்ல் மார்க்ஸ் (Karl Marx)

மக்களாட்சி என்பது மக்களால் மக்களுக்காகவே மக்களாலான அரசாங்க முறை ஆகும். – ஆப்ரகாம் லிங்கன்

எளியோருக்கும் வலியோருக்கும் சம வாய்ப்பு வழங்குதல் மக்களாட்சியில் மட்டுமே நடைபெறும் என்பதே என் கருத்து. இது வன்முறையற்ற வழியில் மட்டுமே சாத்தியப்பட வேண்டும். – மகாத்மா காந்தி (Mahatma Gandhi) ராபர்ட் டாலின் கோட்பாட்டில் பின்பு ஒரு திருத்தம் செய்யப்பட்டது. அமெரிக்காவில் மக்களாட்சி செயல்படும் விதத்தை சிறப்பாக விவரிப்பதற்காக உருக்குலைந்த குழுவாட்சி என்ற கோட்பாட்டினை முன்னிறுத்த அந்த திருத்தத்தை ராபர்ட் டால் செய்தார்.

**நேபாள நாட்டில் ஏப்ரல் புரட்சியும், மக்களாட்சியும்:** ஏப்ரல் மாதம் 2006–ஆம் ஆண்டு ஏழு கட்சி கூட்டணி என்ற மக்களாட்சியை ஆதரிக்கின்ற தலைவர்கள் நேபாள தலைநகரான காட்மாண்டுவை சுற்றி ஏழு இடங்களில் எதிர்ப்பு கூட்டங்களை நடத்த மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். அதை ஏற்று கூடிய லட்சக்கணக்கான நேபாள நாட்டு மக்கள் எதேச்சாதிகார முடியாட்சியை முடிவுக்கு கொண்டு வரவும், முழுமையான மக்களாட்சியை கொண்டு வரவும் நேபாள நாட்டு முடியரசுடன் போராடத் தொடங்கினர். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இருந்த இந்த போராட்டம் அரசர் கியானேந்திராவை (King Gyanendra) பதவி விலக வைத்து மக்களாட்சிக்கு வழி வகுத்தது.

**பூடானில் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க மாற்றம்:** பூடானின் நான்காவது அரசர் ஜிக்மே சிங்யோ வாங்சக் (Jigme Singye Wangchuck) பூடானின் 20 மாவட்டங்களுக்குப் பயணம் செய்தார். ஒரு வரலாற்று சிறப்பு மிக்க மாற்றத்தை விளக்கவே அந்த பயணம். பூடானின் அரசர் அந்நாடு பரம்பரை முடியாட்சியிலிருந்து நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கு மாற வேண்டியதன் அவசியத்தை இந்த பயணத்தில் மக்களிடம் எடுத்துரைத்தார். அவர் 2006–ம் ஆண்டு, தான் 34 ஆண்டுகாலமாக அமர்ந்திருந்த அரியாசனத்தை துறந்தார். பூடான் நாடு நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கு மாறியது. அரசின் தலைவராக பூடான் மன்னரின் மகன் ஜிக்மே கேசர் நம்கெயில் வாங்சக் (Jigme Khesar Namgyel Wangchuck), பொறுப்பேற்றார். இப்பொழுது பூடான் நாடாளுமன்ற மக்களாட்சியை கொண்டுள்ளது மற்றும் அரசர் ஜிக்மே ஓர் அரசமைப்பிலான மன்னராவார்.

அரசமைப்பின் 73–வது மற்றும் 74–வது சட்ட திருத்தத்திற்குப் பிறகும் இந்தியாவின் சில கிராமங்களில் உள்ளாட்சித் தேர்தலே பல ஆண்டுகளாக நடைபெறாமல் உள்ளது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. மக்களாட்சி என்ற சொல்லின் பொருள்

(அ) மக்களின் ஆட்சி (ஆ) மக்களின் அதிகாரம் (இ) புரட்சி (ஈ) குழுவாட்சி

2. மக்களாட்சி என்பது

(அ) அரசாங்க வகை (ஆ) சட்டத்தின்படி ஆட்சி

(இ) அரசியல் அமைப்பு (ஈ) மக்களின் அதிகாரம்

3. மக்களாட்சி அடிக்கோடிட்டு காட்டும் கொள்கை

(அ) மக்களின் ஆட்சி (ஆ) அரசமைப்பின் படி ஆட்சி (இ) தேர்தல் (ஈ) ஆளும் விதி

4. சமூக மக்களாட்சி வலுவாக நம்புவது யாதெனில்

(அ) சமவாய்ப்பு மற்றும் சுதந்திரம் (ஆ) மனித உரிமைகள் (இ) சம தர்மம் (ஈ) சுதந்திரம்

5. நேரடி மக்களாட்சி இங்கு நடைமுறையில் உள்ளது

(அ) சுவிட்சர்லாந்து கூட்டாட்சி குடியரசு (ஆ) ரஷ்யா

(இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (ஈ) சீனா

6. பொருளாதார மக்களாட்சி எதனை முக்கிய அடிப்படையாகக் கொண்டுள்ளது.

(அ) பொருளாதார உரிமைகள் மற்றும் சமூக சமத்துவம் (ஆ) பணியிட மக்களாட்சி

(இ) தொழிலாளர் உரிமைகள் (ஈ) வேலைவாய்ப்பு உறுதி

7. தீவிர முன்னேற்றவாத மக்களாட்சியை முன்மொழிந்த முன்னோடி அரசியல் சிந்தனையாளர்

(அ) எம்.என்.ராய் (ஆ) நேரு (இ) காந்தி (ஈ) அம்பேத்கர்

8. தீவிர முன்னேற்றவாத மக்களாட்சி எதுவாக நம்பப்படுகிறது?

(அ) மக்களின் அதிகாரம் (ஆ) உள்ளூர் சமூகத்தின் ஆட்சி

(இ) சட்டத்தின் ஆட்சி (ஈ) பங்கேற்பு மக்களாட்சி

9. பாதுகாப்பு மக்களாட்சி எதனை அடிப்படையாக கொண்டுள்ளது?

(அ) சமத்துவம் (ஆ) சுதந்திரம் (இ) உரிமைகள் (ஈ) சமூக பாதுகாப்பு

10. மார்க்சிய கோட்பாடானது மக்களாட்சியை இந்த சமூக சூழலில் காண்கிறது.

(அ) சமூகம் (ஆ) சமூக குழு (இ) வர்க்க பகுப்பாய்வு (ஈ) முதலாளித்துவ வர்க்கம்

11. மக்களாட்சியின் எந்த கோட்பாடு முதலாளித்துவத்தின் வீழ்ச்சியை ஆதரித்து சமூகத்தின் புரட்சிகர மாற்றத்திற்கு அறை கூவல் விடுத்தது.

(அ) தொன்மை கோட்பாடு (ஆ) சமத்துவ கோட்பாடு

(இ) மார்க்சிய கோட்பாடு (ஈ) உயர்ந்தோர் குழாம்

12. பன்மைத்துவ அரசாங்கத்தின் மூலம் எதை ஏற்படுத்திய குறிப்பிட்ட நலன்களை பாதுகாக்கிறது.

(அ) சமூக சமநிலை (ஆ) போட்டி சமநிலை

(இ) பொருளாதார சமநிலை (ஈ) அரசியல் சமத்துவம்

13. இந்திய மக்களாட்சியின் சிறப்பம்சங்களுள் ஒன்று

(அ) குடிமக்களின் பங்கேற்பு (ஆ) நாடாளுமன்ற மக்களாட்சி

(இ) இரகசிய வாக்குச்சீட்டு (ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (அ) மக்களின் ஆட்சி 2. (அ) அரசாங்க வகை 3. (அ) மக்களின் ஆட்சி 4. (அ) சமவாய்ப்பு மற்றும் சுதந்திரம் 5. (அ) சுவிட்சர்லாந்து கூட்டாட்சி குடியரசு 6. (அ) பொருளாதார உரிமைகள் மற்றும் சமூக சமத்துவம் 7. (அ) எம்.என்.ராய் 8. (அ) மக்களின் அதிகாரம் 9. (ஈ) சமூக பாதுகாப்பு 10. (இ) வர்க்க பகுப்பாய்வு 11. (இ) மார்க்சிய கோட்பாடு 12. (ஆ) போட்டி சமநிலை 13. (ஆ) நாடாளுமன்ற மக்களாட்சி

## அலகு – 6 அரசாங்கத்தின் வகைப்பாடுகள்

**அரசாங்கத்தின் உறுப்புகள்**: சட்டமன்றம், செயலாட்சி, நீதிமன்றம்.

| கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலைகள் (குடியரசுத் தலைவர் முறை) ஐக்கிய அமெரிக்க குடியரசு – Checks and Balances (Presidential form) | | |
|---|---|---|
| செயலாட்சிப் பிரிவு (குடியரசுத் தலைவர் சட்டங்களைச் செயல்படுத்துகிறார்) | சட்ட மன்றப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள்:<br>சட்டங்களை முன்மொழியலாம். சட்டங்களை ரத்து செய்தல் காங்கிரசின் சிறப்புக் கூட்டத் தொடர்களுக்கு அழைக்கலாம். நியமனங்கள் செய்தல். வெளிநாட்டுனான | நீதித்துறை பிரிவின் மீதான கட்டுப்பாடுகள்:<br>கூட்டாட்சி நீதிபதிகளை நியமிக்கிறார். கூட்டாட்சியிலுள்ள குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குதல். |

| | | |
|---|---|---|
| | உடன்படிக்கைகளுக்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடுதல் | |
| சட்டமன்றப் பிரிவு (காங்கிரஸ் சட்டங்களை வருவாக்குகிறது) | செயலாட்சிப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள்: குடியரசுத் தலைவரின் ரத்து அதிகாரங்களை மீறிச் செயல்படும் அதிகாரமிக்கதாகும். செயலாட்சியின் நியமனங்களை உறுதிசெய்தல். உடன்படிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்தல். போரை பிரகடனப்படுத்துதல். நிதி ஒதுக்கீடு செய்தல். குடியரசுத் தலைவரை பதவி நீக்க நடைமுறையின் மூலம் அகற்றுதல். | நீதித்துறைப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள்: கூட்டாட்சியின் கீழமை நீதிமன்றங்களை உருவாக்குதல். நீதிபதிகளைப் பதவி நீக்க முறையின் மூலம் அகற்றுதல். நீதித்துறையின் முடிவுகளை மீறும் அதிகாரம் கொண்டதுடன் சட்டத்திருத்தத்தினை முன்மொழியலாம். கூட்டாட்சி நீதிபதிகளின் நியமனங்களை அங்கீகரித்தல். |
| நீதித்துறைப் பிரிவு (உச்ச நீதிமன்றமானது சட்டங்களுக்கு விளக்கமளித்தல்) | செயலாட்சிப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள்: செயலாட்சியின் நடவடிக்கைகளை அரசமைப்பிற்கு முரணானதாக பிரகடனப்படுத்துதல் | சட்ட மன்றப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள்: சட்ட மன்றத்தின் நடவடிக்கைகளை அரசமைப்பிற்கு முரணானதாக பிரகடனப்படுத்துதல். |

"எந்த ஒரு மனிதனும் தனக்கு தெரியாத அல்லது அனுபவம் இல்லாத துறையில் செயல்பட விரும்புவதில்லை, அரசாங்கம் என்ற கடினமான மற்றும் மிகுதியான திறன் தேவைப்படும் துறையில் ஈடுபட தமக்குத் தகுதி உள்ளதாகக் கருதி அனைவரும் செயல்பட விரும்புகின்றனர்" – சாக்ரடீஸ்.

| அதிகாரத்தில் உள்ளோர் எண்ணிக்கை | மக்கள் நலம் | சுயநலம் |
|---|---|---|
| ஒன்று | முடியாட்சி | கொடுங்கோல் ஆட்சி |
| சிலர் | பிரபுக்கள் ஆட்சி | சிறுகுழுவின் ஆட்சி |
| பலர் | தூய அரசியல் அமைப்பு முறை (Polity) | மக்களாட்சி அல்லது கும்பல் ஆட்சி |

இங்கிலாந்தின் முடியாட்சியே மிகப் பழமை வாய்ந்த அரசாங்க வடிவமாகும். முடியாட்சியில் மன்னர் அல்லது ராணி அரசின் தலைவராக இருப்பார். இங்கிலாந்து முடியாட்சியானது அரசமைப்பிலான முடியாட்சி என அழைக்கப்படுகிறது. மன்னர் அரசினுடைய தலைவராக இருந்தாலும், சட்டமியற்றக்கூடிய தகுதி தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்திடமே உள்ளது என்பது இதன் பொருளாகும்.

அரசாங்கத்தின் வகைப்பாடு பற்றி அரிஸ்டாட்டில்: அரிஸ்டாட்டில் இரண்டு அடிப்படைகளின் இணைவில் அவர் பகுப்பாய்ந்த அரசமைப்புக்களை வகைப்படுத்தியுள்ளார்.

**<u>கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சி அரசாங்கத்திற்கிடையேயான வேறுபாடுகள்:</u>**

| வ.எண் | ஒற்றையாட்சி | கூட்டாட்சி |
|---|---|---|

| | | |
|---|---|---|
| | ஒரு அடுக்கு அரசாங்கம் மற்றும் துணை அலகுகள் | இரண்டு அடுக்கு அரசாங்கம் |
| | பெரும்பாலும் ஒற்றை குடியுரிமை | இரட்டைக் குடியுரிமை |
| | துணை அலகுகள் சுதந்திரமாகச் செயல்பட இயலாது | கூட்டாட்சி அலகுகள் மத்திய அரசுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும் |
| | அதிகாரப் பகிர்வு என்பது கிடையாது | அதிகாரப்பகிர்வு என்பது இருக்கும் |
| | அதிகாரப் குவிப்பு | அதிகாரப் பரவலாக்கம் |

| வ.எண் | நாடு | நாடாளுமன்றம் |
|---|---|---|
| | இஸ்ரேல் | நேசெட் |
| | ஜெர்மனி | பன்டஸ்டாக் |
| | ஜப்பான் | டயட் |
| | நார்வே | ஸ்டோர்டிங் |
| | நேபாளம் | ராஷ்டிரிய பஞ்சாயத்து |

| வ.எண் | நாடு | நாடாளுமன்றம் |
|---|---|---|
| | பாகிஸ்தான் | தேசிய சபை |
| | ரஷ்யா | டூமா |
| | அமெரிக்கா | காங்கிரஸ் |
| | தென் ஆப்பிரிக்கா | நாடாளுமன்றம் |
| | சுவிட்சர்லாந்து | கூட்டாட்சி சபை |

| வ.எண் | வகையினம் | வகைகள் | நாடுகள் |
|---|---|---|---|
| 1. | அரசாங்கத்தின் முறைகள் | குடியரசு தலைவர் முறை அரசாங்கம் | அமெரிக்கா |
| | | நாடாளுமன்ற முறை அரசாங்கம் | இங்கிலாந்து இந்தியா |
| | | நேரடி மக்களாட்சி | சுவிட்சர்லாந்து |
| | | மறைமுக மக்களாட்சி | இந்தியா |
| | | முடியாட்சி | முழுமையான முடியாட்சி – பஃரைன் |
| | | | அரசமைப்பிலான முடியாட்சி – ஜப்பான் |
| | | | காமன் வெல்த் பகுதிகள் – ஆஸ்திரேலியா |
| | | சர்வதிகாரம் | ஹிட்லரின் ஜெர்மனி, முசோலியின் இத்தாலி |
| 2. | | மதச்சார்பின்மை | இந்தியா |

winmeen.com

| | | | |
|---|---|---|---|
| | | சமய ஆட்சி | பாகிஸ்தான், ஈரான், வாடிகன், நேபாளம் |
| 3. | நிலப்பரப்பு சார்ந்த அதிகாரப் பங்கீடு | ஓரவை சட்டமன்றம் | சீனா |
| | | ஈரவை சட்டமன்றம் | இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா |
| 4. | செயலாட்சியின் வகைகள் | ஒற்றை செயலாட்சி மாதிரி | அமெரிக்கா |
| | | பன்மை செயலாட்சி மாதிரி | பிரான்சு |
| 5. | நீதித்துறையின் வகைகள் | சுதந்திரமானது | அனைத்து மக்களாட்சி நாடுகள் |
| | | அர்ப்பணிப்பு உறுதியுடையது | முன்னாள் சோவியத் ரஷ்யா குடியரசு |
| 6. | அரசமைப்பின் தன்மை | நெகிழாதது மற்றும் எழுதப்பட்டது | அமெரிக்கா |
| | | நெகிழும்/நெகிழா | இந்தியா |
| | | நெகிழும் தன்மையுடையது மற்றும் எழுதப்படாதது | இங்கிலாந்து |
| 7. | அரசின் தன்மை (நோக்கம், லட்சியம் மற்றும் கொள்கைகள் அடிப்படையிலானது) | முதலாளித்துவம் | அமெரிக்கா |
| | | பொதுவுடைமை | கியூபா, சீனா, வடகொரியா |
| | | சமதர்மம் | ரஷ்யா |

**நாடாளுமன்ற முறை அரசாங்கத்திற்கும், குடியரசுத்தலைவர் முறை அரசாங்கத்திற்கும் இடையேயான வேறுபாடுகள்:**

| வ.எண் | குடியரசுத் தலைவர் முறை அரசாங்கம் | நாடாளுமன்ற முறை அரசாங்கம் |
|---|---|---|
| | குடியரசுத்தலைவர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார் | நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்ட அரசியல் கட்சியின் தலைவரே பிரதம மந்திரியாவார் |
| | குடியரசுத் தலைவரே மேலான அதிகாரம் பெற்றவர் | மத்திய சட்டமன்றமே மேலான அதிகாரம் கொண்டதாகும் |
| | அதிகாரப் பிரிவினை | அதிகாரப் பிரிவினை கிடையாது அதிகாரம் மையப்படுத்தப்பட்டிருக்கும் |
| | சுதந்திரமான கிளைகள் | ஒன்றுடன் ஒன்று கலந்த பணிகளை உடைய சுதந்திரமான கிளைகள் |
| | குடியரசுத் தலைவரே அரசின் தலைவராவார் | குடியரசுத் தலைவரே அரசின் தலைவராவார் |
| | குடியரசுத் தலைவரே அரசாங்கத்தின் தலைவலாவார் | பிரதமமந்திரியே அரசாங்கத்தின் தலைவராவார் |
| | குடியரசுத் தலைவரே தலைமைப் பணியை ஏற்கிறார் | கூட்டுத்தலைமை |

| | | |
|---|---|---|
| | குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்திற்கு (காங்கிரஸ்) பொறுப்பானவர் கிடையாது | நாடாளுமன்றத்தில் கூட்டுப் பொறுப்புணர்வு மற்றும் தனிப்பொறுப்புணர்வு உண்டு |

**"உலக வங்கி – உலக மேம்பாட்டு அறிக்கை 1997: மாறிவரும் சூழலில் அரசின் நிலை"**

இந்த அறிக்கையானது வேகமாக மாறிவரும் உலக சூழலில் அரசு எவ்வகையில் நாட்டின் வளர்ச்சியில் சிறப்பாகப் பங்களிக்கலாம் என்பதைக் குறித்ததாகும். அரசு என்ன செய்ய வேண்டும், எவ்வாறு செய்ய வேண்டும் என்பதுடன் அரசு தன்னை எவ்வாறு மேம்படுத்திக் கொள்ளலாம் என்பன குறித்தும் இவ்வறிக்கையில் விவாதம் செய்யப்பட்டுள்ளது. மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் கலப்பு பொருளாதாரம் சார்ந்த அரசாங்கங்கள் தற்போதைய காலகட்டத்தில் சந்தை சார்ந்த பங்கினைக் குறைத்துக்கொண்டு வருகின்றன. இதற்குத் தோல்வியில் முடியும் அரசின் தலையீடுகள் காரணமாகும். இவ்வறிக்கை மேற்கூறிய கருத்துக்கு எதிராக சில முக்கியமான தருணங்களில் அரசின் தலையீடு சந்தையில் தேவை என்பதை வலியுறுத்துகிறது. பொருளாதாரம் சார்ந்த நிறுவனச் சூழலில் சட்டத்தின் ஆட்சியைச் செயல்படுத்தும் பங்கு அரசிற்கு உள்ளது. மேலும் நாட்டின் மேம்பாட்டிற்கு அரசின் சந்தை சார்ந்த தலையீடு அத்தியாவசியம் என கருதுகிறது. அரசாங்கத்தை குறைந்த பட்ச அரசாக சுருக்குவதற்கு இது எதிர்ப்பு தெரிவிக்கிறது. மேலும் தனியார் தொழில்கள் மற்றும் தனிமனிதர்களின் செயல்பாடுகளுக்கு தகுந்த ஊக்கம் மற்றும் ஆதரவினை நல்கும் சிறப்பான அரசே மேம்பாட்டிற்குத் தேவை என விளக்குகிறது. இவ்வறிக்கை அரசிற்கு சில சீர்திருத்தங்களை வலியுறுத்துகிறது. முதலாவதாக, அரசின் செயல்பாடுகளையும், அதன் திறன்களையும் சமன்படுத்துதலில் கவனம் செலுத்துதல் மற்றும் இரண்டாவதாக, அரசின் திறன்களை மேம்படுத்துவதற்கு அரசு நிறுவனங்களை மாற்றியமைப்பதற்கான வழிமுறைகளை கண்டுணர வேண்டும். இவ்வறிக்கையின்படி, பின்வரும் ஐந்து அடிப்படைப் பணிகளை அரசாங்கம் தனது நோக்கங்களாக மேற்கொள்ள வேண்டும். இவை இல்லையென்றால் நிலையான, வறுமையில்லாத மற்றும் அனைவருக்குமான வளர்ச்சியை நாம் அடைவது சாத்தியமற்றதாகும். அவையாவன 1.நாட்டில் அடிப்படைச் சட்டத்தை நிறுவுதல். 2.பேரியல் பொருளாதார நிலைத்தன்மையை பாதுகாத்தல். 3.அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பில் முதலீடு செய்தல். 4.சமூகத்தில் எளிதில் இலக்காகும் நிலையில் உள்ளவர்களை பாதுகாத்தல். 5.சுற்றுச் சூழல் பாதுகாப்பு.

**<u>அரசாங்கத்திலிருந்து ஆளுகை வரை</u>**: கூட்டு ஆளுகை அடிப்படையிலானது. நெகிழ்வானது. வெளிப்படையானது. புதுமையானது. துணிந்து முடிவெடுப்பது. மக்களுக்கானது. உள்நோக்கமுடையது.

**<u>கோபன் ஹேகன் பருவநிலை உச்சிமாநாடு 09.12.2009/P.8 மற்றும் 18.12.2009/P.10:</u>** 197 நாடுகள் பசுமை வாயுக்களை படிப்படியாக நீக்க ஒப்புகொண்டன. இது கரியமில வாயுவைவிட ஆயிரம் மடங்கு மோசமான வாயுக்களை குறைத்து புவி வெப்பமயமாதலை தடுக்கும் சட்டப்பூர்வமான ஒப்பந்தமாகும்.

**<u>மூன்று குழுவிலான நாடுகள்</u>**: அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள் தங்களின் ஹைட்ரோ ப்ளூரோ கார்பன் பயன்பாட்டினை 2019–ஆம் ஆண்டுவாக்கில் பத்து சதவீதம் 2011–2013–ஆம் அளவிலிருந்து குறைப்பதுடன் 2036–ஆம் ஆண்டுவாக்கில் என்பத்து ஐந்து சதவீதம் வரை குறைக்க வேண்டும்.

இரண்டாவது குழுவானது சீனா மற்றும் சில ஆப்பிரிக்க நாடுகளைக் கொண்ட வளரும் நாடுகள் இம்மாற்றத்தினை 2024–ஆம் ஆண்டிற்குள் செய்து முடிக்க உறுதி பூண்டுள்ளன. இவை 2020–2022–ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பத்து சதவீதமாவது 2029–ஆம் ஆண்டுவாக்கில் குறைப்பதுடன் இதனை நீட்டித்து 2045–ஆம் ஆண்டுவாக்கில் எண்பத்து ஐந்து சதவீதம் வரை குறைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் மூன்றாவது குழுவாக, வளரும் நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், ஈரான், ஈராக் மற்றும் வளைகுடா நாடுகள் உள்ளன. இவை இந்நடைமுறையை 2028–ல் தொடங்குவதுடன்

2024–2026–ல் அளவிலிருந்து கணக்கிடும் போது பத்து சதவீதம் வரை 2032–ல் குறைக்க வேண்டும். இது 2047–ல் எண்பத்து ஐந்து சதவீதமாக இருக்க வேண்டும்.

**கிகாலி (ருவாண்டா) – Kigali (Rwand):** புவி வெப்பமயமாயதலைத் தடுப்பதற்கான ஒரு முக்கியப் படியாக 200 நாடுகளின் பிரதிநிதிகள் சந்தித்து குளிர்ப்பாதனப் பெட்டி மற்றும் காற்றுப் பதனி ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் அச்சுறுத்தலான பசுமை வாயுக்களை படிப்படியாக நீக்குவதற்கு ஒப்பந்தம் மேற்கொண்டனர். 1987–ஆம் ஆண்டு ஓசோன் படலப் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட மாண்ட்ரீயல் நெறிமுறைகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு பணக்கார நாடுகள், வளரும் நாடுகளைக் காட்டிலும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டது. ருவாண்டாவின் தலைநகர் கிகாலியில் இரவு முழுவதும் கண்விழித்து ஹைட்ரோ ப்ளுரோ கார்பன் உற்பத்தி மற்றும் நுகர்வினை படிப்படியாக குறைப்பதற்கான ஒப்பந்தத்தை உருவாக்கும் இறுதி கட்டத்தில் இருந்த பிரதிநிதிகள் மகிழ்வுடன் கைதட்டி இதனை வரவேற்றனர். இருப்பினும் சில பிரதிநிதிகள் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் வளைகுடா நாடுகள் ஆகியவை இம்மாற்றத்தினை பிற நாடுகளைக் காட்டிலும் பின்னே மேற்கொள்வதற்கு வருத்தம் தெரிவித்தனர். மார்ஷல் தீவுகள் என்ற குட்டி பசிபிக் நாட்டின் பிரதிநிதி கூறுகையில் "இது மார்ஷல் தீவுகள் முழுமையாக விரும்பியதாக இல்லாவிடினும், சிறந்த ஒப்பந்தமாகும்" என்றார். ஹைட்ரோ ப்ளுரோ கார்பன்கள் அகற்றப்பட்டால் 2100–ஆம் ஆண்டுவாக்கில் புவிவெப்பமயமாதல் 0.5 சதவீதம் குறையும் என 2015–ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தெரிவிக்கிறது. இருப்பினும் இந்தியா போன்ற அதிக உஷ்ணமான தட்பவெப்ப நிலையை கொண்ட வளரும் நாடுகள் ஹைட்ரோ ப்ளுரோ கார்பன்களுக்கு மாற்றாக அம்மோனியா, தண்ணீர் அல்லது ஹைட்ரோ ப்ளுரோலெபீன்ஸ் (Hydro Fluroefins) போன்ற வாயுக்களை பயன்படுத்தினால் செலவினம் அதிகரிக்கும். இந்த ஒப்பந்தம் அறிவிக்கப்படுவதற்கு முன்னர் இந்திய சுற்றுச்சூழல் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகத்தைச் சேர்ந்த அஜய் நாராயண் ஜா கூறுகையில் "இதில் செலவினப் பிரச்சனை, தொழில் நுட்ப பிரச்சனை, நிதிப்பிரச்சனை ஆகிய உள்ளன" என்கிறார். அவர் மேலும் கூறுகையில் "எந்த ஒப்பந்தமாக இருந்தாலும் அது ஒரு பக்கத்திலிருந்து நெகிழ்வானதாக இருக்க வேண்டுமே தவிர மறுபக்கத்தில் இருந்தல்ல என்பதை நாம் வலியுறுத்த விரும்புகிறோம் என்றார். ஓசோன் படலத்தை ஹைட்ரோ ப்ளுரோ கார்பன்களின் முன்னோடியான குளோரோ ப்ளுரோ கார்பன்கள் அழிப்பதை உணர்ந்த விஞ்ஞானிகள் அவற்றினை மாண்ட்ரியல் நெறிமுறைகளின் அடிப்படையில் கைவிட்டனர். தற்பொழுது சரியாகி வரும் ஓசோன் படலத்திற்கு ஹைட்ரோ ப்ளுரோ கார்பன்கள் பாதுகாப்பானவையாக தெரிந்தாலும் முக்கிய பசுமை வாயுவான கரியமில வாயுவை விட வெப்பமாக்குதலில் ஆயிரம் மடங்கு மோசமானதாக இருக்கிறது.

ஓர் உலகளாவிய பார்வை என்பது உங்களை நான், எனது குடும்பம், எனது பள்ளி, எனது சமூகம், எனது கிராமம், எனது மாவட்டம், எனது மாநிலம் அல்லது நான் வாழும் நாடு என்பதைத் தாண்டி சிந்திக்க வைக்கிறது. செய்திகளில் வரும் பிரச்சனைகள் உலகளாவிய தன்மையுள்ளவையாகும். உதாரணமாக சுற்றுச் சூழல் பிரச்சனையைக் கூறலாம். பெரும்பாலும் உலகளாவிய பிரச்சனைக்கு ஓர் உலகளாவிய தீர்வு தேவைப்படுகிறது. பருவநிலை மாற்றம் என்ற உலகளாவிய பிரச்சனையை உள்ளூர் தீர்வுகளால் சரி செய்ய இயலாது. இருப்பினும் உள்ளூரில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உலகளாவிய தீர்விற்கு வழிசெய்ய உதவுகிறது. பருவநிலை மாற்றம் தொடர்பான பிரச்சனைக்கு, உதாரணமாக உள்ளூர் அளவிலான விழிப்புணர்வினை தெரு நாடகங்கள், கண்காட்சி, மனிதச் சங்கிலி மற்றும் சுவரொட்டி பிரச்சாரம் போன்றவற்றின் மூலமாக மக்களை உலகளாவிய அளவில் சிந்திக்க வைத்து உள்ளூர் அளவில் செயல்பட வைக்கிறது எனலாம்.

**நல்ல அரசாங்கம்:** ஒரு மித்த கருத்திலான திசைப்போக்கு. சிறப்பானது மற்றும் செயல்திறன் வாய்ந்தது. சட்டத்தின் ஆட்சியைப் பின்பற்றுகிறது. சமநீதிப்பங்கிலானது மற்றும் உள்ளடக்கியது. பொறுப்பானது. பங்கேற்கிலானது. மறுமொழி பகிர்தல். வெளிப்படையானது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. "நாடாளுமன்ற முறை அரசாங்கம்" என்பது

(அ) அமைச்சரவை அரசாங்கம் (ஆ) பொறுப்பான அரசாங்கம்

(இ) வெஸ்ட் மினிஸ்டர் அரசாங்கம் (ஈ) இவை அனைத்தும்

2. கீழ்க்கண்டவற்றில் கூட்டாட்சி அரசாங்கத்துடன் தொடர்பில்லாத பண்பியல்பு எது?

(அ) எழுதப்பட்ட அரசமைப்பு (ஆ) நெகிழும் அரசமைப்பு

(இ) அரசமைப்பின் மேலான தன்மை (ஈ) சுதந்திரமான நீதித்துறை

3. இந்திய கூட்டாட்சி முறை எந்த நாட்டின் மாதிரியிலானது?

(அ) கனடா (ஆ) இங்கிலாந்து (இ) அமெரிக்கா (ஈ) ஜப்பான்

4. கீழ்க்கண்டவற்றுள் மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டில் (HDI) உள்ள மூன்று குறியீடுகள் யாவை?

அ. வாழ்க்கைத்தரம், ஆ.கல்வி, இ.சராசரி ஆயுட்காலம். ஈ. சுற்றுச் சூழல் நிலை.

(அ) அ, ஆ மற்றும் ஈ மட்டும் (ஆ) அ, ஆ மற்றும் இ மட்டும்

(இ) அ மற்றும் ஆ மட்டும் (ஈ) இவை அனைத்தும்

5. கீழ்க்கண்ட இயல்புகளில் இந்திய நாடாளுமன்ற முறை அரசாங்கம் செயல்பட அடிப்படையானவை யாவை?

(அ) பெயரளவிலான மற்றும் உண்மையான செயலாட்சி

(ஆ) கீழவைக்குப் பொறுப்பான செயலாட்சி

(இ) உண்மையான செயலாட்சியாக பிரதமர் இருத்தல்

(ஈ) இவை அனைத்தும்

6. கீழ்க்கண்டவற்றில் எக்காரணங்களுக்காக நமது அரசமைப்பினைத் தோற்றுவித்தவர்கள் இங்கிலாந்து நாடாளுமன்ற முறையினைத் தேர்ந்தெடுத்தனர்?

1.அம்முறைமையுடனான பரிச்சயம்.

2.அதிக பொறுப்புணர்வு.

3.அதிகாரப்பிரிவினை.

4.பன்முகத்தன்மையுள்ள இந்திய சமுதாயம்

(அ) 1,2,4 மட்டும் (ஆ) 1,2,3 மட்டும் (இ) 2,3,4 மட்டும் (ஈ) இவை அனைத்தும்

7. அரசமைப்பின் அம்சங்கள் மற்றும் நடைமுறைகள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடும் கூட்டாட்சி அமைப்பு எது?

(அ) சட்டமன்றம் (ஆ) செயலாட்சி (இ) நீதித்துறை (ஈ) அமைச்சரவை

8. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள அரசாங்க முறை:

(அ) நாடாளுமன்ற முறையிலானது (ஆ) குடியரசுத்தலைவர் முறையிலானது

(இ) முழுமையான முடியாட்சி (ஈ) வரையறுக்கப்பட்ட முடியாட்சி

9. எழுதப்பட்ட ஒரே அரசமைப்பு இல்லாத முக்கிய நாடு எது?

(அ) ரஷ்யா (ஆ) ஈரான் (இ) ஜெர்மனி (ஈ) இங்கிலாந்து

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (ஈ) இவை அனைத்தும் 2. (ஆ) நெகிழும் அரசமைப்பு 3. (அ) கனடா 4. (ஆ) அ, ஆ மற்றும் இ மட்டும் 5. (ஈ) இவை அனைத்தும் 6. (அ) 1,2,4 மட்டும் 7. (ஆ) செயலாட்சி 8. (ஆ) குடியரசுத்தலைவர் முறையிலானது 9. (ஈ) இங்கிலாந்து

## அலகு – 7 அரசியல் சிந்தனை

**பிளாட்டோ (கி.மு.(பொ.ஆ.மு.427–(கி.மு) பொ.ஆ.மு.347):** சாக்ரடீசின் மாணவர். அகாடெமியைத் தோற்றுவித்தார் – இது முதலாவது உயர்கல்வி நிறுவனமாகும். தற்பொழுது வரை தனது படைப்புகள் நீடித்திருக்க கூடிய முதலாவது மேற்கத்திய சிந்தனையாளர். சாக்ரடீசைப் பற்றி நாம் அறிவதன் பெரும் பகுதி பிளாட்டோவின் படைப்புக்களால் ஆகும். இவ்வுலகைப் புரிந்து கொள்ள கணிதம் அடிப்படையானது என்ற பிதாகாசின் கருத்தினை ஏற்றுக்கொண்டார்.

மனிதன் அரசு

பகுத்தறிவு ஆளும் வர்க்கம்

உத்வேகம் இராணுவ வர்க்கம்

உணவு நாட்டம் துணை வர்க்கம்

ஒவ்வொரு தத்துவ ஞானியும் அவர் வாழ்ந்த காலத்தின் வெளிப்பாடாவார். கிரேக்கத்தின் மிகப்பெரும் ஞானியான சாக்ரடீசின் படுகொலையால் பிளாட்டோ மக்களாட்சியின் மீது அவமதிப்புக் கொண்டார். அதனால் மக்களாட்சிக்குப் பதிலாக தத்துவ ஞானிகளின் ஆட்சி மீது நம்பிக்கை கொண்டார்.

மனிதன் என்பவன் இயற்கையாகவே ஓர் அரசியல் விலங்கு! இயற்கையில் ஒரு மனிதன் அரசு இல்லாமல் வாழ முடியாது! அவ்வாறு அரசின்றி வாழ்பவன் மனித குலத்திற்கு மேலானவன் அல்லது கீழானவன் ஆவான்! – அரசியல் என்ற நூலில் அரிஸ்டாட்டில்.

முழுமை என்பது பகுதிகளின் தொகுப்பைவிட மிகுதியானதாகும். – அரிஸ்டாட்டில் (Aristotle)

| அளவு | தரம் | |
|---|---|---|
| வகை | சிறந்த வடிவம் | திரிந்த வடிவம் |
| ஒன்று | முடியாட்சி | கொடுங்கோலாட்சி |
| சிலர் | பிரபுக்களாட்சி | சிறுகுழு ஆட்சி |
| பலர் | தூய ஆட்சி அமைப்பு முறை | மக்களாட்சி |

சட்டம் என்பது சமூக அக்கறையுடன் உள்ள நபரால் பொது நலனுக்காக பகுத்தறிவின் அடிப்படையில் குறிப்பிட்ட விதிமுறைகளை ஏற்படுத்துவதன்றி வேறோன்றுமில்லை. – தாமஸ் அக்வினாஸ் (Thomas Aqunas)

ஓர் இளவரசன் அரசினைக் கைப்பற்றி நிர்வகிக்கும் பணியினை செய்ய முற்படுவதால் அவரது முறைகள் எப்பொழுதுமே மேன்மையானதாகக் கருதப்படுவதுடன் அனைத்து தரப்பினராலும் பாராட்டப்படுகிறார்.

மாக்கியவல்லி (இளவரசன்) மாக்கியவல்லியின் முறைமை (Machiavelli's Method): மாக்கியவல்லியைப் பொறுத்தவரை வரலாற்று முறையே அரசியல் அறிவியலைக் கற்கும் சரியான முறையாகும். இவர் மனித விருப்பங்கள் மற்றும் பேரார்வம் ஆகியவை எப்பொழுதும் ஒரே மாதிரியானவை எனக்கூறுகிறார். வாழ்விலுள்ள சம்பவங்களை ஒப்பிடும் போது மனித இனம் ஒரே மாதிரியான பரிகாரங்களைத் தேட முனைவதுடன் ஒரே மாதிரியான நடத்தையை மீண்டும் கொண்டிருக்கின்றன எனக்கூறுகிறார். ஆகவே கடந்த காலத்தைப் படித்தறிவது என்பது தற்காலத்தைப் புரிந்து கொள்வதுடன் எதிர்காலத்திற்கான முன்கணித்தலை மேற்கொள்வதை எளிமையாக்குகிறது என்கிறார். அவர் அரசியலை வரலாறு மற்றும் மெய்மைவாத அடிப்படையில் கற்பதுடன் குறிப்பாக அரசியல் நடத்தையைக் கற்றறிவதற்கு செயலறிவு முறையினைச் சார்ந்துள்ளார். அவர் நடத்தையியலின் முன்னோடியாக விவரிக்கப்படுகிறார். இளவரசன் மற்றும் உரைக்கோவை ஆகிய இரண்டிலுமே இம்முறையினை அவர் பின்பற்றுகிறார். அவர் அதிகாரத்தினை கையகப்படுத்தி, பாதுகாத்து விரிவாக்கம் செய்யும் கருவியே அரசியல் என்பதுடன் அவற்றினை அடைவதற்காக இம்மெய்யான உலகில் உள்ள மக்களின் அறிவுத்திறனுக்குத் தக்கவாறு அணிதிரட்டி அடைவதாகக்கருதுகிறார். மாக்கிவல்லியின் முறையானது உய்த்தறிதல் அல்லது அறிவியல் முறையாக அழைக்கப்படுகிறது. இதற்கான அடிப்படை யாதெனில் அவர் பல்வேறு அரசியல் ஆட்சி காலங்களின் மனிதனின் தன்மை பற்றிய நடைமுறை அல்லது வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில் முடிவுரைகளை எட்டுகிறார். அரசியலைப் பகுதிதறியும் சில நீதிநெறிகளுக்கு மாற்றாக மனித நடத்தையின் பாங்கில் கவனம் செலுத்துவதில் அவருடைய சுயத்தன்மை உள்ளது. இருப்பினும் மாக்கியவல்லியின் முறையானது மேலோட்டமான அறிவியல் மற்றும் வரலாற்று முறையாகும் என விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். அவர் குறிப்பிட்டவற்றிலிருந்து பொதுவானவற்றை (Particular to General) நோக்கிய நடைமுறையிலான உய்த்தறிதல் முறையினைப் (Inductive Method) பின்பற்றவில்லை. அதே நேரத்தில் "பொதுவானவற்றிலிருந்து குறிப்பிட்டவற்றிற்கான (Genral to Particular) நடைமுறையில் கொணர்முறையினையும் (Deductive Method) பின்பற்றவில்லை. அவர்களைப் பொறுத்தவரையிலும் மாக்கியவல்லி அரசியல் தத்துவத்தின் மையப் பிரச்சனைகளை எப்பொழுதும் தொடவில்லை. உதாரணமாக அரசு நீடித்தலுக்கான நியாயவாதம் மற்றும் அரசியல் கோட்பாட்டின் அடிப்படைகள் மற்றும் வரையறைகளைக் குறிப்பிடலாம். அவருடைய பார்வை பரந்ததாக இருந்தாலும் நடைமுறை அரசியலின் தேவைகளைத் தாண்டி அவர் எப்பொழுதும் பார்த்ததில்லை. "அரசுகளைக் கண்டறிய மற்றும் சீர்திருத்த ஓர் ஆட்சியாளர் தேவை. அவை நிறுவப்பட்ட பின்னர் தாங்கிப் பிடிப்பதில் குடியரசிலான அரசாங்கங்கள் சிறந்தவையாகும்".

"அச்சமும் நானும் இரட்டையர்களாகப் பிறந்தவர்கள் – ஹாப்ஸ் (Hobbes).

மனிதகுலம் முழுமைக்கும் உள்ள பொதுவான மனச்சார்பாக நான் முன்வைப்பது யாதெனில் அவர்கள் அதிகாரத்தின் மேல கொண்டுள்ள இடைவிடாத மற்றும் ஓய்வற்ற விருப்பம் ஆகும். அவ்விருப்பம் அவர்கள் மரணத்தின் போதுதான் முடிவுக்கு வருகிறது – ஹாப்ஸ்

பிறர் உனக்கு பாதகமானவற்றை செய்வதற்கு முன் நீ அவர்களுக்குப் பாதகமானவற்றைச் செய்துவிடு – ஹாப்ஸ் (Hobbes).

அச்சம் மற்றும் சுதந்திரம் ஆகியவை நிலையானது ஆகும். சுதந்திரம் மற்றும் தேவைகள் ஆகியவை நிலையானது ஆகும். சமர்ப்பித்தல் என்பது நமது கடப்பாடு மற்றும் சுதந்திரம் ஆகும் இரண்டையும் உள்ளடக்கியதாகும். சட்டத்தின் அமைப்பைச் சார்ந்தே பிற சுதந்திரங்கள் உள்ளன.

சொத்தினைப் பாதுகாப்பதைத் தவிர அரசாங்கத்திற்கு வேறு நோக்கம் கிடையாது. – ஜான் லாக் (John Locke).

மனிதனின் சுதந்திரமாகப் பிறக்கிறான், ஆனால் எங்கெங்கு காணினும் அவன் விலங்கிடப்பட்டிருக்கிறான். ஒரு மனிதன் தன்னையே பிறரின் எஜமானராக எண்ணுகிறான். எனினும் பிறரைக் காட்டிலும் மிகவும் அடிமையாகவே தொடர்ந்து காணப்படுகிறான். – ரூசோ (Rousseau).

பயன்பாட்டுவாதம் என்பது அதிக எண்ணிக்கையிலானவர்களின் அதிகப்படியான மகிழ்ச்சியாகும். ஜேம்ஸ் மில் மற்றும் ஜெரேமி பெந்தாம் ஆகிய பயன்பாட்டு சிந்தனையாளர்களின் வழிகாட்டுதலின் கீழ் ஜே.எஸ்.மில் கொண்டு வரப்பட்டாலும் பயன்பாட்டு வாத்தினைப் பற்றிய மாறுபட்ட சிந்தனையினை அவர் தந்தார்.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் நீங்கள் இழப்பதற்கு உங்கள் விலங்கினைத் தவிர வேறோன்றுமில்லை. – காரல் மார்க்ஸ் (Karl Marx).

தற்பொழுது வரையிலான அனைத்து சமுதாயங்களின் வரலாறுமே வர்க்கப் போராட்டத்தின் வரலாறாகும். – காரல் மார்க்ஸ் (Karl Marx).

மார்க்சியவாதத்தின் மீதான தற்கால விவாதங்களின் முக்கிய அடிப்படைச் சால்புகள் தற்காலச் சமுதாயத்தில் உருவாகும் சில முக்கிய வடிவங்களிலான பிளவுகளை அடையாளம் காட்டுகின்றன. இவ்வகை விவாதங்கள் புதிய மார்க்சியவாதத்தின் எழுச்சிக்கு வகை செய்கின்றன.

**<u>I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. "குடியரசு" என்னும் நூலினை எழுதிய தத்துவ ஞானியின் பெயர்

(அ) மார்க்ஸ் (ஆ) அரிஸ்டாட்டில்

(இ) பிளாட்டோ (ஈ) புனித தாமஸ் அக்வினாஸ்

2. "அரிஸ்டாகிள்ஸ்" என்பது யாருடைய இயற்பெயராகும்.

(அ) சாக்ரடீஸ் (ஆ) பிளாட்டோ (இ) அரிஸ்டாட்டில் (ஈ) செனோபோன்

3. அரசியல் அறிவியலின் தந்தை யார்?

(அ) சாக்ரடீஸ் (ஆ) பிளாட்டோ (இ) அரிஸ்டாட்டில் (ஈ) செனோபோன்

4. "திருச்சபை நிறைஞர்" எனப் பிரபலமாக அறியப்படுபவர் யார்?

(அ) புனித தாமஸ் அக்வினாஸ் (ஆ) பிளாட்டோ

(இ) அரிஸ்டாட்டில் (ஈ) செனோபோன்

5. "லிவி மீதான உரைக்கோவை" என்ற நூலின் ஆசிரியர் யார்?

(அ) புனித தாமஸ் அக்வினாஸ் (ஆ) மாக்கிய வல்லி

(இ) அரிஸ்டாட்டில் (ஈ) செனோபோன்

6. தத்துவார்த்தமான சுதந்திரத்துவத்தின் தந்தை யார்?

(அ) புனித தாமஸ் அக்வினாஸ் (ஆ) மாக்கியவல்லி

(இ) மார்க்ஸ் (ஈ) ஜான் லாக்

7. "அரசியல் பொருளாதாரத்தின் கொள்கைகள்" என்ற படைப்பின் ஆசிரியர் யார்?

(அ) புனித தாமஸ் அக்வினாஸ் (ஆ) தாமஸ் ஹாப்ஸ்

(இ) ஜான் ஸ்டூவர்ட் மில் (ஈ) பிளாட்டோ

8. "உழைக்கும் வர்க்கத்தின் வேதாகமம்" என அழைக்கப்படும் படைப்பு எது?

(அ) அரசியல் பொருளாதாரத்தின் கொள்கைகள் (ஆ) மூலதனம்

(இ) உபரி மதிப்புக் கோட்பாடு (ஈ) பிரான்சின் வர்க்கப் போராட்டம்

9. "பாட்டாளிகளின் சர்வாதிகாரம்" என்னும் கருத்தினைப்பிரகடனப்படுத்தியவர் யார்?

(அ) மார்க்ஸ் (ஆ) புனித தாமஸ் அக்வினாஸ்

(இ) தாமஸ் ஹாப்ஸ் (ஈ) ஜான் ஸ்டூவர்ட் மில்

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (இ) பிளாட்டோ 2. (ஆ) பிளாட்டோ 3. (இ) அரிஸ்டாட்டில் 4. (அ) புனித தாமஸ் அக்வினாஸ் 5. (ஆ) மாக்கியவல்லி 6. (ஈ) ஜான் லாக் 7. (இ) ஜான் ஸ்டூவர்ட் மில் 8. (ஆ) மூலதனம் 9. (அ) மார்க்ஸ்

## அலகு – 8 அரசியல் கொள்கைகள் பகுதி I

**ஜான்லாக்**: பாரம்பரியத் தாராளவாதத்தின் தந்தை. உயிர், விடுதலை, தனிச்சொத்துகள் சமஉரிமை.

நான் உங்களுக்கு உறுதி மொழியளிக்கிறேன். எனக்கும் உறுதி மொழியளிக்கிறேன். அமெரிக்க மக்களின் புதிய ஒப்பந்தத்தின் பேரில்" – பிராங்கிளின் ரூஸ்வெல்ட்

பிராங்கிளின் ரூஸ்வெல்ட் மிக நீண்ட காலங்கள் அமெரிக்காவின் அதிபராக இருந்தவர். அமெரிக்காவின் முன்னேற்றத்திற்கு அருமையாக பணியாற்றினார். பொருளாதார மந்த நிலையில் இருந்து தனது புதிய ஒப்பந்த திட்டத்தின் மூலம் அமெரிக்காவை மீட்டெடுத்தார். கோடிக்கணக்கான மக்கள் இன்றைக்கும் அவரால் ஊக்குவிப்படுகின்றனர். அவர் போலியோ நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டவர் ஆவார். அமெரிக்காவின் அதிபர் தேர்தலில் 1932–ஆம் ஆண்டு போட்டியிட்டு வெற்றி பெற்றார். மக்களிடையே வாக்குகளை சேகரிப்பதற்காக அவர் உணர்ச்சிகரமாக பேசினார். சக்கர நாற்காலியில் வரும் நான் மீண்டும் அமெரிக்காவை முன்னேற்றம் என்னும் சக்கரத்தில் அமர்த்துவேன் என்று கூறினார். வாழ்க்கையில் இன்னல்களை சமாளித்து வெற்றிச் சிகரங்களை தொடுவது எப்படி என்பதற்கு இலக்கணமாக ருஸ்வெல்ட் இன்றைக்கும் விளங்குகிறார்.

**அரசின் பணிகள்**: நேர்மறைத் தாராள வாதம் – கல்வி, உடல்நலம், தொழிற்சாலை, போக்குவரத்து, நியாய விலைக்கடை.

சமூகம் என்று ஒன்று கிடையாது. தனி ஆண்கள், பெண்கள் மற்றும் குடும்பங்கள் மட்டுமே உள்ளன. – மார்கரெட் தாட்சர்.

இந்த உலகில் மக்களை சமமாக பார்ப்பதற்கும், மக்களை சமமாக ஆக்குவதற்கும் மிக பெரிய வித்தியாசம் உள்ளது. – பிரெட்ரிக் ஹேயக்.

ஆல்பெர்ட் ஜேநாக் தனது புத்தகத்திற்கு "அரசு, நமது எதிரி" என்று பெயர் சூட்டினார்.

காரல் பாப்பர் – பிளாட்டோவை வெளிப்படையான சமூகத்தின் முதல் எதிரி என்று "Open Society and its Enemies" என்ற தனது நூலில் விமர்சித்தார்.

**சமகாலத் தாராள வாதம்:**

**தத்துவ ஞானிகள்** – பிரெட்ரிக் ஹேயக். ஆல்பெர்ட் ஜே.நாக். மில்டன் ஃபிரிட் மென். எம்.ஓக்ஸாட்

**தலைவர்கள்** – ரொனால்டு ரீகன். மார்கரெட் தாட்சா. பி.வி.நரசிம்மராவ். மைக்கேல் கோர்பசேவ்.

"வரலாற்றின் முடிவும் கடைசி மனிதனும்" – பிரான்சிஸ் புக்கியோமா.

விளாடிமர் லெனின் – 1924–ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அவருடைய உடல் இரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் இன்று வரை பதனிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. அவருடைய பூத உடல் இரசாயனப் பொருள்கள் மூலமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில், உடல் பாதுகாப்புக்கான செலவை அரசே ஏற்றுக்கொண்டது. 1991–ஆம் ஆண்டு லெனின் உருவாக்கிய நாடான USSR உடைந்த பிறகு பொது மக்களின் நன்கொடையால் உடல் பாதுகாக்கப்படுகிறது. அவருடைய பூத உடலை, அவருடைய அன்னையின் கல்லறைக்கு அருகில் அடக்கம் செய்ய வேண்டும் என்று சிலர் கோருகின்றனர்.

உருவத்தில் தேசியவாதம் அமைப்பில் சமதர்மவாதம்" – ஜோசப் ஸ்டாலின்

எல்லா அரசியல் அதிகாரமும் துப்பாக்கியின் பீப்பாயில் இருந்து வருகிறது. – மாவோ.

பண்டைய கால சீன சிந்தனையாளர் கன்ஃபுசியஸ் தனது கவிதையில்: "நூறு மலர்கள் மலரட்டும், நூறு கருத்துக்கள் போட்டியிடட்டும். பொருள் எல்லோருக்கும் சிந்திக்கும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். 1956–ஆம் ஆண்டு மாவோ இதனை அமல்படுத்தினார். சீன மக்களின் ஆலோசனை, கருத்துக்கள் பொதுவுடைமை கட்சிக்கு வேண்டும் என்று அவர் கூறினார்".

**<u>கலாச்சாரப் புரட்சி</u>**: 1960களில் மாவோ தனது அதிகாரத்தை பலப்படுத்துவற்காக புதிய புரட்சிகர இயக்கத்தைத் தொடங்கினார். மாணவர்கள், விவசாயிகள், இராணுவ வீரர்கள் ஆகியோரைக் கொண்டு சிவப்பு காவலர்களை உருவாக்கினார்.

"பூனை கருப்பா, சிவப்பா என்பது முக்கியமல்ல. அது எலியை பிடித்தால் போதும்" – டெங் ஜியாபெங்.

எல்லா மனிதர்களும் அறிவு ஜீவிகளே ஆனால் சமூகத்தில் அறிவு ஜீவிகளின் பணியை எல்லோரும் செய்வது இல்லை – ஆண்டனியோ கிராம்ஸி.

கிராம்சி நவீன அரசியல் சிந்தனையாளர்களில் மிகுந்த சிந்திக்கும் திறன் கொண்ட ஒருவராவார். இத்தாலியின் பாசிச அரசாங்கம் அவரைச் சிறையில் அடைத்தது. 20 ஆண்டுகளுக்கு இவரது மூளையின் செயல்பாட்டை நிறுத்தி வைக்க வேண்டும் என்று நீதிமன்றம் ஆணையிட்டது. சிறையில் கையில் கிடைத்த காகிதத்தில் தனது கருத்துக்களை கிராம்சி எழுதினார். பின்னர் சிறையில் இருந்து அந்த குறிப்புகள் வெளி உலகத்திற்கு கடத்தி வரப்பட்டன. ஆகவே அவரது புத்தகத்திற்கு "சிறைச் சாலை குறிப்பேடுகள்" (Prision Notebook) எனப் பெயரிடப்பட்டது.

"வாழ்க்கை முறையை மாற்றுவதற்கு மனிதர்களை உருவாக்கி, மாற்றி, தயார்படுத்துவதற்கு கொள்கை இன்றியமையாதது" – லூயி அல்துஸர்.

"புரட்சிகள் கொடுங்கோலாட்சியின் கொடுமையை குறைக்கவில்லை. இன்னொரு கொடுங்கோலனிடம் தான் ஆட்சியை ஒப்படைத்துள்ளன. – ஜார்ஜ் பெர்னார்ட் ஷா.

இந்தியாவில் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஃபேபியன் சமதர்ம வாதத்தின் ஆதரவாளர் ஆவார்.

**<u>வேறுபாடுகள்:</u>**

| பொதுவுடைமைவாதம் | சமதர்மவாதம் |
|---|---|
| புரட்சி மாற்றத்தின் மருத்துவச்சி ஆகும். பேரு காலத்தில் அன்னையரிடம் இருந்து மருத்துவச்சி குழந்தையை உலகிற்கு எடுத்து வருகிறாள். புரட்சி மாற்றத்தின் மூலம் புதிய சமூகத்தை உலகிற்கு கொண்டு வருகிறது. | பரிணாம மாற்றங்களே நன்மையை தருகின்றன. நீடித்து நிற்கின்றன. புரட்சி தேவையில்லை. |

| | |
|---|---|
| பணக்கார வர்க்கம் ஏழை வர்க்கத்தை சுரண்டுவதற்கான கருவியே தான் அரசாகும். ஆகவே நாம் அரசை அழிக்க வேண்டும் | அரசை நாம் அழிக்கக் கூடாது அரசை மக்களாட்சி மற்றும் மக்கள் நலன் அடிப்படையில் மாற்றி அமைக்க வேண்டும். |
| வர்க்கம் போராட்டம், மனித வரலாற்றில் மாற்றத்தின் அடிப்படை சக்தியாகும். | வன்முறையான வர்க்கப் போராட்டம் தேவையில்லை |
| தனி சொத்துரிமை அழிக்கப்பட வேண்டும் | தனி சொத்துரிமை மாற்றப்பட வேண்டும். சமூக நலனுக்காக சொத்துரிமை மீது கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் |
| வரலாற்று பொருள் முதல் வாதம் வரலாற்றை விளக்கும். பொருளாதாரம் தான் மனிதனை இயக்குகிறது | வரலாற்று பொருள் முதல் வாதம் மட்டுமே மனித வரலாற்றை விளக்காது. கலாச்சாரம், மதம், அரசியல் போன்ற காரணிகளும் மனித வரலாற்றை தீர்மானிக்கின்றன. |

"மிகச் சிறிய நாட்டில் கூட ஒருவரையொருவர் மக்கள் தெரிந்திருப்பதில்லை, சந்திப்பதில்லை, கேள்விப்படுவதில். இருந்தபொழுதிலும் ஒவ்வொருவருடைய எண்ணத்திலும் சமூகத்தின் நினைவுகள் இருக்கின்றன. சமூகங்களை உண்மை – பொய் என்று வேறுபடுத்த வேண்டியதில்லை. எவ்வாறு மக்கள் எண்ணத்தில், மனதில் நினைக்கப்பட்டு இருக்கின்றன என்பதுதான் முக்கியம்" – பெனடிக்ட் ஆண்டர்சன்.

**உய்கர் பிரிவினைவாதம்**: சின்ஜியாங் சீனாவின் வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஆகும். சீன மொழியில் சின்ஜியாங் என்றால் புது எல்லை என்பது பொருளாகும். இங்கு வசிக்கும் பூர்வகுடி மக்கள் உய்கர் முஸ்லிம்கள் ஆவர். சீன அரசாங்கம் தங்களுக்கு எதிரான அரசியல் பொருளாதார பாகுபாட்டைப் பின்பற்றுவதாக இம்மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். சீன பெரும்பான்மை மக்களான ஹன்ஸ் இன மக்கள் உய்கர் மாநிலத்தில் குடியேறிவருகின்றனர். பூர்வகுடிகளின் அளவு குறைந்து வருகின்றது. இம்மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில் 6 சதவீதமாக இருந்த ஹன்ஸ் மக்கள் தற்பொழுது 40 சதவீதமாக அதிகரித்துவிட்டனர். மேலும் மத ரீதியாகவும் சீன அரசாங்கம் தங்களுக்கு எதிராக செயல்படுகிறது என்று பூர்வகுடி மக்கள் கூறுகின்றனர். தாடி வளர்க்கக் கூடாது, வாகனங்களில் பயணம் செய்யும் பெண்கள் பர்தா அணியக்கூடாது என்று அரசாங்கம் மதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை திணப்பதாக மக்கள் கூறுகின்றனர். இந்த பிரிவினைவாதத்திற்கு எதிராக சீன அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

**தேசியவாதத்திற்கு எதிரான சவால்கள்**: உள்நாட்டு சவால்கள், வெளிநாட்டு சவால்கள்.

**வெளிநாட்டு சவால்கள்**: WTO. சர்வதேச குடியேற்றம். சர்வதேச பிராந்திய அமைப்புகள். ஐக்கிய நாடுகள். தீவிரக் கொள்கைகள். சுற்றுசூழல் பிரச்சனைகள். தகவல் தொழில் நுட்பம்.

ஆர்.எம்.மேக்கைவர் பாசிசத்தை கீழ், நடு வர்க்கங்களின் இயக்கம் என்று வர்ணித்தார்.

பாசிச கொள்கை, மக்களாட்சி, சமதர்மவாதம் மற்றும் பொதுவுடைமையவாதத்திற்கு எதிராக தோன்றியது. மக்களாட்சியும், சமதர்மவாதமும் நவீன காலத்தின் முற்போக்கு சிந்தனையை பிரதிபலித்தன. பாசிசம் இதற்கு எதிராக செயல்பட்டது.

பாசிசம் தொழில்சார் அரசு கொள்கை என்று அழைக்கப்பட வேண்டும். தொழில் நிறுவனங்களும் அரசின் அதிகாரமும் பாசிசத்தில் இணைந்துள்ளன. – பெனிடோ முசோலினி.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. அரசு ஒரு அவசியமான தீமை என்று கருதிய கொள்கை எது?

(அ) எதிர்மறைத் தாராளவாதம் (ஆ) நேர்மறைத் தாராளவாதம்

(இ) மார்க்சியம் (ஈ) அதிகாரம் இல்லா கொள்கை

2. நேர்மறைத் தாராளவாதம் அரசை எவ்வகையான கருவியாக கருதியது?

(அ) சட்ட ஒழுங்கு (ஆ) சுரண்டல் (இ) சமூக நலன் (ஈ) புரட்சி

3. புதியத் தாராளவாதத்தை ஆதரித்தவர்கள்

(அ) நாக் (ஆ) நாசிக் (இ) பிரெட்ரிக் ஹேயக் (ஈ) மேற்கண்ட எல்லோரும்

4. மேலாதிக்கம் என்ற கருத்தை வலியுறுத்தியவர் யார்?

(அ) காரல் மார்க்ஸ் (ஆ) லெனின் (இ) ஆண்டனியோ கிராம்சி (ஈ) மாவோ சேதுங்

5. பொதுவுடைமைவாத கட்சி பொதுவுடைமைவாத புரட்சியின் முன்னணியில் இருந்து செயல்பட வேண்டும் என்று கூறியவர் யார்?

(அ) காரல் மார்க்ஸ் (ஆ) லெனின் (இ) மாவோ (ஈ) ஸ்டாலின்

6. பொதுவுடைமைவாத கொள்கைக்கு மாவோ வழங்கிய மிக முக்கிய பங்கு

(அ) பொதுவுடைமைவாதம் சீனமயமாதல் (ஆ) வரலாற்று பொருள் முதல் வாதம்

(இ) உபரி மதிப்பு (ஈ) மேற்கண்ட எதுவும் இல்லை

<u>**7. சரியாக பொருத்துக:**</u>

1. பெர்னாட்ஷா – அ. கற்பனை சமதர்மவாதம்

2. இராபர்ட் ஓவன் – ஆ. பரிணாம வளர்ச்சி சமதர்மவாதம்

3. எட்வர்ட் பெர்ன்ஸ்டென் – இ. கில்டு சமதர்மவாதம்

4. கோல் – ஈ. ஃபேபியன் சமதர்மவாதம்

(அ) 1–அ, 2–ஆ. 3–இ, 4–ஈ (ஆ) 1–ஈ, 2–அ, 3–ஆ. 4–இ

(இ) 1–அ, 2–ஈ, 3–இ, 4–ஆ (ஈ) 1–இ, 2–ஆ, 3–ஈ, 4–அ

8. ஃபேபியன் சமதர்மவாதம் எவருடைய பெயரால் உருவாக்கப்பட்டது?

(அ) ரோமானிய ஜெனரல் (ஆ) ரஷ்யன் ஜெனரல்

(இ) ஆங்கிலேய ஜெனரல் (ஈ) இந்தியன் ஜெனரல்

9. கில்டு சமதர்மவாதம் கீழ்கண்டவற்றில் எதை வலியுறுத்தியது?

(அ) நவீனமாக்கப்பட்ட இடைக்கால கில்டு அமைப்பு

(ஆ) கல்வி போன்ற பணிகளை செய்யும் அரசு

(இ) அமைதியான வழியில் மாற்றம்

(ஈ) மேற்கூறிய அனைத்தும்

10. கீழ்க்கண்டவர்களில் பொதுவுடைமைவாத சிந்தனையை ஆதரிக்காதவர் யார்?

(அ) காரல் பாப்பர் (ஆ) காரல் மார்க்ஸ் (இ) லுயி அல்துசர் (ஈ) ஆண்டனியோ கிராம்சி

11. கீழக்கண்டவற்றில் இந்திய வகையான சமதர்மவாதம் எது?

(அ) சிண்டிகலிசம் (ஆ) ஃபேபியன் சமதர்மவாதம்

(இ) சமதர்ம வடிவ சமுதாயம் (ஈ) கில்டு சமதர்மவாதம்

12. தேசியவாதத்தை "கற்பனை சமூகங்கள்" என்று வர்ணித்தவர் யார்?

(அ) காரல் டியுட்ஸ்ச் (ஆ) பெனடிக்ட் ஆண்டெர்சன் (இ) மைக்கல் மான் (ஈ) அந்தோணி கிடன்ஸ்

13. "பாட்டாளிக்கு தந்தை நாடு என்று ஒன்று இல்லை" என கூறியவர் யார்?

(அ) பெனடிக்ட் ஆண்டெர்சன் (ஆ) காரல் டியுட்ஸ்ச் (இ) அரிஸ்டாடில் (ஈ) காரல் மார்க்ஸ்

14. "எனது போராட்டம்" என்ற நுலை எழுதியவர் யார்?

(அ) காரல் மார்க்ஸ் (ஆ) பிளாட்டோ (இ) அடால்ஃப் ஹிட்லர் (ஈ) ஆடம் ஸ்மித்

15. நாசிசம் எதை ஆதரித்தது?

(அ) ஆரிய இன உயர்வு (ஆ) தேசிய சமத்துவம் (இ) யூத இன உயர்வு (ஈ) ஐரோப்பிய உயர்வு

16. கூற்று (அ): கிராம்சி மேலாதிக்கத்தை ஆதரிக்கிறார்

காரணம் (கூ): முன்னேறிய நாடுகள் வளர்ந்து வரும் நாடுகள் மீது ஆதிக்கத்தை செலுத்தலாம்

மேற்கூறிய இரண்டு வாக்கியங்களுள் ஒன்று கூற்றாகவும் (கூ) மற்றொன்று காரணமாகவும் (கா) உள்ளது. இந்த சூழலில் கீழ்க் கண்டவைகளுள் எது சரியானது என்று கூறுக.

(அ) கூற்று (கூ) காரணம் (கா) இரண்டுமே சரி, கூற்றுக்கான சரியான விளக்கமாக காரணம் உள்ளது.

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி ஆனால் கூற்றுக்கான சரியான விளக்கமாக காரணம் இல்லை

(இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (அ) எதிர்மறைத் தாராளவாதம் 2. (இ) சமூக நலன் 3. (ஈ) மேற்கண்டஎல்லோரும் 4. (இ) ஆண்டனியோ கிராம்சி 5. ஆ) லெனின் 6. (ஆ) வரலாற்று பொருள் முதல் வாதம் 7. (ஆ) 1–ஈ, 2–அ, 3–ஆ. 4–இ 8. (அ) ரோமானிய ஜெனரல் 9. மேற்கூறிய அனைத்தும் 10. (அ) காரல் பாப்பர் 11. (இ) சமதர்ம வடிவ சமுதாயம் 12. (ஆ) பெனடிக்ட் ஆண்டெர்சன் 13. (ஈ) காரல் மார்க்ஸ் 14. (இ) அடால்ஃப் ஹிட்லர் 15. (அ) ஆரிய இன உயர்வு 16. (இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

## அலகு – 9 அரசியல் கொள்கைகள் – பகுதி II

அதிகாரம் இருக்கும் இடத்தில் விடுதலை இருக்காது – பீட்டர் கிரோபோட்கின்

**அமைப்பெதிர்** – எல்லா வகையான அதிகாரங்களும் தேவையற்றது. விரும்பத்தகாதது. ஆகவே மனிதர்கள் மற்றும் குழுக்களின் ஒருங்கிணைப்பால் பரஸ்பர ஒத்துழைப்புடன் புதியதேர் சமுதாயத்தை படைக்க வேண்டும். அமைப்பெதிர் குழப்பமாகாது அமைப்பெதிர் அராஜகம் ஆகாது. அமைப்பெதிர் சுய உரிமை கோட்பாட்டின்படி வாழ்க்கையை மேற்கொள்வதாகும். அமைப்பெதிர் ஆதரவாளர்கள் எவ்வித விதிவிலக்கும் இல்லாமல் அதிகார அத்துமீறல்களை எதிர்ப்பவர்கள் ஆவர்.

பெண்களும் மனிதர்களே என்ற தீவிர கருத்துக்குப் பெயர் தான் பெண்ணியம். ஆணிற்கும், பெண்ணிற்கும் உள்ள சமத்துவத்தையும் முழு மனிதத்துவத்தையும் கண்டு கொள்பவர் தான் பெண்ணியவாதி ஆவார். – குளேரிஸ்டீபன்.

**<u>பெண்ணியத்தின் உண்மையான பொருள்:</u>** உண்மையான பெண்ணியம், தவறாக புரிந்து கொள்ளப்பட்ட பெண்ணியம்.

**<u>சுற்றுச்சூழல் பெண்ணியம்</u>**: "நாம் பெண்கள் தலைமையில் புவியில் அமைதியான வருங்காலத்தைப் பெறுவோம் அல்லது நமக்கு வருங்காலம் என்ற ஒன்றே இல்லாமல் போகும்" – வந்தனா சிவா.

**<u>பெண்ணியம்</u>**: தாராளவாதப் பெண்ணியம். மார்க்சியவாதப் பெண்ணியம். சுற்றுச் சூழல் பெண்ணியம். தீவிரவாதப் பெண்ணியம். பின் காலனியப் பெண்ணியம்.

இராபர்ட் டி.புட்னம் என்ற அறிஞர் சமுதாய வாதம் தோன்றுவதில் முக்கிய பங்காற்றினார். பௌலிங் எனப்படும் விளையாட்டை புட்னம் ஆய்வு செய்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு பெரும்பான்மையான அமெரிக்கர்கள் பௌலிங் விளையாடினார்கள். தங்களிடையே சமூக தொடர்புகள், அறிவு, திறமைகள் ஆகியவற்றை வளர்த்துக் கொள்வதற்கு பௌலிங் விளையாட்டை பயன்படுத்திக் கொண்டனர். நாளடைவில் தொலைக்காட்சி, வலைத்தளம் போன்ற புதிய வசதிகள், பொழுதுப்போக்கு கருவிகள் தோன்றின. அதிகமாக இந்த புதிய தொழில்நுட்ப பொழுதுப்போக்குகளில் மக்கள் ஆர்வம் செலுத்தினர். பௌலிங் விளையாட்டு மக்களிடையே செல்வாக்கை இழந்தது. மக்களின் சமூக நடவடிக்கைகள், தொடர்புகள் மறையத் தொடங்கின. காலப்போக்கில் அரசியல் ஆர்வமும் மக்களிடையே குறைந்தது. மக்களாட்சி வலுவாக இருக்க வேண்டும் என்றால் மக்களிடையிலான சமூகத் தொடர்புகள் அதிகமாக வேண்டும்.

**<u>சமுதாயவாதம்</u>**: உரிமைகள் மற்றும் கடமைகளை சமநிலைப்படுத்துதல்.

கடவுள் இறந்துவிட்டார், அவரை நாம் கொன்று விட்டோம். – பிரட்ரிக் நீட்சே.

உலகில் உண்மைகள் என்று எதுவும் கிடையாது. விளக்கங்கள் மட்டுமே உள்ளன. – பிரட்ரிக் நீட்சே.

**<u>தகர்ப்பமைப்பு</u>**: "வாசிப்பதற்கும், விளக்குவதற்கும், எழுதுவதற்கும் ஆன விதிகள்" – ஜாக் டெரிடா

எல்லோருடைய தேவைகளையும் இயற்கையால் பூர்த்திச் செய்ய முடியும். ஒருவருடைய பேராசையையும் அதனால் பூர்த்தி செய்ய முடியாது – மகாத்மா காந்தி.

பயன்பாட்டைக் குறைத்தல்(Reduce). மறுபயன்பாடு (Reuse). மறுசுழற்சி (Recycle).

தவறான பார்வை மனி முன்னிறுத்தல் மனித அகந்தை EGO.

சரியான பார்வை உயிர் முதன்மை சமத்துவம் சூழல் முதன்மை ECO.

மனிதர்கள் சுற்றுச்சூழலின் பகுதிகளாவர். வெற்றியாளர்கள் கிடையாது – ஆல்டோ லெபோல்ட்.

புவி நமக்குச் சொந்தமானது கிடையாது. நாம் தான் புவிக்கு சொந்தமானவர்கள்.

**<u>ஆழச்சூழலியல் – மேலோட்டமான சூழலியல் கருத்து முரண்பாடுகள்</u>**

| ஆழச்சூழலியலின் எட்டு முக்கிய கருத்துகளின் சுருக்கம் | மேலோட்டமான சுழலியலின் எட்டு முக்கிய கருத்துகளின் சுருக்கம் |
|---|---|
| 1. புவியில் உள்ள எல்லா உயிரினங்களும் அடிப்படை மதிப்பை பெற்று இருக்கின்றன. | 1. புவியில் உள்ள அனைத்து உயிரினங்களும் மனிதனின் தேவைக்காக உள்ளன |
| 2. இவ்வுலகில் உள்ள எல்லா உயிரினங்களும் (சிறியவையோ, பெரியவையோ) புவியின் சிறப்பு தன்மைக்கு முக்கிய பங்கை ஆற்றுகின்றன. | 2. சிறிய உயிரியனங்களை விட மனிதன் போன்ற பெரிய உயிரினங்கள் தான் முக்கியமானவைகள் ஆகும் |

| | |
|---|---|
| 3. மனிதர்கள் தங்களது அடிப்படை தேவைக்கு மட்டுமே மற்ற உயிரினங்களைப் பயன்படுத்த வேண்டும் | 3. மனிதர்கள் எல்லா இயற்கை வளங்களையும், உயிரினங்களையும் தங்களது பொருளாதார நலனுக்காக பயன்படுத்தலாம் |
| 4. உலகில் மனித மக்கள் தொகையை குறைப்பது மற்ற உயிரினங்களின் நலனுக்கு நல்லது ஆகும் | 4. மனித மக்கள் தொகை கட்டுப்பாடு இன்றி வளரலாம் |
| 5. உலகில் மனிதனின் தலையீடு அதிகமாகவும், மோசமாகவும் உள்ளது | 5. தொழில் நுட்ப வளர்ச்சி எல்லா சிக்கல்களையும் நீக்கும் |
| 6. பொருளாதாரம், தொழில்நுட்பம், கொள்கை ஆகிய துறைகளில் மனிதனின் கொள்கைகள் உடனடியாக, தீவிரமாக மாற்றப்பட வேண்டும் | 6. பொருளியல் வாதமும், நுகர் கலாச்சாரமும் மனித சமூகத்தை ஆள வேண்டும் |
| 7. வாழ்க்கையின் நிலையை விட வாழ்க்கை தரம் முக்கியமானது | 7. மனிதனின் வாழ்க்கை நிலை உயர்ந்து கொண்டே இருக்க வேண்டும் |
| 8. மேற்கண்ட உண்மைகளை உணர்ந்த அனைவரும் மாற்றத்தை கொண்டு வர முயற்சிக்க வேண்டும் | 8. சுற்றுச்சூழல் பிரச்சனைகளை நிபுணர்களிடம் விட்டுவிட வேண்டும். அவர்கள் தீர்வுகளை வழங்குவார்கள். மற்றவர்கள் சூழலியப் பிரச்சனைகளில் தலையிடக் கூடாது. |

**அரசியல் கோட்பாட்டியலில் சூழலியல்**: சமூகச் சூழலியல், நவீனச் சூழலியல், ஆழச் சூழலியல்.

**சமூகச் சூழலியல்**: சூழலிய சமதர்மவாதம் சூழலியலின் சமதர்மவாதம். சூழலிய அமைப்பெதிர்வாதம் அதிகாரம் சூழலியலின் எதிரி. சூழலியப் பெண்ணியம் ஆணாதிக்க சமதர்ம சூழலியலின் எதிரி.

வெட்டப்பட்ட மரத்தை விட வெட்டுண்ட மனித உயிர் முக்கியமானது அல்ல.

சுற்றுச்சூழல் தான் நிரந்தர பொருளாதாரம் ஆகும். – சுந்தர்லால் பகுகுணா.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. அமைப்பெதிர்வாதக் கொள்கை கீழ்க்கண்டவற்றில் எதனை ஆதரிக்கவில்லை?

(அ) அராஜகத்தை ஆதரிக்க வேண்டும்

(ஆ) இக்கொள்கை ஒழுங்கை ஆதரிக்கின்றது

(இ) மனிதர்கள் பரஸ்பர ஒத்துழைப்புடன் நன்றாக வாழ்வார்கள்

(ஈ) அரசை எதிர்க்கின்றது.

2. கீழ்க்கண்டவற்றில் அதிகாரமில்லாக் கொள்கையை ஆதரித்தவர் யார்?

(அ) காரல் மார்க்ஸ் (ஆ) ஜோசப் பிரௌதான் (ஆ) ஆதம் ஸ்மித் (ஈ) ஜான் லாக்

3. அமைப்பெதிர்வாதக் கொள்கை எந்த அமைப்பை சுரண்டல் தன்மை உள்ளது என எதிர்த்தது?

(அ) அரசு (ஆ) தனிச்சொத்துக்கள் (இ) மதம் (ஈ) மேற்கண்ட அனைத்தும்

4. பெண்ணியம் யாருடைய திறன், சக்தி ஏற்றத்தை ஆதரிக்கின்றது?

(அ) பெண்கள் (ஆ) குழந்தைகள் (இ) சிறுபான்மையினர் (ஈ) பழங்குடி மக்கள்

5. தனிப்பட்ட வாழ்விலும் அரசியல் என்பதன் பொருள்

(அ) நாம் அரசியலில் தலைவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை விவாதிக்க வேண்டும்

(ஆ) நாம் அரசியலில் நேர்மையை எதிர்ப்பார்க்க வேண்டும்

(இ) நாம் குடும்பத்திலும், அரசியலிலும் பெண்களுக்கான அரசியல் உரிமைகளைப் பற்றி பேச வேண்டும்

(ஈ) நாம் அரசியல் வாதிகளின் தனிப்பட்ட வாழ்க்கையைப் புறக்கணிக்க வேண்டும்.

6. பின் நவீனத்துவத்தின் தந்தை யார்?

(அ) ஜான் டெரிடா (Jacques Derrida) (ஆ) மிசல் பூக்கோ (Michel Foucault)

(இ) பிரீட்ரிக் நீட்சே (Friedrich Nietzsche) (ஈ) காரல் மார்க்ஸ் (Karl Marks)

7. ஆழுச் சூழலியல் என்ற கருத்தை உருவாக்கியவர் யார்?

(அ) மிசல் பூக்கோ (Michel Foucault (ஆ) இராபர்ட் டி புட்நம் (Robert D Putnam)

(இ) ஆட்ரி லார்ட் (Audre Lorde) (ஈ) ஆர்னே நியேஸ் (Arne Naess)

8. பின் நவீனத்துவம் பற்றிய தவறான கருத்து எது?

(அ) நவீனத்தை நிராகரிக்கின்றது

(ஆ) உண்மை என்று ஒன்று இல்லை. உண்மைகள் என்பது தான் சரி

(இ) சர்வதேச வாதத்தை எதிர்க்கின்றது

(ஈ) தனித்துவ வாதத்தை நிராகரிக்கின்றது

9. பின் நவீனத்துவம் எதனுடன் தொடர்பு உள்ளது?

(அ) அடையாள அரசியல் (ஆ) தேசிய அரசியல

(இ) சர்வதேச அரசியல (ஈ) வர்க்க அரசியல்

10. சமுதாய வாதம் எதனை நம்புகிறது?

(அ) மதம் (ஆ) சமுதாயம் (இ) வர்க்கம் (ஈ) மொழி

11. சமுதாயவாதத்தின் படி மனிதன்

(அ) அணுவைப் போன்று தனிமையானவன (அ) சுயநலமானவன

(இ) மதவாதி (ஈ) நேர்மறை உரிமைகள் உள்ளவன்

12. சமுதாயவாதம் ஆதரிப்பது

(அ) இயற்கை உரிமைகள் (ஆ) தார்மீக உரிமைகள

(இ) நேர்மறை உரிமைகள் (ஈ) பொருளாதார உரிமைகள்

**<u>13. பொருத்துக:</u>**

1. நவீனச் சூழலியல அ.உயிர் முதன்மை சமத்துவம்

2. ஆழச்சூழலியல் ஆ.மறுசுழற்சி

3. மேலோட்டமான சூழலியல் இ.மரத்தை கட்டிப்பிடி இயக்கம்

4. சிப்கோ இயக்கம் ஈ.நீடிய முன்னேற்றம்

14. அப்பிக்கோ இயக்கம் என்பது

(அ) காப்பாற்றுவதற்காக மரங்களைக் கட்டிப்பிடிங்கள்

(ஆ) ஏழை மக்களுக்கு உணவு கொடுங்கள்

(இ) எளியோருக்குக் கல்வியை கற்றுத் தாருங்கள்

(ஈ) மக்களின் நோய்களைச் சரியாக்குங்கள்

winmeen.com

15. இந்தியா, நமிபியா போன்ற நாடுகளுக்கு பொருத்தமான பெண்ணியம் எது?

(அ) பின்காலனியப் பெண்ணியம் (ஆ) தாராளவாதப் பெண்ணியம்

(இ) தீவிரப்பெண்ணியம் (ஈ) மார்க்சியப் பெண்ணியம்

**விடைகள்:**

**<u>I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. (அ) அராஜகத்தை ஆதரிக்க வேண்டும் 2. (ஆ) ஜோசப் பிரௌதான் 3. (ஈ) மேற்கண்ட அனைத்தும் 4. (அ) பெண்கள் 5. (இ) நாம் குடும்பத்திலும், அரசியலிலும் பெண்களுக்கான அரசியல் உரிமைகளைப் பற்றி பேச வேண்டும் 6. (இ) பிரீட்ரிக் நீட்சே (Friedrich Nietzsche) 7. (ஈ) ஆர்னே நியேஸ் (Arne Naess) 8. (ஈ) தனித்துவ வாதத்தை நிராகரிக்கின்றது 9. (அ) அடையாள அரசியல் 10. (இ) வர்க்கம் 11. (ஈ) நேர்மறை உரிமைகள் உள்ளவன் 12. (இ) நேர்மறை உரிமைகள் 13. 1–ஈ, 2–அ, 3–ஆ, 4–இ 14. (இ) எளியோருக்குக் கல்வியை கற்றுத் தாருங்கள் 15. (அ) பின்காலனியப் பெண்ணியம்

## அலகு – 10 பொதுக்கருத்து மற்றும் கட்சி முறை

ஓர் மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் மூலமாகவே பொதுக்கருத்துக்கள் வழிநடத்தப்படுகின்றன.

ஓர் அரசியல் கட்சி என்பது மக்களின் ஒன்றிணைந்த ஒரு குழுவாக தேர்தலில் போட்டியிட்டு அரசாங்கத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுகிறது. அவர்கள் சமுதாயத்திற்கான கூட்டு நலனை ஊக்குவிப்பதற்கான சில கொள்கைகளையும், திட்டங்களையும் ஒப்புக்கொள்கிறார்கள்.

**<u>கட்சி முறைகள்</u>**: ஒரு கட்சி முறை, இரு கட்சி முறை, பல கட்சி முறை.

மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு: அரசியல் கட்சியின் பொதுப்பதவிகளுக்காக வேட்பாளர்களை தேர்ந்தெடுத்து தேர்தலில் நிறுத்துகின்றன. அவை கட்சியின் பெயரில் அரசாங்க அதிகாரிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, ஒருதரப்படுத்த முயற்சி செய்கின்றன. பல அரசியல் அறிஞர்கள் கட்சிகள் மக்காளட்சிக்கு அவசியம் என்று நம்புகிறார்கள். அரசியல் கட்சி என்பது மக்களது இறையாண்மை மற்றும் பெரும்பான்மை ஆட்சியின் பிரதான கருவியாக ஒரு சிலரால் கருதப்படுகிறது. அரசியல் கட்சிகள் ஒழுங்காக வேலை செய்யும் பொழுது, மக்களின் இறையாண்மைக்கான அவசியமான கருவிகளாக அவை இருக்கலாம்.

அரசியல் கட்சிகளே மக்களாட்சியின் உந்து சக்திகள் ஆகும்.

பொதுக்கருத்தினை உருவாக்குவதற்கு அரசியல்வாதிகள் தங்களது பேச்சாற்றல் மற்றும் தலைமைத் திறன்களைப் பயன்படுத்துகின்றனர்.

**<u>இரு கட்சி முறை</u>**: உலகம் முழுவதும் அரிதானது ஆகும். தேசிய மற்றும் உள்ளாட்சி அளவில் சமமான நிலையில் உள்ளது. தேர்தல் அமைப்பு (முறைமை). வெற்றி பெற்றவர் அனைத்தையும் எடுத்துக் கொள்வர். வீணாக்கப்பட்ட வாக்கு. முன்னுரிமை அடிப்படையிலான அமைப்பு. தேர்தலுக்கு முன் பரந்த கூட்டணிகள் அமைக்கப்படுகின்றன. வாக்காளர்களின் கருத்து. மூன்றாவது கட்சியினருக்கு வாக்குச் சீட்டில் இடம் பெறுவது கடினமாக உள்ளது.

**<u>தென்னாப்பிரிக்காவின் அரசமைப்பு</u>**: 18 வயதில் அனைவருக்கும் வாக்குரிமை. பொதுவான வாக்காளர் பட்டியல். வழக்கமான தேர்தல். பொறுப்புணர்வு, பதிலுரைத்தல் மற்றும் வெளிப்படையான அரசாங்கத்தை உறுதிப்படுத்த பல கட்சி முறை மக்களாட்சி அவசியம்.

தலைமைப் பண்பும், சுற்றலும் ஒன்றோடு ஒன்று இன்றியமையாதவை – ஜான்.எஃப்.கென்னடி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. அரசியல் அதிகாரத்தை அடைவதே பொது நோக்கமாக கொண்ட மக்கள் குழு என்பது

(அ) அரசியல் கட்சி (ஆ) தன்னலக்குழு

(இ) பிரிவினைக் குழு (ஈ) அரசியல் தலைமைத்துவம்

2. கீழ்க்கண்டவற்றில் அரசியல் கட்சியில் முக்கிய அங்கம் எது?

(அ)தலைவர்கள் (ஆ) தொண்டர்கள் (இ) செயல் உறுப்பினர்கள் (ஈ) இவை அனைத்தும்

3. கீழ்க்கண்டவற்றில் அரசியல் கட்சியின் செயல்பாடு எது?

(அ) தேர்தலில் போட்டியிடுவது (ஆ) அரசாங்கத்தை அமைப்பது, இயக்குவதும்

(இ) பொதுக்கருத்துக்களை உருவாக்குதல் (ஈ) இவை அனைத்தும்

4. அரசாங்கத்தை இயக்கும் அரசியல் கட்சி என்பது

(அ) ஆளும் கட்சி (ஆ) தன்னலக் குழு (இ) எதிர்க்கட்சி (ஈ) பிரிவினைக் குழு

5. அரசியல் கட்சிகளின் எழுச்சியுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது ------------------

(அ) பிரதிநிதித்துவ மக்களாட்சிகளின் தோற்றம்

(ஆ) பெரிய அளவிலான சமுதாயங்கள்

(இ) அரசாங்கத்தை தடுத்து நிறுத்துவதற்கும், ஆதரவு தருவதற்குமான வழிமுறை

(ஈ) இவை அனைத்தும்

6. ஒரு கட்சி கொண்ட அமைப்பு முறை கொண்ட நாடு

(அ) சீனா (ஆ) இங்கிலாந்து (இ) அமெரிக்கா (ஈ) பிரான்சு

7. இரு கட்சி முறை கொண்ட நாடு

(அ) பாகிஸ்தான (ஆ) இந்தியா (இ) இங்கிலாந்து (ஈ) இவை எதுவும் இல்லை

8. கீழ்க்கண்டவற்றில் ஒரு கட்சி முறையைக் கொண்ட நாடு எது?

(அ) சீனா (ஆ) வடகொரியா (இ) கியூபா (ஈ) இவை அனைத்தும்

9. கீழ்க்கண்டவற்றில் பல கட்சி முறையைக் கொண்ட நாடு எது?

(அ) இந்தியா (ஆ) பாகிஸ்தான் (இ) பிரான்ஸ் (ஈ) இவை அனைத்தும்

10. காங்கிரசு கட்சியின் தேர்தல் சின்னம் என்ன?

(அ) தாமரை சின்னம் (ஆ) கை சின்னம் (இ) யானை சின்னம் (ஈ) கடிகார சின்னம்

11. "தாமரை" எந்த கட்சியின் அரசியல் சின்னமாக உள்ளது?

(அ) இந்திய தேசிய காங்கிரசு (ஆ) பகுஜன் சமாஜ் கட்சி

(இ) பாரதிய ஜனதா கட்சி (ஈ) சி.பி.ஐ.(எம்)

12. பொதுக்கருத்து என்பது முக்கிய பங்கு வகிப்பது ----------

(அ) மக்களாட்சி முறையில்

(ஆ) சர்வாதிகார முறையில்

(இ) மக்களாட்சி மற்றும் சர்வாதிகார முறை ஆகிய இரண்டிலும்

(ஈ) சுமூகமாக செயல்படும் அனைத்து வகையான அரசியல் முறைமைகளிலும்

13. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் முக்கிய அரசியல் கட்சிகள் எவை?

(அ) சுதந்திர மற்றும் மக்களாட்சிவாதிகள் (ஆ) குடியரசு மற்றும் மக்களாட்சிவாதிகள்

(இ) மக்களாட்சி மற்றும் சமதர்மவாதிகள் (ஈ) குடியரசு மற்றும் பொதுவுடைமைவாதிகள்

14. தேர்தலியல் எதை பற்றி கையாளிகிறது?

(அ) தேர்தல் மற்றும் தேர்தல் குறித்த புள்ளிவிவர பகுப்பாய்வு

(ஆ) கருத்து கணிப்புகள் மற்றும் தேர்தலுக்கு பிந்தைய வாக்கெடுப்புகள்

(இ) பொதுக்கருத்து

(ஈ) மேலே உள்ள அனைத்தும்

15. கூற்று (கூ) : அரசியல் கட்சிகள் பொதுக்கருத்தினை ஒன்றிணைக்கின்றன.

காரணம் (கா): பொதுக்கருத்து தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது

மேற்கூறிய இரண்டு வாக்கியங்களுள் ஒன்று கூற்றாகவும் (கூ) மற்றொன்று காரணமாகவும் (கா) உள்ளது. இந்த சூழலில் கீழ்க் கண்டவைகளுள் எது சரியானது என்று கூறுக.

(அ) கூற்று (கூ) காரணம் (கா) இரண்டுமே சரி, கூற்றுக்கான சரியான விளக்கமான காரணம் உள்ளது.

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி ஆனால் கூற்றுக்கான சரியான விளக்கமான காரணம் இல்லை

(இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

**விடைகள்:**

**<u>I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. (அ) அரசியல் கட்சி 2. (ஈ) இவை அனைத்தும் 3. (ஈ) இவை அனைத்தும் 4. (அ) ஆளும் கட்சி 5. (ஈ) இவை அனைத்தும் 6. (அ) சீனா 7 (ஈ) இவை எதுவும் இல்லை 8. (ஈ) இவை அனைத்தும் 9. (அ) இந்தியா 10. (ஆ) கை சின்னம் 11. (இ) பாரதிய ஜனதா கட்சி 12. (ஈ) சுமூகமாக செயல்படும் அனைத்து வகையான அரசியல் முறைமைகளிலும் 13. (ஆ) குடியரசு மற்றும் மக்களாட்சிவாதிகள் 14. (ஈ) மேலே உள்ள அனைத்தும் 15. (அ) கூற்று (கூ) காரணம் (கா) இரண்டுமே சரி, கூற்றுக்கான சரியான விளக்கமான காரணம் உள்ளது

## அலகு – 11 தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம்

இந்திய அரசமைப்பின் பகுதி XV உறுப்புகள் 324–329 தேர்தலைப் பற்றியதாகும்.

மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைகளுக்கும் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என இந்திய அரசமைப்பின் உறுப்பு 326 விளக்குகிறது.

தேர்தல்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் மற்றும் முடிவுகளை கற்றறியும் கல்வியே தேர்தலியல் ஆகும்.

FPTP (எப்.பி.டி.பி) என்பது பன்மைவாத/பெரும்பான்மைவாத வாக்காளர் முறையில் எளிமையான வடிவமாகும். இதில் ஒரு வேட்பாளர் செல்லத் தகுந்த வாக்குகளில் பிற வேட்பாளர்களைவ விட அதிக வாக்குகளை பெற்றிருந்தாலே வெற்றி பெற்றவர் ஆவார். அறுதிப் பெரும்பான்மை பெற வேண்டிய

அவசியமில்லை. இந்த முறை ஒரு உறுப்பின் தொகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது. இதில் வாக்காளர்க்ள கட்சிக்காக அல்லாமல் வேட்பாளருக்காகவே வாக்களிக்கின்றோம்.

தொகுதி வாக்கு என்பது ஓர் பன்மைத்துவ/பெரும்பான்மை முறைமையில் பல் உறுப்பினர் மாவட்டங்களில் பயன்படுத்தப்படுவதாகும். இதில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களுக்குத் தகுந்த வாக்குகள் வாக்காளர்களுக்கு இருக்கும். அதிகபட்ச எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் வெற்றி பெறுகிறார். பொதுவாக கட்சிகளைக் காட்டிலும் வேட்பாளருக்காக மக்கள் வாக்களித்தாலும் பெரும்பாலான முறைமைகளில் மக்கள் தங்களின் விருப்பத்திற்குத் தக்கவாறு வாக்களிக்கின்றனர்.

இருசுற்று முறை என்பது ஓர் பன்மைத்துவ/பெரும்பான்மை முறையாகும். இதில் முதல் சுற்றில் எக்கட்சி அல்லது வேட்பாளருக்கும் அறுதிப்பெரும்பான்மை (50 சதவீதத்திற்கு மேல் ஒரு சதவீதமேனும் பெற்றிருத்தல்) பெறாத நிலையில் இரண்டாவது சுற்று தேர்தல் நடைபெறும். இரு சுற்று முறை எப்போது பெரும்பான்மை, பன்மைத்துவ வடிவம் எடுக்குமெனில், ஒருவேளை இரண்டாம் சுற்றில் இரண்டு வேட்பாளர்களுக்கு மேல் போட்டியிடும் நிலையில் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெறுபவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இதில் அவர்கள் அறுதிப்பெரும்பான்மை பெற்றிருந்தாலும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

பஞ்சாயத்துகளைப் போன்று மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும் இருக்க வேண்டாமா?

<u>**இந்திய தேர்தலின் அடிப்படை கொள்கைகள்:**</u> தொகுதிக்கு ஓர் வாக்காளர் பட்டியல் இருக்கும். ஓர் தொகுதிக்கு மேல் யாரும் வாக்காளராகத் தங்களை பதிவு செய்ய இயலாது. பதினெட்டு வயது நிரம்பிய இந்திய குடிமக்கள் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் என்பது வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் இருக்க வேண்டும். பட்டியல் இனத்தவர்/பழங்குடியினர் ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டினை மக்களவை அல்லது மாநில சட்டப்பேரவைகளில் அரசுகள் ஏற்படுத்த வேண்டும். வகுப்புவாரி, தனி அல்லது சிறப்பு பிரதிநிதித்துவத்திற்கான அம்சங்கள் கிடையாது.

எந்த அரசமைப்புச் சட்ட திருத்தத்தின் மூலமாக இந்திய குடிமக்களின் வாக்களிக்கும் வயது இருபத்தி ஒன்றிலிருந்து பதினெட்டாகக் குறைக்கப்பட்டது.

இந்தியாவின் முதலாவது பொதுத் தேர்தல்கள் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியவை. இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் 1951–52ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்று முதலாவது மக்களவை தேர்ந்தெடுக்கப்பட்டது. மொத்தமுள்ள 489 மக்களவை இடங்களில் காங்கிரஸ் கட்சி 364 இடங்களில் வெற்றி பெற்றது. இது மொத்த வாக்குப்பதிவில் 45 சதவீதமாகும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 16 இடங்களில் வெற்றி பெற்று இரண்டாமிடம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக ஜவஹர்லால் நேரு பதவியேற்றார். இத்தேர்தலில் 67.6 சதவீத வாக்குப்பதிவு நடைபெற்றது. 54 கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டன. ஏறத்ிழ நான்கு மாதங்கள் தேர்தல் நடைபெற்றது. அக்டோபர் 25, 1951, முதல் பிப்ரவரி 21, 1952 வரை இத்தேர்தல்கள் நடந்தன. 26 இந்திய மாநிலங்கள் மற்றும் 401 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

<u>**இந்திய தேர்தல் ஆணையத்தின் அமைப்பு:**</u> பல உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு. நியமனம் மற்றும் பதவிக்காலம். புதவி நீக்கம்.

<u>**பல உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு**</u>: தலைமைத் தேர்தல் ஆணையாளர். இரண்டு தேர்தல் ஆணையாளர்கள்.

**<u>நியமனம் மற்றும் பதவிக்காலம்</u>**: குடியரசுத் தலைவரால் நியமனம். ஆறுவருடங்கள் அல்லது 65 வயது (இதில் முந்தையது).

**<u>பதவி நீக்கம்</u>**: தலைமைத் தேர்தல் ஆணையாளர்கள் – பதவிநீக்க நடைமுறை. பிற தேர்தல் ஆணையாளர்கள் – தலைமைத் தேர்தல் ஆணையாளரின் பரிந்துரை.

| தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் விவரங்கள் | | |
|---|---|---|
| **தேர்தலின் எண்ணிக்கை** | **சபையின் பதவிக்காலம்** | **தேர்தல் தேதிகள்** |
| | 1952–1957 | 1952 ஜனவரி 2,5,8,9,11,12,16, 21 மற்றும் 25 (9 நாட்கள்) |
| | 1957–1962 | 1957 மார்ச் 1,4,6,8 மற்றும் 11 (5 நாட்கள்) |
| | 1962–1967 | 1962 பிப்ரவரி 17,19,21 மற்றும் 24 (4 நாட்கள்) |
| | 1967–1971 | 1967 பிப்ரவரி 5,16 மற்றும் 21 (3 நாட்கள்) |
| | 1971–1976 | 1971 மார்ச் 1,4 மற்றும் 7 (3 நாட்கள்) |
| | 1977–1980 | 1977 ஜீன் 12 மற்றும் 14 (2 நாட்கள்) |
| | 1980–1984 | 1980 மே 20 மற்றும் 31 (2 நாட்கள்) |
| | 1985–1986 | 1984 டிசம்பர் 24 ( 1 நாள் மட்டும்) |
| | 1989–1991 | 1969 ஜனவரி 21 (1 நாள் மட்டும்) |
| | 1991–1996 | 1991 ஜீன் 16 (1 நாள் மட்டும்) |
| | 1996–2001 | 1996 ஏப்ரல் 27 மற்றும் மே 2 (2 நாட்கள்) |
| | 2001–2006 | 2001 மே 10 (1 நாள் மட்டும்) |
| | 2006–2011 | 2006 மே 8 (1 நாள் மட்டும்) |
| | 2011–2016 | 2011 ஏப்ரல் 13 (1நாள் மட்டும்) |
| | 2016 தற்போதுவரை | 2016 மே 16 (1 நாள் மட்டும்) |

அரசியலைத் தூய்மைப்படுத்துவதற்கான உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு. ஜீலை 11, 2013ல் உச்ச நீதிமன்றம் வெளியிட்ட ஓர் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பில் சிறை அல்லது காவல் துறையினரின் விசாரணையில் இருக்கும் ஒருவர் சட்ட மன்றம் அல்லது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது என தீர்ப்பளித்துள்ளது. ஒரு நாள் முன்னதாக, ஜீலை 10,2013–ல் அதே அமர்வு வழங்கிய தீர்ப்பில் தங்களின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பின், நாடாளுமன்ற, சட்டப்பேரவை அல்லது சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் குற்றங்களுக்கான தண்டனை பற்றிய தீர்ப்பு வழங்கப்பட்டவுடன் அப்பொதுப் பதவிகளை வகிப்பதிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவர். இப்பிரிவு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தம்மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்பட்டால் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கும். மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 8(4) ஐ இந்த அமர்வு நிராகரிப்பு.

வெளிப்படையாக வாக்களிக்கும் முறை என்பது கைகளை உயர்த்துவதன் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையாகும். ரகசிய வாக்கெடுப்பு முறையில் ஓர் வாக்காளர் தனது வாக்கினைப் பிறர் அறியாதவாறு வாக்குப்பெட்டி அல்லது மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் அளிக்கிறார்.

'நோட்டாவை'ப் போன்று முன்னரே வேறொரு அம்சம் இருந்ததை நீங்கள் அறிவீர்களா? அது "எதிர்மறை வாக்களித்தல்"(Negative Voting) என அழைக்கப்படுகிறது. மேற்கண்டவர்களுள் எவருமில்லை (None of the above NOTA) தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் நிராகரிக்கும் வாக்களரின் உரிமை.

மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் தரப்பட்டுள்ள வேட்பாளர்கள் பட்டியலின் இறுதியில் நோட்டா வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

**நோட்டாவை அனுமதிக்கும் நாடுகளை அறிவீர்களா?** கொலம்பியா, உக்ரைன், பிரேசில், வங்கதேசம், பின்லாந்து, ஸ்பெயின், ஸ்வீடன், சிலி, பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகள் நோட்டாவைப் பின்பற்றின. சில சமயங்களில் அமெரிக்காவும் இதனை அனுமதித்தது. 1975–ம் ஆண்டு முதல் டெக்சாஸ் மாகாணம் இந்த அம்சங்களைப் பின்பற்றி வருகிறது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. "வாக்குரிமை" என்னும் சொல் -------- ஆகியவற்றிலிருந்து தோன்றியதாகும்.

(அ) ஆங்கிலோ–பிரெஞ்சு (ஆ) ஆங்கிலோ–இந்தியன்

(இ) ஆங்கிலோ–ஜெர்மன் (ஈ) ஆங்கிலோ–இத்தாலியன்

2. இந்திய அரசமைப்பின் பகுதி XV ------ பற்றியதாகும்.

(அ) தேர்தல்கள் (ஆ) குடியுரிமை

(இ) அடிப்படை உரிமைகள் (ஈ) அரசு வழிகாட்டி நெறிமுறைகள்

3. "தேர்தலியல்" என்பது ------- பற்றிய கல்வியாகும்

(அ) தேர்தல்கள் (ஆ) அரசமைப்பு (இ) அரசு (ஈ) உரிமைகள்

4. -------- என்பது பன்மைத்துவ பெரும்பான்மை தேர்தல் முறைகளின் எளிமையான வடிவமாகும்.

(அ) முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (ஆ) தொகுப்பு வாக்கு

(இ) கட்சி தொகுப்பு வாக்கு (ஈ) வரையறுக்கப்பட்ட வாக்கு முறை

5. முதலாவது வரையறை ஆணையச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ----------- ஆகும்.

(அ) 1952 (ஆ) 1963 (இ) 1973 (ஈ) 2002

6. தகுதியுள்ள வாக்காளர்களின் பட்டியல் ------- என அழைக்கப்படுகிறது.

(அ) வாக்காளர் பட்டியல் (ஆ) பரப்புரை பட்டியல்

(இ) வாக்களிப்பு பட்டியல் (ஈ) நியமனப் பட்டியல்

7. இந்திய குடிமக்களின் வாக்களிக்கும் வயதினை 21 லிருந்து 18 ஆக குறைந்த அரசமைப்பு சட்டத்திருத்தம் எது?

(அ) 61 (ஆ) 42 (இ) 91 (ஈ) 73

8. இந்தியாவிற்கு ஒரே தேர்தல் ஆணையம் வேண்டும் எனக்கூறும் அரசமைப்பு உறுப்பு எது?

(அ) உறுப்பு 324 (ஆ) உறுப்பு 256 (இ) உறுப்பு 370 (ஈ) உறுப்பு 360

9. 52வது அரசமைப்புச் சட்டத்திருத்தம், 1985 ---------- பற்றியதாகும்.

(அ) கட்சித்தாவல் தடைச்சட்டம் (ஆ) தேர்தல் முறைகள்

(இ) தேர்தல் சீர்த்திருத்தங்கள் (ஈ) தேர்தல் பரப்புரை

10. ஓர் உறுப்பினரின் மறைவு அல்லது பதவி விலகலால் வரும் தேர்தல் ------- என அழைக்கப்படுகிறது.

(அ) இடைத்தேர்தல் (ஆ) மறுதேர்தல் (இ) தேர்தல் ரத்து (ஈ) வார்டு தேர்தல்

11. பஞ்சாயத்து அமைப்புகளில் பெண்களுக்கு ---------- இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

(அ) 1/3 (ஆ) 1/4 (இ) 2/3 (ஈ) 3/4

12. இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையாளரை --------- நியமிக்கிறார்.

(அ) இந்தியக் குடியரசுத் தலைவர் (ஆ) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி

(இ) பிரதமர் (ஈ) தலைமைச்செயலாளர்

13. இந்திரஜித் குப்தா குழு, 1998 ----------- தொடர்பானதாகும்.

(அ) தேர்தல் சீர்த்திருத்தங்கள் (ஆ) கட்சித்தாவல் (இ) FPTP முறை (ஈ) ரகசிய வாக்கெடுப்பு

14. இந்தியாவில் முதலாவது பொதுத் தேர்தல்கள் ------------- ஆண்டு நடைபெற்றது

(அ) 1952 (ஆ) 1951 (இ) 1950 (ஈ) 1947

15. அரசின் நிதியுதவியுடனான தேர்தல்களை --------- குழு ஆதரித்தது.

(அ) இந்திரஜித் குப்தா குழு (ஆ) வோரா குழு (இ) தார்குந்த குழு (ஈ) டங்கா குழு

16. கூற்று (கூ): இந்திய நாடாளுமன்றம் ஈரவைகளைக் கொண்டதாகும்.

காரணம் (கா): கீழவையாக மக்களவையும், மேலவையாக மாநிலங்களையும் உள்ளன.

(அ) (கூ) மற்றும் (கா) இரண்டு உண்மையாகும். (கா) என்பது (கூ) என்பதன் சரியான விளக்கமாகும்

(ஆ) (கூ) மற்றும் (கா) இரண்டும் உண்மையாகும். (கா) என்பது (கூ) யின் சரியான விளக்கம் அல்ல.

(இ) (கூ) என்பது உண்மையாகும். (கா) என்பது தவறாகும்

(ஈ) (கூ) என்பது தவறாகும். (கா) என்பது உண்மையாகும்.

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (அ) ஆங்கிலோ–பிரெஞ்சு 2. (அ) தேர்தல்கள் 3. (அ) தேர்தல்கள் 4. (அ) முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் 5. (அ) 1952 6. (அ) வாக்காளர் பட்டியல் 7. (அ) 61 8. (அ) உறுப்பு 324 9. (அ) கட்சித்தாவல் தடைச்சட்டம் 10. (அ) இடைத்தேர்தல் 11. (அ) 1/3 12. (அ) இந்தியக் குடியரசுத் தலைவர் 13. (அ) தேர்தல் சீர்த்திருத்தங்கள் 14. (ஆ) 1951 15. (அ) இந்திரஜித் குப்தா குழு 16. (அ) (கூ) மற்றும் (கா) இரண்டு உண்மையாகும். (கா) என்பது (கூ) என்பதன் சரியான விளக்கமாகும்.

## அலகு – 12 உள்ளாட்சி அரசாங்கங்கள்

**உள்ளாட்சி அரசாங்கங்கள்**: நகரம், கிராமப்புறம்.

**நகரம்**: மாநகராட்சிகள். நகராட்சிகள். நகரியங்கள். பேரூராட்சிகள். பாளைய வாரியங்கள்

**கிராமப்புறம்**: மாவட்ட பஞ்சாயத்து. பஞ்சாயத்து யூனியன். கிராம பஞ்சாயத்து. வார்டு.

**முழுமையான சுகாதாரத்தை நோக்கி**: ஒன்றிணைந்த குறைந்த செலவினத்திலான சுகாதார திட்டத்தின் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் மூலம் மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையை 2010–ம் ஆண்டுக்குள் நீக்கும் நோக்கத்தில் உலர் கழிவறைகளை அமைக்க மானியங்களை உயர்த்தி வழங்குதல். ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் அனைத்து குடிசைப்பகுதிகளுக்கும் அடிப்படை தேவைகளை (குடிநீர், துப்புரவு, கழிவு நீரகற்றல், மின்சாரம், ஆரோக்கியம், சமூக பாதுகாப்பு

மற்றும் வீடு வழங்குதல்). (நகர்புற ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குதல் மேலும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி திட்டம்) மேலும் "ராஜீவ் ஆவாஸ் யோஜனா" திட்டம் மூலம் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறை ஒவ்வொரு வீட்டுக்கும் வழங்குதல். ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் வடிகால், சுகாதாரம் மற்றும் உலர் கழிவு மேலாண்மை வசதிகளை மேம்படுத்துதல் (சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான கட்டமைப்பு, ஆளுகை மற்றும் நகர்ப்புற கட்டமைப்பு வளர்ச்சி திட்டம்). முழுமையான சுகாதார கொள்கை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது.

இந்தியாவின் 2011–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 2,50,000 கிராம பஞ்சாயத்துகள் உள்ளன.

இரட்டை ஆட்சி முஐற மூலமாக நிர்வாக துறைகள் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட துறைகள் எனவும், மாகாண அரசுகளுக்கு மாற்றி தரப்பட்ட துறைகள் எனவும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. காவல், சட்டம் ஒழுங்கு, நிதி போன்ற துறைகள் ஒதுக்கப்பட்ட துறைகள் எனப்படும். அவை ஆளுநரின் வசம் இருக்கும். கல்வி மற்றும் பிற துறைகள் மாற்றித் தரப்பட்ட துறைகளாகும். அவை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இருக்கும்.

**<u>பஞ்சாயத்து ராஜ் (1959–2009)</u>**: பொன் விழா ஆண்டு – அக்டோபர் 02, 1959ஆம் நாள் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ராஜஸ்தான் மாநிலம் நகவுரில் பஞ்சாயத்து ராஜ்–க்கு அடிக்கல் நாட்டினர். ஊரக இந்தியாவை ஆள்வதில் இது ஒரு புரட்சிகரமான படியாகும். கிராமங்களின் முழுமையான வளர்ச்சி மற்றும் மக்களின் கைகளில் அதிகாரத்தை அளித்தல் என்ற நோக்குடனான இந்த பயணம் அன்று தொடங்கியது.

**<u>73–வது அரசமைப்பு சட்ட திருத்தத்தினால் (1991) ஏற்படுத்தப்பட்ட மூன்றடுக்கு பஞ்சாயத் ராஜ் அமைப்பு</u>**: மாவட்ட பஞ்சாயத்துகள் (தேர்ந்தெடுக்கப்பட்டோர் மற்றும் நியமிக்கப்பட்டோர்). ஊராட்சி ஒன்றிய குழு (தேர்ந்தெடுக்கப்பட்டோர்). கிராம பஞ்சாயத்து (தேர்ந்தெடுக்கப்பட்டோர்). கிராம சபை (ஒரு கிராமத்தின் அனைத்து வாக்காளர்களும்) (ஆலோசனை அமைப்பு)

கிராம சபை கூட்டங்கள் ஆண்டிற்கு நான்கு முறை ஜனவரி 26 குடியரசு தினம், மே 1 உழைப்பாளர் தினம், ஆகஸ்ட் 15 சுதந்திர தினம் மற்றும் அக்டோபர் 2 காந்தி ஜெயந்தி ஆகிய நாட்களில் நடத்தப்படுகிறது.

**<u>பதினோராவது அட்டவணை (பிரிவு 243G)</u>**: விவசாயம் மற்றும் விவசாய விரிவாக்க பணிகள். நில மேம்பாடு, நிலச்சீர்திருத்தங்களை அமல்படுத்துதல், நிலங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் பேணுதல். சிறிய நீர் பாசனங்களை நிர்வகித்தல், நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல். கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் பால் பண்ணை. மீன்வளம். சமூக காடுகள் மற்றும் பண்ணை காடுகள். சிறு காடுகளின் மூலமான உற்பத்தி. சிறு தொழில்கள், உணவு பதப்படுத்தும் தொழில்கள் உட்பட. காதி, கிராமம் மற்றும் குடிசைத் தொழில்கள். ஊரக வீட்டு வசதி. குடிநீர். எரிபொருள் மற்றும் கால்நடை தீவனம். சாலைகள், சிறுபாலங்கள், பெரிய பாலங்கள், படகு, நீர்வழிகள். ஊரக மின்மயமாக்கல் மற்றும் மின் விநியோகம். மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள். வறுமை ஒழிப்பு திட்டங்கள். தொடக்க கல்வி மற்றும் மேல் நிலைக் கல்வி. தொழில்நுட்ப பயிற்சி மற்றும் தொழில் கல்வி. நூலகங்கள். கலாச்சார நடவடிக்கைகள். சுகாதாரம் மற்றும் துப்புரவு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் மருந்தகங்கள் உட்பட. குடும்ப நலன். பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு. சமூக நலம்; மாற்றுத்திறனாளிகள் மற்றும் மன நலம் குன்றியோர் நலம் உட்பட. நலிவடைந்த பிரிவினரின் நலம் குறிப்பாக பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர். பொது விநியோக முறை. சமுதாய சொத்துக்களை நிர்வகித்தல்.

| நகராட்சி நிலை | மக்கள் தொகை |
|---|---|
| வகையினம் அ | ஒரு லட்சமும் அதற்கு மேலும் |

| | |
|---|---|
| வகையினம் ஆ | 50,000 முதல் 1 லட்சம் வரை |
| வகையினம் இ | 50,000 க்கு கீழ் |

**அரசமைப்பின் 12–வது அட்டவணை: நகராட்சியின் அதிகாரமும் – பொறுப்புகளும்:** நகரத் திட்டங்கள், நகரத்தை வடிவமைத்தல். கட்டங்களை கட்டுதல், நிலத்தை பயன்படுத்துதலை ஒழுங்குமுறைபடுத்துதல். பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கு திட்டமிடல். சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல். வீட்டு உபயோகத்திற்கு குடிநீர் விநியோகம் செய்தல். பொதுச்சுகாதாரம் மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்ளுதல். தீயணைப்பு பணிகள். நகர்புற காடு மற்றும் சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல். சமூகத்தில் நலிவடைந்தோர், ஊனமுற்றோர், மனநிலை குன்றியவர்கள் நலன்களை பாதுகாத்தல். குடிசைப் பகுதிகளை மேம்படுத்துதல், தரத்தை உயர்த்துதல். நகர்புற வறுமை ஒழிப்பு. பூங்காக்கள், தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற நகர்புற வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல். கல்வி மற்றும் கலாச்சார அம்சங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல். இடுகாடு மற்றும் சுடுகாடு மைதானங்களை பராமரித்தல். கால்நடைக்கான குடிநீர் குட்டைகள் அமைத்தல் மிருகவதையை தடை செய்தல். பிறப்பு, இறப்பு ஆகியவற்றின் பதிவுடன் கூடிய மிக முக்கியமான புள்ளி விவரங்களைச் சேகரித்தல். பேருந்து நிறுத்துமிடங்கள், கழிவறை, சாலை விளக்கு போன்ற பொது வசதிகளை செய்து கொடுத்தல். வதை கூடங்கள் மற்றும் தோல் பதனிடும் தொழில்களை ஒழுங்குபடுத்துதல்.

**நகரங்கள் எதிர்கொள்ளும் ஐந்து வகை சவால்கள்:** மாநாகராட்சிகளில் உள்ள பொதுப் பயன்பாடு வசதிகளான சாலைகள், நடைபாதைகள், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பாதாள சாக்கடை திட்டங்கள் போன்றவற்றில் நவீன காலத்திற்கு ஏற்றவாறு திட்டமிடுதலில் குறைபாடுகள். நிதிசார் பொறுப்புடைமை மற்றும் நிதி ஆதாரங்கள் வலுவற்று இருத்தல். பணியாளர் எண்ணிக்கை, திறமை மற்றும் போட்டியிடும் தன்மை, நிர்வாக வடிவமைப்பு போன்ற மனிதவள மேலாண்மை தொடர்புடையவைகள் பலவீனமாக இருத்தல. அதிகாரமற்ற மேயர்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்கள், நகராட்சிகள் மற்றும் மாநில அரசின் துறைகளில் ஆளுகைகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருத்தல். குடிமக்களின் முறையான பங்கேற்பிற்கு வழியின்மை மற்றும் வெளிப்படை தன்மையற்ற நிதி செயல்பாடு.

தமிழ்நாட்டில் 12,620 கிராம பஞ்சாயத்தும், 385 ஊராட்சி ஒன்றியமும், 30 மாவட்ட பஞ்சாத்தும் உள்ளது.

**பஞ்சாயத்து ராஜ் (1959–2018)**: தமிழ்நாடு நகர்ப்புற சட்டங்கள் (நான்காவது சட்டத்திருத்தம்) மசோதா 2018 மற்றும் தமிழ்நாடு பஞ்சாயத்துகள் (இரண்டாவது சட்டத்திருத்தம்) மசோதா 2018 இரண்டும் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்பு அதிகாரங்களின் பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்தது.

15 மாநகராட்சிகளும், 152 நகராட்சிகளும், 561 பேரூராட்சிகளும் தமிழகத்தின் நகர உள்ளாட்சி அமைப்புகளாக உள்ளன.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. எப்பொழுது சென்னை மாநகராட்சி உருவாக்கப்பட்டது?

(அ) 1870 (ஆ) 1882 (இ) 1687 (ஈ) 1992

2. எப்போது ரிப்பன் பிரபு தீர்மானம் ஏற்கப்பட்டது?

(அ) 1992 (ஆ) 1858 (இ) 1882 (ஈ) 1870

3. எதன் மூலம் இரட்டை ஆட்சி முதலில் ஏற்படுத்தப்பட்டது

(அ) இந்திய அரசாங்க சட்டம் 1909 (ஆ) இந்திய அரசாங்க சட்டம் 1919

(இ) இந்திய அரசாங்க சட்டம் 1935 (ஈ) இந்திய அரசாங்க சட்டம் 1958

4. நகர்பாலிகா சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு

(அ) 1989 (ஆ) 1990 (இ) 1991 (ஈ) 1992

5. 73 மற்றும் 74வது சட்டத்திருத்தத்தில் உள்ளாட்சி அமைப்பில் பெண்களுக்கு எவ்வளவு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது?

(அ) 45 (ஆ) 50

(இ) 20 (ஈ) தொகுதியில் பெண்களின் மக்கள் தொகையின் அடிப்படையில் வழங்கப்பட்டது

6. மாநில நிதி ஆணையத்தின் பொறுப்புகள்

(அ) வரி வருவாய் மாநில அரசுக்கும், உள்ளாட்சி அமைப்புக்கும் பகிர்தல் தொடர்பான பரிந்துரை

(ஆ) தேர்தல் குறித்த பிரச்சனையில் மாநில அரசுக்கு பரிந்துரைகள்

(இ) நிதி நெருக்கடி நிலை பிரகடணம் குறித்து இந்திய குடியரசு தலைவருக்கு பரிந்துரைத்தல்

(ஈ) மாநில அரசின் சட்டம் ஒழுங்கு நிதிநிலை குறித்து முதல்வருக்கும் பரிந்துரைத்தல்

7. மாவட்ட திட்டக்குழு கீழ்வருவனவற்றால் உருவாக்கப்பட்டது

(அ) 73–வது அரசமைப்பு சட்டத்திருத்தம் (ஆ) 73–வது அரசமைப்பு சட்டத்திருத்தம்

(இ) 89–வது அரசமைப்பு சட்டத்திருத்தம் (ஈ) 94–வது அரசமைப்பு சட்டத்திருத்தம்

8. ஜவகர் ரோஜ்கர் யோஜ்னா

(அ) வேலைவாய்ப்புக்கு உத்திரவாதமளித்தல் அழித்தல்

(ஆ) பொதுத்துறை வங்கியில் கடன் பெறுதல்

(இ) வீடு கட்டுதல்

(ஈ) வெளிநாட்டில் வேலை பெறுதல்

9. எவ்வாறு டெல்லி வளர்ச்சி அமைப்பு 1957 டிசம்பர் 30–ல் உருவாக்கப்பட்டது.

(அ) டில்லி சட்டமன்றத்தின் மூலம் (ஆ) இந்திய குடியரசு தலைவரின் நிர்வாக உத்தரவின் பேரில்

(இ) பாராளுமன்ற சட்டத்தின் மூலம் (ஈ) டில்லியின் துணை நிலை ஆளுநர் மூலம்

10. கீழ் வரும் எந்த தேர்தலில் அரசியில் கட்சிகளுக்கு பங்கு இல்லை?

(அ) மாநகராட்சி மேயல் தேர்தல்

(ஆ) நகராட்சி தேர்தல்

(இ) பஞ்சாயத்து தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் தேர்தல்

(ஈ) மாவட்ட வார்டு உறுப்பினர் தேர்தல்

11. உள்ளாட்சி அமைப்பின் தந்தை என கருதப்படுவர் யார்?

(அ) மேயோ பிரபு (ஆ) ராபர்ட் கிளைவ் (இ) வாரன் ஹெஸ்டிங் (ஈ) ரிப்பன் பிரபு

12. மாநிலங்களில் உள்ளாட்சி தேர்தலை நடத்துவது

(அ) மாநில தேர்தல் ஆணையம் (ஆ) இந்திய தேர்தல் ஆணையம்

(இ) தலைமை தேர்தல் அதிகாரி (ஈ) மாநில அரசாங்கம்

13. இந்தியா அரசமைப்பில் உள்ளாட்சி அரசாங்கம் குறித்த சட்ட விதிமுறைகள் யாவை?

(அ) உறுப்பு 40, உறுப்பு 243 முதல் 243 (O), உறுப்பு 243 (P) முதல் 243 ZG

(ஆ) உறுப்பு 300 உறுப்பு 300 A

(இ) உறுப்பு 3, உறுப்பு 43

(ஈ) உறுப்ப 32, உறுப்பு 117 (1)

14. அரசமைப்பு சட்டத்தின்படி மூன்று அடுக்குகளை கொண்ட பஞ்சாயத் ராஜ் அமைப்பினை பொருத்துக:

(அ) கிராம பஞ்சாயத்து–இடைநிலை பஞ்சாயத்து–மாவட்ட பஞ்சாயத்து

(ஆ) ஊராட்சி ஒன்றியம்–மாவட்ட பஞ்சாயத்து–கிராம பஞ்சாயத்து

(இ) மாவட்ட பஞ்சாயத்து–கிராம பஞ்சாயத்து–இடைநிலை பஞ்சாயத்து

(ஈ) கிராம பஞ்சாயத்து–நகர பஞ்சாயத்து–மாவட்ட பஞ்சாயத்து இடைநிலை பஞ்சாயத்து

15. அ) கூற்று: 73–வது திருத்தத்தின் மூலம் உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

ஆ) காரணம்: மக்களாட்சியானது உள்ளாட்சி அரசாங்கங்களின் மூலம் அடித்தட்டு மக்களை சென்றடைந்தது.

அமைப்பு விளக்கம் (அ) என்றும் காரணம் (ஆ) எனவும் பின் வருவனவற்றுள் எது சரியானவை?

(அ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது

(ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது. ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை.

(இ) (அ) என்பது சரி ஆனால் (ஆ) சரியானது

(ஈ) (அ) சரியில்லை ஆனால் (ஆ) சரியானது

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (இ) 1687 2. (இ) 1882 3. (ஆ) இந்திய அரசாங்க சட்டம் 1919 4. (அ) 1989 5. (இ) 20 6. (அ) வரி வருவாய் மாநில அரசுக்கும், உள்ளாட்சி அமைப்புக்கும் பகிர்தல் தொடர்பான பரிந்துரை 7. (ஆ) 73–வது அரசமைப்பு சட்டத்திருத்தம் 8. (அ) வேலைவாய்ப்புக்கு உத்திரவாதமளித்தல் அழித்தல் 9. (இ) பாராளுமன்ற சட்டத்தின் மூலம் 10. (இ) பஞ்சாயத்து தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் தேர்தல் 11. (ஈ) ரிப்பன் பிரபு 12. (அ) மாநில தேர்தல் ஆணையம் 13. (அ) உறுப்பு 40, உறுப்பு 243 முதல் 243 (O), உறுப்பு 243 (P) முதல் 243 ZG 14. (ஆ) ஊராட்சி ஒன்றியம்–மாவட்ட பஞ்சாயத்து–கிராம பஞ்சாயத்து 15. (அ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது

## அலகு – 13 சமூக நீதி

இன, மத, மொழி சிறுபான்மையினருக்கான ஐ.நா.பிரகடனம் – டிசம்பர் 18, 1992

**பிரகடனத்தின் முக்கிய அம்சங்கள்:** சிறுபான்மை மக்கள் தனிப்பட்ட முறையிலும் பொதுவாழ்விலும் எந்த வகையான பாகுபாடும் குறுக்கீடும் இன்றி சுதந்திரமாக தங்கள் பண்பாட்டைப் பின்பற்றவும், மதத்தைக் கடைப்பிடிக்கவும், பிரச்சாரம் செய்யவும், மொழியைப் பயன்படுத்தவும் உரிம பெற்றவர்கள் ஆவர். சிறுபான்மை மக்கள் தங்களுக்கான அமைப்புகளை உருவாக்கவும் பராமரிக்கவும் உரிமை உண்டு. சிறுபான்மையினர் தங்கள் வரலாறு, மரபுகள், மொழி மற்றும் பண்பாடு பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளவும் ஒட்டுமொத்த சமுதாயம் பற்றி அறிந்து கொள்வதுற்கும் சிறுபான்மை மக்களுக்கு உரிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். ஏற்கனவே உள்ள மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்திற்கு இந்தப் பிரகடனம் எந்த வகையிலும் ஊறு விளைவிப்பதாக அமையக்கூடாது.

**<u>ஜான் ராவ்ஸ் சிறந்த படைப்புகள்:</u>** நீதி கோட்பாடு – 1971. நேர்மையான நீதி – 1985. அரசியல் தாராளாவியல் – 1993. மக்களின் சட்டம் – 1993.

வேறு நாடுகளில் இருந்து புலம் பெயர்ந்து வந்த மக்களுக்கும் சில அடிப்படை உரிமைகளை பல நாடுகள் உறுதி செய்துள்ளன. புகலிடம் கோரிய மக்கள், தஞ்சம் அடைந்த மக்கள், அகதிகளாக குடியேறியோர் என பலதரப்பட்ட மக்களுக்கும் உரிமைகள் உள்ளன. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் உறுப்பு நாடுகள் பலரும் அங்கீகரித்துள்ளனர்.

நாட்டில் இருக்கும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் மேம்பாட்டிற்காக முதல் ஆணையம் 1953ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. காகா காலேல்கர் அவர்களின் தலைமையில் அமையப் பெற்ற இதுவே சுதந்திர இந்தியாவில் முதல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்.

**<u>தாழ்த்தப்பட்டோருக்கான முன்னுரிமைகள்:</u>** சென்னை மாகாண அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கான நிதி உதவித்திட்டங்களை 1885இல் அறிவித்தது. சில இடங்களில் தாழ்த்தப்பட்டோருக்கான பள்ளிகளை அரசே திறந்தது. இதற்கிடையே, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திரிமென்கீரே என்பவர் செங்கல்பட்டு மாவட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் குறித்து ஒரு அறிக்கை தாக்கல் செய்தார். அதன் சுருக்கம் வருமாறு: தாழ்த்தப்பட்ட மக்கள் சமூக, பொருளாதார, கல்வி ரீதியாக மிகவும் மோசமடைந்துள்ளனர். அவர்களுக்கு நிலம் மறுக்கப்படுகிறது. வீடு கட்டிக் கொள்ளக் கூட அனுமதிக்கப்படுவதில்லை. கல்வி நிராகரிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் அடிமைகளாக விற்கப்படுகிறார்கள். ஏராளமான நிலம் வேண்டுமென்றெ தரிசாகப் போடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு வருவாய் குறைகிறது. இந்த நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிரித்து வழங்கலாம். அவரது அறிக்கையில் மேலும் பல பரிந்துரைகளும் இருந்தன. இந்த அறிக்கையை பரீசிலித்த அரசு 1892இல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 12 லட்சம் ஏக்கர் நிலத்தை பிரித்து வழங்கியது. இது பஞ்சமி நிலம் என அழைக்கப்பட்டது. இதே போல தாழ்த்தப்பட்டோரின் குழந்தைகளுக்கான பள்ளிகளை அரசு பஞ்சமர் பள்ளிகள் என அழைத்தது.

"பஞ்சமர்" என்பது. வைதீக மதத்தின்படி நான்கு வர்ணங்களுக்கும் வெளியே நிறுத்தப்பட்ட மக்களைக் குறிக்கும் பெயர் ஆகும். எனவே பஞ்சமர் பள்ளிகள் என அழைப்பதை ஆதிதிராவிடர் பள்ளிகள் என அழைக்கப்பட வேண்டும் என்று அயோத்திதாச பண்டிதர், ம.சிங்காரவேலர் போன்றோர் கூறினர்.

**<u>இந்திரா சகானி V இந்திய யூனியன் AIR 1993 SC 477</u>**: இது மண்டல குழு வழக்கு எனவும் அழைக்கப்படும். பிரதம மந்திரி மொரார்ஜிதேசாய் தலைமையில் 1979–ஆம் ஆண்டு ஜனவரியில் பி.பி.மண்டல் தலைமையில், சட்டபிரிவு 340–ன் படி பின்தங்கிய வகுப்பினருக்கான இரண்டாவது ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (SC/ST) மக்களை தவிர்த்து. இதர பிற்பட்ட வகுப்பினர் மொத்த மக்கள் தொகையில் 52% இடம் பெற்றுள்ளனர், அரசு பதவியில் 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்தால் தான் அது பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (SC/ST) இதர பிற்பட்ட வகுப்பினருக்கான (OBC) மொத்த 50 சதவிகித இட ஒதுக்கீடு ஆகும் என இந்த ஆணையம் பரிந்துரை செய்தது. மண்டல ஆணைய அறிக்கை சமர்பித்த பிறகு எந்த ஒரு நடவடிக்கையும் மற்றும் செயல்பாடும் இல்லை, பாராளுமன்றத்தில் இருமுறை 1982 மற்றும் 1983–ஆம் ஆண்டுகளில் மண்டல் ஆணையம் அறிக்கை மீது விவாதம் மட்டுமே நடைபெற்றது. 1990–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13–ஆம் தேதி வி.பி.சிங் அரசாங்கம் ஒரு ஆணையின் மூலம் மண்டல் ஆணையம் அறிக்கையின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு 27 சதவிகித இட ஒதுக்கீடு சமூகத்தில் பிற்பட்ட வகுப்பினருக்கு இந்திய அரசுப் பணிகளில் வழங்கியது.

1979–ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தால் பின் தங்கிய வகுப்பிற்கான இரண்டாவது ஆணையம் பி.பி.மண்டல் தலைமையில் உருவாக்கப்பட்டது. பின்தங்கிய மக்களின் சமூக, கல்வியினை மேம்படுத்த வழிமுறைகள், திட்டங்கள் பற்றிய பரிந்துரைகள் கேட்கப்பட்டன. இந்த ஆணையம் அரசு பதவிகளில் 27

சதவிகிதம் சமூக மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பின்தங்கிய வகுப்பை சேர்ந்த மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. 1980–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மண்டல் ஆணையம் அதன் அறிக்கையை உள்துறை அமைச்சராக இருந்த ஜெயில் சிங்கிடம் சமர்பித்தனர் அப்போது பி.பி.மண்டல் "இந்த அறிக்கையை தயார் செய்வதில் அதிகமான உழைப்பை கொடுத்துள்ளோம். மிக சரியாக கூறினால் நாம் உன்னதான சடங்கை செய்துள்ளோம்" என்று கூறினார். அடுத்த பத்தாண்டுகளுக்கு இந்த மண்டல் ஆணைய அறிக்கை உள்துறை அலுவலகத்திலேயே இருந்தது. அதை தேசிய முன்னணி அரசில் பிரதமராக இருந்த வி.பி.சிங் (1938–2001) 1990–ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தினார். அந்த நேரத்தில் மண்டல் ஆணைய பரிந்துரைகள் பெரும் விவாதங்களை நாடு முழுவதும் ஏற்படுத்தியது. தேசிய அரசியலில் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டன. சந்தர்ப்பவாத அரசியலை செய்வதாக விபி.சிங் குற்றஞ்சாட்டப்பட்டார். எந்த ஒரு பெரிய தேசிய கட்சியும் மண்டல் ஆணைய பரிந்துரைகளுக்கு ஆதரவாக இல்லை. சில அமைப்புகள் மற்றும் பிரிவினர் இந்த பரிந்துரைகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இரு தரப்பு வாதங்களையும் பதிநோரு நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு கேட்ட பின்பு உச்ச நீதிமன்றம் இந்த மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகள் செல்லும் என தீர்ப்பளித்தது. அந்த அமர்வின் பெரும்பான்மை நீதிபதிகள் இந்த 1992–ஆம் ஆண்டு தீர்ப்பை வழங்கினர். ஆனால் அதே சமயத்தில் பரிந்துரைகளில் சில மாற்றங்களை செய்ய அரசை உச்ச நீதிமன்றம் கேட்டுக்கொண்டது. 1993 செப்டம்பர் 8ஆம் தேதி பணியாளர் மற்றும் பயிற்சி துறையின் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன் பின் அறிக்கை பற்றிய சர்ச்சை முடிவிற்கு வந்து, திட்டம் தொடர ஆரம்பித்தது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. தகுதி இருப்பவை உயிர் வாழும் என்ற கோட்பாட்டை உருவாக்கியவர்

(அ) டெனிம் (ஆ) ருஸ்வெல்ட் (இ) டார்வின் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

2. அடிமை வாணிபம் என்பன

(அ) பெண்கள் கடத்தல் (ஆ) குழந்தைகள் கடத்தல் (இ) மனிதர்கள் கடத்தல் ஈ) அனைத்தும்

3. இனவெறி ஆட்சி என்பன

(அ) ஒரு இனம் மற்றொரு இனத்தை அடக்குதல்

(ஆ) கருப்பர் இனம் வெள்ளையர் இனத்தை அடக்குதல்

(இ) சிதரவரை

(ஈ) உயர்குடி சமூகம்

4. நாராயண குரு எந்த மாநிலத்தை சார்ந்தவர்?

(அ) ஆந்திர பிரதேசம் (ஆ) மேற்கு வங்காளம் (இ) மகாராஷ்டிரா (ஈ) கேரளா

5. வைக்கம் இயக்கத்தை தலைமை தாங்கி நடத்தியவர்

(அ) பெரியார் (ஆ) ராஜாஜி (இ) நேரு (ஈ) காந்தியடிகள்

6. தேசங்களின் வளம் பற்றிய ஓர் ஆய்வு என்ற நூலை எழுதியவர்

(அ) கீன்ஸ் (ஆ) ஆதம் ஸ்மித் (இ) ரூசோ (ஈ) போடின்

7. "தோட்டாக்களால் அல்ல வாக்குச் சீட்டினால்" என கூறியவர்

(அ) கேஸ்ட்ரோ (ஆ) மாவோ (இ) சுபாஷ் சந்திர போஸ் (ஈ) பகத் சிங்

8. இட ஒதுக்கீடு கொள்கையின் மூலம்

(அ) உயர்த்துதல் (ஆ) மேம்படுத்துதல் (இ) நீதி வழங்குதல் (ஈ) அனைத்தும்

9. சாதி அமைப்பு மிகப் பெரிய அளவில் இருந்த மதம்

(அ) கிறிஸ்துவ மதம் (ஆ) இந்து மதம் (இ) புத்த மதம் (ஈ) ஜைன மதம்

10. அம்பேத்கர் எந்த மதத்திற்கு மாறினார்

(அ) கிறிஸ்துவ மதம் (ஆ) இந்து மதம் (இ) புத்த மதம் (ஈ) ஜைன மதம்

11. ஒரு நியாயமான சமூகத்தில்

(அ) பாகுபாடு இருக்காது (ஆ) சாதிகள் இருக்காது

(இ) மதங்கள் இருக்காது (ஈ) மேற்கூறிய அனைத்தும்

12. மண்டல் ஆணையம் அமைக்கப்பட்டது

(அ) பட்டியலியனத்தவருக்காக (ஆ) பழங்குடியினருக்காக

(இ) இதர பிற்பட்ட வகுப்பினருக்காக (ஈ) பிற்பட்ட வகுப்பினருக்காக

13. கூற்று: பிராமணரல்லாதோர், ஆங்கிலேயர் காலத்தில் அரசு பதவிகளில் பணியமர்த்தப்பட்டனர்.

காரணம் : 1921–ம் ஆண்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் இயற்றப்பட்டது.

(அ) கூற்றும் காரணமும் சரி, கூற்றுக்கான சரியான விளக்கம்

(ஆ) இரண்டுமே சரி, ஆனால் காரணம் சரியான விளக்கம் இல்லை.

(இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு, காரணம் சரி

**விடைகள்:**

**<u>I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. (இ) டார்வின் 2. (ஈ) அனைத்தும் 3. (அ) ஒரு இனம் மற்றொரு இனத்தை அடக்குதல் 4. (ஈ) கேரளா 5. (அ) பெரியார் 6. (ஆ) ஆதம் ஸ்மித் 7. (ஈ) பகத் சிங் 8. (அ) உயர்த்துதல் 9. (ஆ) இந்து மதம் 10. (இ) புத்த மதம் 11. (அ) பாகுபாடு இருக்காது 12. (இ) இதர பிற்பட்ட வகுப்பினருக்காக 13. (அ) கூற்றும் காரணமும் சரி, கூற்றுக்கான சரியான விளக்கம்

## அலகு – 14 தமிழகத்தில் அரசியல் வளர்ச்சி

**<u>நிகழ்வுகளின் நாட்குறிப்பு:</u>**

1914 – திடாவிடர் கழகத்தின் தோற்றம்

1916 – தென்னிந்திய விடுதலைக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது

1917 – நீதிக்கட்சி

1919 – மாண்டேகு செம்ஸ் போஃர்டு சீர்திருத்தங்கள்

1925 – பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

1937 – ராஜாஜியின் தலைமையில் காங்கிரசு அமைச்சரவை உருவாக்கப்படுதல்

1937 – இந்திய எதிர்ப்புப் போராட்டம்

1944 – சேலம் மாநாட்டில் நீதிக் கட்சி திராவிடர் கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1949 – திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்தது.

1946 – சென்னை மாகாணத்தில் த.பிரகாசம் தலைமையிலான காங்கிரசு அரசாங்கம் அமைந்தது.

1947 – ஓ.பி.ராமசாமி முதலமைச்சரானார்

1949 – பி.குமாரசாமி ராஜா தலைமையிலான அமைச்சரவை அமைந்தது

1952 – முதல் பொதுத் தேர்தல் நடைப்றெ;றது

1956 – இந்தி – எதிர்ப்புப் போராட்டம்

1967 – சி.என்.அண்ணாதுரை தலைமையின் கீழ் தி.மு.க. அரசாங்கம் அமைக்கப்பட்டது

1969 – சி.என். அண்ணாதுரை காலமானார்

1969 – மு.கருணாநிதி மாநிலத்தின் முதலமைச்சரானார்

1972 – அ.இ.அ.தி.மு.க. எம்.ஜி.இராமச்சந்திரனால் (எம்.ஜி.ஆர்) நிறுவப்பட்டது.

1974 – மாநில தன்னாட்சித் தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது

தமிழ் ஆர்வலர்களால் எல்லிஸ் தமிழை நேசிப்பவராகவும், வள்ளுவரின் குறளை மிகவும் விரும்புவராகவும் பாராட்டப்படுகிறார். இவர் பிற தமிழ்ப் படைப்புகளையும் நேசிப்பவராக இருப்பினும், எல்லிசின் காலனிய மற்றும் மதப்பின்னணி அறியப்படவில்லை – பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ்

பிறப்பு–மே 7, 1814 கிளாடி, இங்கிலாந்து. இறப்பு: ஆகஸ்ட் 28, 1891, கொடைக்கானல், இந்தியா – ராபர்ட் கால்டுவெல்.

| **வ.எண்.** | **சென்னை மாகாணம் முதலமைச்சர்கள்** | **ஆண்டு** |
|---|---|---|
| 1. | அ.சுப்பராயலு | 1920 – 1921 |
| 2. | பனகல் ராஜா | 1921 – 1926 |
| 3. | பி.சுப்புராயன் | 1926 – 1930 |
| 4. | பி.முனுசாமி | 1930 – 1932 |
| 5. | போப்பிலி ராஜா | 1932 – 1937 |
| 6. | பி.டி.இராசன் | 1936 |
| 7. | கே.வி.ரெட்டி | 1937 |
| 8. | சி.இராஜாஜி | 1937 – 1939 |
| **குறிப்பு: தமிழ்நாடு அரசு மாநில ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்ட வருடம் 1946 அக்டோபர் 20 முதல் ஏப்ரல் 30)** | | |
| 9. | த.பிரகாசம் | 1946 – 1947 |
| 10. | ஓ.பி.இராமசாமி | 1947 – 1949 |
| **முதலமைச்சர்கள் (தேர்தல் நடைமுறைக்குப் பிறகு)** | | |
| 11. | பி.எஸ்.குமாரசாமி ராஜா | 1949 – 1952 |
| 12. | சி.இராஜாஜி | 1952 – 1954 |
| 13. | கு.காமராஜ் | 1954 – 1957 |
| 14. | கு.காமராஜ் | 1957 – 1962 |

| | | |
|---|---|---|
| 15. | கு.காமராஜ் | 1962 – 1963 |
| 16. | எம்.பக்தவச்சலம் | 1963 – 1967 |
| 17. | சி.என்.அண்ணாதுரை | 1967 – 1969 |
| 18. | மு.கருணாநிதி | 1969 –1971 |
| 19. | மு.கருணாநிதி | 1971 – 1976 |
| 20. | எம்.ஜி.இராமச்சந்திரன் | 1977 – 1980 |
| 21. | எம்.ஜி.இராமச்சந்திரன் | 1980 – 1984 |
| 22. | எம்.ஜி.இராமச்சந்திரன் | 1985 –1987 |
| 23. | ஜானகி இராமச்சந்திரன் | 1988 |
| 24. | மு.கருணாநிதி | 1989 – 1991 |
| 25. | ஜெ.ஜெயலலிதா | 1991 – 1996 |
| 26. | மு.கருணாநிதி | 1996 – 2001 |
| 27. | ஜெ.ஜெயலலிதா | 2001 – 2001 |
| 28. | ஓ.பன்னீர்செல்வம் | 2001 – 2002 |
| 29. | ஜெ.ஜெயலலிதா | 2002 – 2006 |
| 30. | மு.கருணாநிதி | 2006 – 2011 |
| 31. | ஜெ.ஜெயலலிதா | 2011 |
| 32. | ஓ.பன்னீர்செல்வம் | 2012 (இடைக்கால) |
| 33. | ஜெ.ஜெயலலிதா | மே 16, 2016 – டிசம்பர் 5 2016 |
| 34. | ஓ.பன்னீர்செல்வம் | டிசம்பர் 2016 – பிப்ரவரி 2017 |
| 35. | க.பழனிச்சாமி | பிப்ரவரி 2017 – தொடர்கிறார் |

சட்டமும் விதிமுறைகளும் மக்களுக்காகவே ஏற்பட்டவை. சட்டத்துக்காவும், விதிமுறைகளுக்காகவும் மக்கள் இல்லை. – பெருந்தலைவர் காமராஜ்.

1956–இல் மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் மூலமாக சென்னை மாகாணத்தில் இருந்து மலையாளப் பகுதிகள் கேரளாவிற்கும், தெலுங்கு பகுதிகள் ஆந்திரப் பிரதசத்திற்கும், கன்னடப் பகுதிகள் மைசூர் மாநிலத்திற்கும் தரப்பட்டது. இங்ஙனம் சென்னை மாகாணம் தமிழர்களின் மாநிலமாக உருவானது. காமராஜர் ஓர் நிலையான ஆட்சியைத் தந்தார்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. எந்த ஆண்டில் சென்னை மாகாணம் "தமிழ்நாடு" என பெயர் மாற்றப்பட்டது?

(அ) 1969 (ஆ) 1975 (இ) 1950 (ஈ) 1965

2. "சென்னை வாழ் மக்கள் சங்கம்" நிறுவப்பட்ட ஆண்டு

(அ) 1947 (ஆ) 1849 (இ) 1862 (ஈ) 1860

3. தமிழகத்தில் குலக்கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?

(அ) ராஜாஜி (ஆ) ராமசாமி (இ) காமராஜ (ஈ) கருணாநிதி

4. சென்னைப் பல்கலைக்கழகம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

(அ) 1885 (ஆ) 1947 (ஈ) 1857 (ஈ) 1965

5. மக்கள் தொகை அடிப்படையில் தமிழகம் இந்தியாவின் ----------வது பெரிய மாநிலமாக உள்ளது?

(அ) 15 (ஆ) 7 (இ) 3 (ஈ) 14

6. நீதிக்கட்சியின் முதல் தலைவர் யார்?

(அ) சுப்பராயலு (ஆ) தியாகராயர் (இ) பி.டி.ராஜன் (ஈ) பொப்பிலி ராஜா

7. "வைக்கம் வீரர்" என அழைக்கப்படும் தலைவர் யார்?

(அ) கு.காமராஜ் (ஆ) ராஜாஜி (இ) வரதாஜீலு (ஈ) ஈ.வெ.ரா.பெரியார்

8. தமிழகத்தில் சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர்

(அ) ராஜாஜி (ஆ) திரு.விக. (இ) காமராஜ் (ஈ) ஈ.வெ.ரா.பெரியார்

**9. பொருத்துக:**

அ. இந்தி எதிர்ப்பு போராட்டம் – 1] 1949

ஆ. தி.மு.க.வின் தோற்றம் – 2] 1937

இ. மாநில மறுசீரமைப்புச் சட்டம் – 3] 1919

ஈ. இரட்டையாட்சி – 4] 1956

10. "பிராமணரல்லாதோர் கூட்டறிக்கையினை" வெளியிட்டவர்

(அ) சி.நடேசனார் (ஆ) பி.தியாகராயர் (இ) டி.எம்.நாயர் (ஈ) பனகல் ராஜா

11. "தென்னிந்திய விடுதலைக் கூட்டமைப்பு" பிற்காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது?

(அ) நீதிக்கட்சி (ஆ) திராவிடர் கழகம் (இ) தமிழ் கழகம் (ஈ) திராவிடக் கட்சி

12. கூற்று: 1957 பொதுத்தேர்தலில் குளித்தலையில் வெற்றி பெற்று தமிழக சட்ட மன்றத்தில் உறுப்பினராக கருணாநிதி நுழைந்தார்.

காரணம்: கருணாநிதி தமிழக முதலமைச்சரானார்

அமைப்பு கூற்று (அ) என்றும் காரணம் (ஆ) எனவும் பின் வருவனவற்றுள் எது சரியானவை?

(அ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது

(ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது, ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை.

(இ) (அ) என்பது சரி ஆனால் (ஆ) சரியானது அல்ல

(ஈ) (அ) சரியில்லை ஆனால் (ஆ) சரியானது

13. கூற்று: ஈ.வெ.ரா.ராமசாமி சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

காரணம்: சுயமரியாதை இயக்கம் என்பது பிராமணர் அல்லாத சாதிகள் சமமான மனித உரிமைகளால் பெறும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட இயக்கமாகும்.

அமைப்பு கூற்று (அ) என்றும் காரணம் (ஆ) எனவும் பின் வருவனவற்றுள் எது சரியானவை?

(அ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது

(ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது, ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை.

(இ) (அ) என்பது சரி ஆனால் (ஆ) சரியானது அல்ல

(ஈ) (அ) சரியில்லை ஆனால் (ஆ) சரியானது

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (அ) 1969 2. 1852 3. (அ) ராஜாஜி 4. (ஈ) 1857 5. (ஆ) 7 6. (அ) சுப்பராயலு 7. (ஈ) ஈ.வெ.ரா.பெரியார் 8. (ஈ) ஈ.வெ.ரா.பெரியார் 9. அ–2, ஆ–1, இ–4, ஈ–3 10. (ஆ) பி.தியாகராயர் 11. (அ) நீதிக்கட்சி 12. (ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது, ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை 13. (ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டும் சரியானது, ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை

## அலகு – 15 தமிழக அரசியல் சிந்தனைகள்

**திருக்குறள் ஓர் மதச்சார்பற்ற நூல்**: திருக்குறளை நாம் படிக்க ஆரம்பித்த உடனேயே அது ஒரு மதச்சார்பற்ற நூல் என்ற எண்மையை நாம் அறியலாம். திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பௌத்த மதம், சீக்கிய மதம், ஜைன மதம், மற்றும் இந்து மதம் போன்ற பல மதங்கள் இருந்தன. அதைப்போலவே இறை மறுப்பாளர்களும் இருந்துள்ளனர். ஆனால் மதச்சார்பற்ற தன்மை எனும் கருத்தாக்கத்தை யாரும் அறிந்திருக்கவில்லை. வள்ளுவரே மத நம்பிக்கை உடையவர் தான். கடவுளைப் புகழ்ந்தே பத்து குறள்களை கொனண்ட ஒரு அதிகாரத்தை படைத்துள்ளார். அவரும் ஒரு மதத்தில் இருந்திருக்கலாம். ஆனால் எந்த ஒரு மதத்துக்கும் ஆதாரமாக இந்நூல் இல்லை. குறிப்பாக சொல்வதென்றால் எந்த மதத்தைப் பற்றியும் குறப்பிடவில்லை.

ஜாதி மதங்களைப் பாரோம் – உயர்

ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்

வேதிய ராயினும் ஒன்றே – அன்றி

வேறு குலத்தின ராயினும் ஒன்றே

நாம் சாதி மதங்களைப் பார்க்க வேண்டாம், இந்த நிலத்தில் வாழும் அனைத்து மனிதர்களும் ஒன்றே அவர்கள் எந்த சாதியினரை சார்ந்திருந்தாலும் அல்லது எந்த வேதத்தை போதிப்பவராக இருந்தாலும் நாம் அனைவரும் ஒன்றே அது மனிதகுலம் ஆகும். – சுப்ரமணிய பாரதியார்.

பாரதியாரின் "பாஞ்சாலி சபதம்" என்பது ஓர் தலைசிறந்த படைப்பாகும். இது இந்தியாவை திரௌபதியாகவும், ஆங்கிலேயரை கௌரவர்களாகவும் சுதந்திர போராட்ட வீரர்களை பாண்டவர்களாகவும், உருவகப்படுத்தியிருந்தார். திரௌபதியின் போராட்டம் மூலமாக அவர் இந்திய தாய் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுள்ளதை மறைமுகமாக வெளிப்படுத்தினார்.

"சுயராஜ்ய தினம்" கொண்டாடுவதற்காக 1908–ஆம் ஆண்டு சென்னையில் மிகப்பெரிய பொதுக் கூட்டத்திற்கு இவர் ஏற்பாடு செய்தார். "வந்தே மாதரம்" "எந்தையும் தாயும், ஜெய் பாரத்" போன்ற பாரதியாரின் கவிதைகள் அச்சிட்டு இலவசமாக மக்களுக்கு வினியோகிக்கப்பட்டன.

ஆணும் பெணும் சமமாகக் கருதப்பட்டால் மட்டுமே இவ்வுலகம் அறிவு மற்றும் புத்திக்கூர்மையில் சிறப்புறும் – பாரதியார்.

சுப்ரமணிய பாரதியார் (டிசம்பர்) பதினோராம் நாளில் 1882–ஆம் ஆண்டு எட்டயபுரம் என்னும் கிராமத்தில் பிறந்தார். இந்த ஊர் தமிழ்நாட்டில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. இவருடைய குழந்தை பருவ பெயர் சுப்பையா ஆகும். இவரது தந்தையார் சின்னசாமி, தாயார் லட்சுமி அம்மாள் ஆவார்.

பாரதியார் ஏழு வயதில் தமிழ்க் கவிதைகளை எழுத ஆரம்பித்தார். தன்னுடைய பதினோராம் வயதில் அவருடைய படைப்புகள் மற்றும் திறமைகள் கற்றறிந்த அறிஞர்களால் புகழப்பட்டது. பதினோராம் வயதில்

சுப்பையா அனைத்து பெருமக்கள் மற்றும் அறிஞர்கள் கூடியிருக்கும் சபையில் ஓர் சவால் விட்டார். யாரேனும் என்னுடன் எந்தவித முன்னறிப்பு மற்றும் பயிற்சி இல்லாமல் எந்த தலைப்பில் வேண்டுமானாலும் பேச தயாரா? என சவால்விட்டார். இந்த போட்டி எட்டையபுர அரசவையில் ஓர் சிறப்பு அமர்வாக எட்டயபுர அரசரின் தலைமையில் நடைபெற்றது. சவாலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பு "கல்வி" ஆகும். சுப்பையா பேச்சுப் போட்டியில் வென்றார். இது சுப்பையாவின் வாழ்க்கையில் ஓர் திருப்பு முனையாக அமைந்தது. இந்த மறக்க முடியாத நிகழ்வுக்கு பிறகு "எட்டயபுர சுப்பையா" என்று அழைக்கப்பட்ட அவர் "பாரதி" என்றும் பிற்காலத்தில் பாரதியார் என்றும் மரியாதையுடன் அழைக்கப்பட்டார். "பாரதியார்" என்ற பெயர் அனைவராலும் குறிப்பாக தேசவாதிகளாலும் உலகெங்கிலும் உள்ள கோடான கோடி தமிழ்ப் பற்றாளர்களால் மதியாதையுடனும் நினைவு கூறப்படுகிறது. ஜீன் 1897–இல் பாரதியாருக்கு பதினைந்து வயது நிரம்பியிருந்த போது செல்லமாளுடன் திருமணம் நடந்தது. இதன் பிறகு பாரதியார் காசிக்கு சென்றார். அங்கு தனது அத்தை குப்பாள் மற்றும் மாமா கிருஷ்ணசிவனுடன் இரண்டு ஆண்டுகள் இருந்தார். அங்கிருந்த போது தான் சமஸ்கிருதம், இந்தி மற்றும் ஆங்கில மொழியறிவினை பெற்றார். அலகாபாத் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் அவர் வெற்றி பெற்றார். காசியில் தங்கியிருந்தது பாரதியின் ஆளுமையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. முறுக்கு மீசை, சீக்கியர்களின் தலைப்பாகை மற்றும் வீறு கொண்ட நடையினை தனக்கே உரித்தானதாக்கினார். இத்தகைய வெளிப்படையான மாற்றங்களும் பாரதியாரிடம் ஏற்பட்டன.

விவேகானந்தரின் சீடரான சகோதரி நிவேதிதாவுடனான பாரதியாரின் சந்திப்பு பெண்களுக்கான உரிமைகள் பற்றி சிந்தனையைப் பாரதியாரிடம் ஏற்படுத்தின. இது சாதியப் பிரச்சனையிலிருந்து சுதந்திரம் வரைக்கும் மற்றும் ஆன்மீகம் வரை பாடுபட்டவர். இவர் தற்கால பெண்களுக்கு சக்தி என்கிற அடையாளத்தை ஏற்படுத்தியவர். குறிப்பாக நவீன பெண்களின் அதிகாரம், பலமான, சுதந்திரமான மற்றும் ஆண்களுக்கு சமமான பங்குதாரர் என்று பெண்களை குறிப்பிடுகிறார்.

"நாம் ஆயிரம் பிரிவுகளாக வேண்டுமானாலும் பிரிந்து இருக்கலாம். ஆனால், எப்படி இருந்தாலும் அந்நிய படையெடுப்பை நியாயப்படுத்த முடியாது"

பாரதியார் செப்டம்பர் பதினோராம் நாள் 1921–ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். ஆனால் இவரின் இறுதி சடங்கில் பதினான்கு நபர்கள் மட்டுமே பங்கேற்றனர். இதற்கு சாதியை விட்டு தள்ளி வைக்கப்படுவோம் என்பதுடன் ஆங்கிலேய அரசாங்கத்தின் அடக்கு முறையினால் ஏற்பட்ட பயமே காரணமாகும்.

ஈ.வெ.ராமசாமி என்ற இயற்பெயரைக் கொண்ட தந்தை பெரியார் ஈரோட்டில் செல்வச் செழிப்புள்ள வணிகக் குடும்பத்தில் 1879–இல் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே தனது குடும்பத்திலும், சுற்றியுள்ள சமுதாயத்திலும் நிலவிய மூட நம்பிக்கையை எள்ளி நகையாடிய பெரியார், தொடக்கத்தில் தீவிர அரசியலில் ஈடுபடவில்லை. ஆனாலும், ஈரோடு நகர்மன்றத்தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தார்.

பெரியார் ஓர் கடவுள் மறுப்புக் கொள்கையுடைய முற்போக்கான சமூக சீர்திருத்தவாதி.

பெரியாரின் படைப்புகள் மற்றும் மரபு. சராசரித் தமிழனுக்குப் பெரியார் ஓர் கொள்கையாக உள்ளார். சமூக சமத்துவம், சுயமரியாதை மற்றும் மொழியின் பெருமையை முன்னிறுத்தும் அரசியலை வழி நடத்தினார். ஓர் சமூக சீர்திருத்தவாதியாக அவர் சமூகம், பண்பாடு மற்றும் பாலின சமத்துவமின்மை போன்றவற்றில் கவனம் செலுத்தினார். அவர் மக்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் போது பகுத்தறிவின் அடிப்படையில் செயல்பட வலியுறுத்தினார். பெண்கள் அனைவரும் சுதந்திரமாக இருப்பதுடன் பிள்ளை பெற்றுக் கொடுப்பதற்காக எனும் நிலையை மாற்றி அவர்களுக்கு வேலை சுயமரியாதை இயக்கம், சடங்குகளற்ற திருமணங்களை ஊக்குவித்ததுடன் பெண்களுக்கு சொத்துரிமை மற்றும் விவாகரத்து செய்யும் உரிமைகளும் வழங்க வேண்டும் எனப்போராடினார். அவர் மக்கள் தங்களின் பெயருக்கு பின்

உள்ள சாதிப் பெயரை கைவிடுமாறும் அதனைக் குறிப்பிட வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்தார். 1930–களில் பட்டியல் இனத்தவரால் சமைக்கப்பட்ட உணவை பொதுக்கூட்டங்களின் பின்னர் சமபந்தியாக நடத்திக் காட்டினார். காலப்போக்கில் சாதி, மத அரசியல் வேறுபாடுகளைக் கடந்த பெருமதிப்புடன் "பெரியார்" நவீன தமிழகத்தின் தந்தையென அழைக்கப்படுகிறார்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. அறத்துப்பாடலில் வள்ளுவர் கூறுவது என்னவெனில்:

(அ) கருத்துக்கள் மற்றும் அறநெறிகள் (ஆ) பாடல்கள்

(இ) அரசியல் தத்துவஞானி (ஈ) மக்கள் நல அரசு

2. பொருட்பாலில் எத்தனை பகுதிகள் காணப்படுகின்றன?

(அ) 5 (ஆ) 4 (இ) 7 (ஈ) 6

3. பாரதியார் பதிப்பாசிரியாக இருந்த நாளிதழ்

(அ) இந்தியா (ஆ) இளம் இந்தியா (இ) கேசரி (ஈ) திராவிடன்

4. "பாஞ்சாலி சபதம்" என்ற நூலை எழுதியவர் யார்?

(அ) பாரதியார் (ஆ) திரு.வி.க (இ) கம்பர் (ஈ) பாரதிதாசன்

5. தமிழ்நாடு அரசியல் சிந்தனையாளர்களில் மிகச் சிறந்தவர் யார்?

(அ) பாரதியார் (ஆ) பெரியார் (இ) திருவள்ளுவர் (ஈ) மேற்கூறிய அனைவரும்

6. ஈ.வெ.ராமசாமி பிறந்த வருடம்

(அ) 1879 (ஆ) 1877 (இ) 1878 (ஈ) 1876

7. "சாதிய உணர்வுகளால், திராவிட இனம் மற்றும் திராவிடர்கள் என்ற ஆரியர்களிடம் அடிமையானார்கள்" என்று கூறியவர்

(அ) சி.என்.அண்ணாதுரை (ஆ) ஈ.வெ.ரா.பெரியார் (இ) சிங்கார வேலர் (ஈ) மறைமலைஅடிகள்

8. 1923ம் ஆண்டு முதல் இந்திய "மே தினம்" கூட்டத்தை சென்னையில் நடத்தியவர்.

(அ) பாரதியார் (ஆ) ஈ.வெ.ரா.பெரியார் (இ) ம.சிங்காரவேலர் (ஈ) மறைமலை அடிகள்

9. பெரியார் இறந்த வருடம்

(அ) 1971 (ஆ) 1972 (இ) 1973 (ஈ) 1974

10. பாரதியார் பிறந்த இடம்

(அ) எட்டயபுரம் (ஆ) திருச்சி (இ) திருநெல்வேலி (ஈ) சென்னை

11. சுயமரியாதை இயக்கத்தை தமிழ்நாட்டில் துவங்கியவர் யார்?

(அ) அண்ணாதுரை (ஆ) ஈ.வெ.ரா.பெரியார் (இ) மறைமலை அடிகள் (ஈ) ம.சிங்காரவேலர்

12. "தமிழ்நாடு என்பது தமிழர்களுக்கு மற்றும் திராவிட தேசம் என்பது தீராவிடர்களுக்கு" என்ற கூறியவர் யார்?

(அ) இளங்கோவடிகள் (ஆ) ஈ.வெ.ரா.பெரியார்

(இ) ம.சிங்காரவேலர் (ஈ) மறைமலையடிகள்

13. எந்த வருடம் ஆங்கிலேய இந்தியாவில் தொழிலாளர் பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட்டது?

(அ) 1914 (ஆ) 1924 (இ) 1926 (ஈ) 1928

14. எதற்காக பெரியார் இந்திய தேசிய கங்கிரசில் இருந்து விலகினார்?

(அ) அகிம்சை (ஆ) வர்ணாசிரம தர்மம்

(இ) தனி விருப்ப வித்தியாசத்தினால் (ஈ) இவைகள் ஏதும் இல்லை

15. கூற்று: பாரதியார் பாண்டிச்சேரிக்கு சென்று மறைந்து வாழ்ந்தார்

காரணம்: பாரதியார் "இந்தியா" என்ற தின நாளிதழின் மூலம் தேசியவாதத்தை விதைத்தார்.

அமைப்பு விளக்கம் (அ) என்றும் காரணம் (ஆ) எனவும் பின் வருவனவற்றுள் எது சரியானவை?

(அ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது

(ஆ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது. ஆனால் (ஆ) சரியான விளக்கம் இல்லை.

(இ) (அ) என்பது சரி ஆனால் (ஆ) சரியானது அல்ல

(ஈ) (அ) சரியில்லை ஆனால் (ஆ) சரியானது

**பொருத்துக:**

1. சோழர் – 1. மதுரை

2. சேரர் – 2. கொங்குநாடு

3. பாண்டியர் – 3. காஞ்சிபுரம்

4. பல்லவர் – 4. உறையூர்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (அ) கருத்துக்கள் மற்றும் அறநெறிகள் 2. (இ) 7 3. (அ) இந்தியா 4. (அ) பாரதியார் 5. (ஆ) பெரியார் 6. (அ) 1879 7. (ஆ) ஈ.வெ.ரா.பெரியார் 8. (இ) ம.சிங்காரவேலர் 9. (இ) 1973 10. (அ) எட்டயபுரம் 11. (ஆ) ஈ.வெ.ரா.பெரியார் 12. (ஆ) ஈ.வெ.ரா.பெரியார் 13. (இ) 1926 14. (ஆ) வர்ணாசிரம தர்மம் 15. (அ) (அ) மற்றும் (ஆ) இரண்டு சரியானது 16. : 1–4, 2–2, 3–1, 4–3

winmeen.com